பக்கங்கள்: 20 விலை:20 ரூபா

காலைக்கதிர்
Kalaikkathir

விழயல் 01 வள்ளுவர் ஆண்டு 2048 சித்திரை 15,வெள்ளிக்கிழமை 28.04.2017 கதிர் 173

இன்றும் நாளையும்
அக்ஷய திருதியை
நன்னாளில் தங்கத்தை
அள்ளிச் செல்ல வாரீர்

சன்சிகா நகையகம்
இல.114, பஸார் வீதி,
வவுனியா.
தொலைபேசி: 024 222 4028

தமிழர் தாயகம் ஸ்தம்பித்தது!

யாழ்ப்பாணம், ஏப்ரல் 28

தமிழர் தாயகப் பகுதிகள் எங்கும் நேற்றைய கடையடைப்பு - ஹர்த்தால் காரணமாக முற்று முழுதாக ஸ்தம்பிதம் அடைந்தது. வடக்கு, கிழக்குப் பகுதிகளில் தமிழ் பேசும் மக்கள் தங்களின் அரசியல் வேறுபாடுகளை மறந்து கடையடைப்புக்குப் பூரண ஒத்துழைப்பு வழங்கினர். பக்கம் 18 »»

இலங்கைக்கு ஜி.எஸ்.பி. வரிச் சலுகையைத் தடுக்கும் பிரேரணை ஜரோப்பிய நாடாளுமன்றில் தோல்வி!

கொழும்பு, ஏப். 28

இலங்கைக்கு ஜி.எஸ்.பி பிளஸ் வரிச்சலுகை மீண்டும் வழங்கப்படுவதைத் தடுப்பதற்காக நேற்று ஜரோப்பிய நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டிருந்த பிரேரணை தோற்கடிக்கப்பட்டது.

இலங்கை, மனித உரிமை உட்பட சில துறைகளில் போது மான முன்னேற்றத்தைக்காண் பிக்கவில்லை எனக் கூறி, ஜரோப்பிய நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் 52 றுப்பி னர்கள் இந்த யோசனையைக் கொண்டு வந்திருந்தனர்.

அந்த யோசனை தொடர் பான வாக்கெடுப்பு நாடாளு மன்றத்தில் நேற்று நடைபெற்ற போது, நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் 436 உறுப்பினர் கள் பிரேரணைக்கு எதிராக வாக் களித்தனர். பிரேரணைக்கு

பக்கம் 18 »»

கூட்டு எதிரணியிலிருந்து விலக கம்யூனிஸ்ட் கட்சி முஸ்தீபு?

கொழும்பு, ஏப். 28

கூட்டு எதிரணியின் பிரதான இடதுசாரிப் பங்காளிக் கட்சிக ளுள் ஒன்றான இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சி, கூட்டு எதிர ணியிலிருந்து வெளியேறத் தயாராகி வருவதாகச் செய்தி

பக்கம் 18 »»

ஜனாதிபதி சட்டத்தரணிகளாக சுமந்திரனும் வெலியமுனவும்!

விண்ணப்பிக்காமலேயே நியமனம்

கொழும்பு, ஏப். 28

ஜனாதிபதிசட்டத்தரணிகளாகப் புதிதாக நியமனம் பெறும் 25 பேரின் பெயர்ப் பட்டியல் நேற்று வெளியாகியுள்ளது.

அதில்

பக்கம் 18 »»

முல்லையில் ஹர்த்தாலுக்கு மத்தியிலும் மாபெரும் கவனவீர்ப்புப் போராட்டம்!

நேற்றையஹர்த் தாலுக்கு மத்தியி லும் பாதிக்கப்பட்ட மக் கள் மாபெரும் கவன வீர்ப்புப் போராட்டம் ஒன்றை முல்லைத் தீவில் மேற்கொண்ட னர்.

முல் லைத் தீவு மாவட்டம் முற்றாக.

பக்கம் 18 »»

எங்கட சனங்கள் உந்த விசயத்திலை எண்டாலும் ஒன்றுபட்டு நிண்டது சந்தோசம் பாருங்கோ....!

அட்சய திருதியை நாள் வியாபாரத்துக்கு மத்தியிலும் மாற் நகர் வர்த்தகர்கள் கடைகளைப் பூட்டி ஹர்த்தாலுக்கு ஆதரவு....!

50 வருட காலமாக யாழ்குடாநாட்டு மக்களின் நன்மதிப்பைப்பெற்ற உங்கள் அபிமான

மைதிலி நகை மாடம்

தங்கத்திருநாளாம் அக்ஷயதிருதியை கொண்டாட்டம்

இன்றும் நாளையும்
விசேட சலுகைகள்

1ஆம்,
2ஆம்,
3ஆம்,
பரிசுகள்
தங்கநாணயங்கள்
மேலும் 10 அதிரடி பரிசுகள்

இம்மாதம் 29.04.2017 ஆம் திகதி வரை எம்மிடம் நகைவாங்கும் அனைத்து வாடிக்கையாளர்களின் சிட்டைகளும் குலுக்கல் முறையில் தெரிவு செய்யப்படுபவர்களுக்கு விசேட பரிசில்கள் காத்திருக்கின்றன.

இரண்டு பவுணுக்குமேல் கொள்வனவு செய்யும் அனைவருக்கும் பவுண்காசு அன்பளிப்பாக வழங்கப்படும்.

இல.89V, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். தொ.பே: 021 222 7902
யாழ் மைதிலி ஜூவலர்ஸ்-இல.79I, செட்டியார்தெரு,கொழும்பு 11. தொ.பே: 011 239 623

காலைக்கதிர் Kalaikkathir

வடக்கு, கிழக்கில் நேற்றைய ஹர்த்தாலின் போது....

யாழ்ப்பாணம்

சாவகச்சேரி

கிளிநொச்சி

மன்னார்

மட்டக்களப்பு

திருகோணமலை

முல்லைத்தீவு

வவுனியா

புதிய அரசமைப்புக்கு தமிழர் தரப்பு விட்டுக்கொடுக்கத் தயாராகவேண்டும்

தந்தை செல்வா நினைவு நிகழ்வில் ஜெயம்பதி விக்கிரமரட்ண



(எஸ்.நிதர்ஷன்)

தமிழர் தரப்புடன் இணக்கப் பாட்டுடன் கூடிய அரசமைப்பே வருவதற்கான சாத்தியங்கள் அதிகம் உள்ளன. எனவே, தமிழர் தரப்பு விட்டுக்கொடுப்பிற்கும், இணக்கப்பாட்டுக்கும் தயாராக இருக்கவேண்டும் என இலங்கை அரசால் நியமிக்கப்பட்ட அரசமைப்புக் குழுவின் தலைவரான ஜெயம்பதி விக்கிரமரட்ண தெரிவித்தார்.

தந்தை செல்வாவின் 40 ஆவது நினைவு தினம் நேற்று முன்தினம் யாழ்.பொது நூலகத்துக்கு அருகில் அமைந்துள்ள தந்தை செல்வா சதுக்கத்தில் நடைபெற்றது. இதன்போது நினைவுப் பேருரை ஆற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில் :-

தமிழ் மக்களுக்கான அதிகாரப் பரவலாக்கலை வழங்காமல் தென்னிலங்கை மக்கள் அதற்குஎதிர்ப்புத்தெரிவித்தமையால்தான் சிறுபான்மையினராகிய தமிழர்கள் தனிநாடு கோருவதற்குக் காரணமாக அமைந்தது. கூட்டாட்சியைத் தமிழர்கள் முதலில் கோரவில்லை. கண்டிய சிங்களவர்கள் தமக்கு அதிகாரம் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும் எனத் தமிழர்களும் எஸ்.டபிள்யு.ஆர்.டி.பண்டாரநாயக்கவும் அதிகாரப் பரவலாக்கலையே கோரினர்.

சமஷ்டிக் கோரிக்கை

இலங்கையில் தமிழர்களுக்கான சமஷ்டிக் கோரிக்கையை இலங்கை பொதுவுடமைக் கட்சியே முதலில் கோரியது. எனினும், தென்னிலங்கை அந்தக் கோரிக்கைகளை அப்போது ஏற்றுக்கொள்ள தயாராக இருந்திருக்கவில்லை.இதனால் தான் தந்தை செல்வா 1949 ஆம் ஆண்டு வெளியிட்ட அறிக்கை ஒன்றில், "நாங்கள் இலங்கையின் பங்காளிகள் என்ற உணர்வு தமிழ் மக்களுக்கு இருக்க வேண்டும். ஆனால், அந்த உணர்வு எமக்கு இல்லை." எனத் தெரிவித்திருந்தார்.

அப்போதுஆட்சியில்இருந்த தமிழர்ஜக்கியமுன்னணி,தமிழ் மக்களுக்கான அதிகாரப்பரவலாக்கல் தொடர்பில் ஓர் இணக்கப்பாட்டுடன் வந்திருந்தால் பின்னர் நாட்டில் ஏற்பட்டிருந்த அனர்த்தங்கள் ஏற்பட்டிருக்கா. வட்டுக்கோட் டைத் தீர்மானத்திற்கும் அவசியம் ஏற்பட்டிருக்காது. தற்போதைய சூழ்நிலையைப் பொறுத்த வரையில் மாகாண சபைகளுக்குக் கூடுதலான அதிகாரங் களை வழங்கலாம்என்றுஆலோசித்து வருகின்றோம்.

தெற்கு மக்கள் அச்சம்

மாகாண சபைகளுக்கு அதிக அதிகாரங்களை வழங்கினால் பிரிவினையைக் கோருவார்கள் எனத் தெற்கு மக்கள் அஞ்சுகின்றார்கள். அந்த அச்சத்தையும் நாங்கள் எதிர் கொண்டு பயணிக்க வேண்டிய கட்டாயம் உள்ளது. தற்போது அரசமைப்புத் தொடர்பில் சிறப்பான நீதிமன்றப் பொறிமுறை ஒன்றையும் முன்னெடுத்துவருகின்றோம். இந்த நீதிமன்றமே அரசமைப்பில் உள்ளடக்கப்பட வேண்டிய விடயங்கள் தொடர்பில் ஆராயவுள்ளது.

மகத்தான சந்தர்ப்பம்

நாட்டில் ஒரு தீர்வை எட்டுவதற்குத் தற்போது மகத்தான சந்தர்ப்பம் உள்ளது. இந்தச் சந்தர்ப்பம் கிடைப்பதற்கு மீண்டும் எத்தனை தசாப்தம் செல்லும்என்றுதெரியவில்லை. இரு பிரதான கட்சிகள் இணைந்து ஆட்சி அமைத்துள்ளன.

குறிப்பாக ஐக்கிய தேசியக் கட்சி 106 ஆசனங்களுடனும் சிறிலங்கா சுதந்திரக் கட்சி 93 ஆசனங்களுடனும் உள்ளன. இதில் அரைவாசி உறுப்பினர் கள்எதிர்த்தரப்பாகச்செயற்பட்டு வருகின்றனர். இந்த நிலையில் இரு கட்சிகளும் இணைந்திருந் தால் தான் பெரும்பான்மை யாகச் செயற்பட முடியும்.

ஆகையால், அரசமைப்பில் ஒரு மாற்றத்தைக் கொண்டு வருவதற்குக் கூடிய வலு இந்த அரசிடமேஉள்ளது. தமிழ்த்தரப் புடனான இணக்கப்பாட்டுடன் கூடிய அரசமைப்பே வருவதற் கான சாத்தியங்கள் உள்ளன. புதிய அரசமைப்புத் தொடர்பில் மக்களிடையே மாறுபட்ட கருத் துக்கள் உள்ளன எனக் கூறப் படுகின்றன. கூடுதலாகத் தென் னிலங்கை மக்கள் எதிர்ப்பார் கள் எனக் கூறுகின்றார்கள்.

கருத்துக் கணிப்பில் தென் னிலங்கை மக்கள் புதிய அரச மைப்பிற்கு ஆதரவு வழங்கு வார்கள் என்ற நம்பிக்கை எமக் குண்டு. பத்து வருட மஹிந்த வின் ஆட்சி சிங்கள மக்களு டையமனங்களைச்சிதைத்துள் ளது. இருந்தாலும், சிங்கள மக் கள்எமக்குஆதரவுதருவார்கள். தந்தை செல்வா இணக்கத்திற் கும்விட்டுக்கொடுப்பிற்கும்தயா ராகஇருந்தார். ஆகவே, இதனை நீங்களும் கருத்தில் எடுங்கள். - எனத் தெரிவித்தார். (மு)

நெடுந்தீவில் நாளை மின் தடை

யாழ்ப்பாணம், ஏப்.28

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க் கங்களின் கட்டமைப்பு பராமரிப்பு வேலைகளுக்காக நாளை சனிக்கிழமை காலை 9 மணியிலிருந்துமாலை6மணிவரை யாழ். பிரதேசத்தில் நெடுந்தீவுப் பகுதியில்மின்சாரம்தடைப்படும் என மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார். (இ

பிரபல நடிகர் வினுசக்கரவர்த்தி காலமானார்

சென்னை, ஏப். 28

நடிகர் வினுசக்கரவர்த்தி உடல் நலக் குறைவால் சென்னையில் நேற்று வியாழக் கிழமைகாலமானார். அவருக்கு வயது 74.

தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம் உள்ளிட்ட பல் வேறு மொழிகளில் 1002 படங் களில் நடித்தவர் வினு சக்கரவர்த்தி. இவர் நடிப்பில் வெளியான 'குருசிஷ்யன்', 'அண்ணாமலை', 'அருணாசலம்', 'நாட்டாமை', 'மாப்பிளை கவுண்டர்', 'நினைத்தேன் வந்தாய்', 'ஜெமினி', 'முனி', 'தேசிங்கு ராஜா', 'வாயை மூடி பேசவும்' போன்ற படங்கள் குறிப்பிடத் தக்கவை.

வினு சக்கரவர்த்தி நடித்த முதல் படம் 'கரும்பு வில்'. 500வது படம் 'சின்னத்தாயி'. ராகவா லாரன்ஸ் இயக்கிய 'முனி' இவரது ஆயிரமாவது படம்.

வினுசக்கரவர்த்தியின்மறைவுக்கு திரையுலக பிரபலங்கள் பலரும் தங்கள் ஆழ்ந்த இரங்கலைத்தெரிவித்துவருகின்றனர்.

ஹர்த்தாலுக்கு மத்தியில் ஆலயப் பொதுக்கூட்டம்

மக்கள் பெரும் அதிருப்தி, விசனம்

கிளிநொச்சி, ஏப்.29

கிளிநொச்சி - கந்தசுவாமி ஆலயப் பொதுச்சபைக் கூட்டம் நேற்று நடத்தப்பட்டமை தொடர்பாகக் காணாமலாக்கப்பட்டோரின் உறவினர்கள் அதிருப்தியும், கவலையும் வெளியிட்டுள்ளனர்.

தமிழர் தாயகம் எங்கும் நேற்று முழுக் கடையடைப்பு - ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்ட நிலையில், காணாமலாக்கப்பட்டோரின் உறவினர்கள் கிளிநொச்சி கந்தசுவாமி ஆலயத்திற்கு முன்பாகக் கதறி அழுதவாறு கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த நிலையிலும் மேற்படி கூட்டம் இடம்பெற்றிருக்கின்றது.

பொது அமைப்புகளின்பிரதிநிதிகள்மற்றும்ஆலயப்பொதுச்சபை உறுப்பினர்களில் ஒரு பகுதியினரின்எதிர்ப்பையும்மீறி மேற்படி பொதுச்சபை கூட்டத்தை நடத்தியமை காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் மற்றும் பொது அமைப்புக்களின் மத்தியில் கடும் விசனத்தை ஏற்படுத்தியுள்ளது.

(மு-70)

ஹர்த்தால் தினமான நேற்றைய தினம்

தேநீர்ச்சாலைகள் பூட்டு; மதுபானசாலைகள் திறப்பு

தமிழர் தாயகம் எங்கும் நேற்று ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டபோது சுன்னாகம் மற்றும் பருத்தித்துறை நகரங்களில்உள்ளமதுபானசாலைகள் திறக்கப்பட்டு வியாபாரம் நடைபெற்றமை பொதுமக்களிடையே விசனத்தை ஏற்படுத்தியுள்ளது.

சுன்னாகத்திலுள்ள மதுபான விற்பனை நிலையம் ஒன்று நேற்றுப் பகல் திறக்கப்பட்டு வியாபாரம் நடைபெற்றதை அறிந்த மதுப் பிரியர்கள் அங்கு குழுமத் தொடங்கினர். அதனால் விற்பனையும் அமோகமாக நடைபெற்றது எனக் கூறப்படுகின்றது.

இதேபோன்று பருத்தித்துறையில் உள்ள மதுபான விற்பனை நிலையம் ஒன்றும் திறக்கப்பட்டு வியாபாரம் நடைபெற்றது. முன்னர் இடம்பெற்ற ஹர்த்தாலின்போதும் இந்த மதுபான நிலையம் திறக்கப்பட்டு வியாபாரம் நடைபெற்றது எனப் பிரதேச மக்கள் தெரிவித்தனர்.

பாதிக்கப்பட்ட தமிழ் மக்களின் வலிகளை உணர்ந்து, நேற்றைய ஹர்த்தாலுக்கு ஆதரவு தெரிவித்து மருந்தகங்கள், உணவகங்கள் என்பனகூட பூட்டப்பட்டிருந்த நிலையில், மேற்படிசிலமதுபானசாலைகள் திறக்கப்பட்டமை தொடர்பாக மக்கள் கடும் விசனம் வெளியிட்டுள்ளனர். (மு-40)

ஹர்த்தாலுக்கு ஆதரவு தெரிவித்து மாகாண சபை அமர்வு ஒத்திவைப்பு

கூடிச் சில நிமிடங்களில் கலைந்த உறுப்பினர்கள்

(எஸ்.நிதர்ஷன்)

காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பான உண்மையை வெளிப்படுத்தக்கோரியும் படையினரின் ஆக்கிரமிப்பிலுள்ள காணிகளை மீள வழங்கக் கோரியும் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் நடத்தப்பட்டு வரும் போராட்டங்களுக்கு வலுச்சேர்க்கும் வகையில் நேற்று நடைபெற்ற பூரண ஹர்த்தாலுக்கு அதரவு வழங்கும் வகையில் வடமாகாண சபையின் நேற்றைய 91ஆவது அமர்வு ஒத்திவைக்கப்பட்டது.

நேற்றுக்காலை 10 மணிக்கு அவைத்தலைவர் சீ.வி.கே. சிவஞானம் தலைமையில் சபை கூடியது. இதன்போது அவைத் தலைவர், வடக்கு, கிழக்கு மாகாணங்களில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பான உண்மையைக் கண்டறிந்து பொறுப்புக் கூற வேண்டும் எனக் கோரி மக்கள் போராட்டங்களை நடத்தி வருகின்றனர்.

அதற்கு வலுச் சேர்க்கும் வகையில் வட, கிழக்கு மாகாணங்களில் இன்றைய தினம் (நேற்று) பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டுவருகின்றது. அதற்கு வடமாகாண சபை தனது பூரணமான ஆதரவை வழங்குகின்றது. எனவே, இன்றைய தினம் (நேற்று) நடைபெற விருந்த மாகாண சபையின் 91ஆம் அமர்வைநாம்ஒத்திவைக்கின்றோம். அதற்கு முன்னர் இந்தப் பிரச்சினைகள்தொடர்பாகமுதலமைச்சர் உரையாற்றுவார். அதைத் தொடர்ந்து சபை ஒத்திவைக்கப்படும் எனக் கூறியிருந்தார்.

அதன்படி, முதலமைச்சர் உரையாற்றியதன் பின்னர் சபை ஒத்திவைக்கப்பட்டது. மேலும் நேற்றைய அமர்வில் எந்த விடயங்களும் எடுத்துக் கொள்ளப்படாமல் 10 மணிக்கு கூடிய சபை சில நிமிடங்களின் பின்னர் ஒத்திவைக்கப்பட்டது.

முதலமைச்சரின் உரை 19 ஆம்பக்கத்தில்) (மு)

நமது பார்வை

உண்மை – நேர்மை – பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, editor@kalaikkathir.lk
தொலைநகல் (fax): 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600

போராட்டங்களும் பிரதிபலிப்பும்

இனங்களுக்கு இடையில் நல்லிணக்கத்தையும் புரிந்துணர்வையும் ஏற்படுத்தி, இந்த நாட்டில் புரையோடிப் போயிருக்கும் இனப் பிரச்சினைக்கு நீதி, நியாயமான தீர்வைக் காண்போம் என்ற முன்னறிவிப்போடு அரசுக்கட்டுக்கு ஏறிய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் ஆட்சிக் காலம் ஏறத்தாழ இரண்டரை ஆண்டுகளைக் கடந்து விட்டது. அவரும் அவரது பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் சேர்ந்து அமைத்த தற்போதைய நல்லாட்சி அரசின் பதவிக் காலமும் கூட இரண்டு வருடங்களை எட்டப் போகின்றது. எனினும், உருப்படியாக எதுவும் நடந்ததாக இல்லை.

இனி என்ன என்ற கேள்வி எழுந்துள்ள நிலையில்தான் தமது அரசு எதிர்கொள்ளப் போகும் நெருக்கடிகளைச் சமாளிப் பதற்கான புதிய தந்திரோபாய மார்க்கங்களை அரசுத் தலைமை நாட முனைந்திருக்கின்றது.

முன்னாள் இராணுவத் தளபதியும், அமைச்சரும், பீல்ட் மார்ஷலுமான சரத் பொன்சேகாவுக்கு இராணுவப் பதவி ஒன்றை வழங்குவது குறித்து அமைச்சரவையில் ஆராயப்பட்டிருக்கின்றமையை, இத்தகைய புதிய தந்திரோபாய மார்க்கங்களைத் தேடும் அரசின் எத்தனமாகவே பார்க்க வேண்டியிருக்கின்றது.

நியாயமான பிரதிபலிப்புகளை நல்லாட்சி அரசிடமிருந்து எதிர்பார்த்துக் காத்துக் கிடந்த தமிழ் மக்கள், தம்பாட்டில் வீதிக்கு இறங்கிவிட்டனர்.

ஆங்காங்கே நீதி கோரும் போராட்டங்கள் நாள்கள் நீண்டும் தீவிரம் குறையாமல் தமிழர் தாயகம் எங்கும் தொடர்கின்றன. அவை பரந்து விரிவடையும் சூழலே காணப்படுகின்றது. காணாமலாக்கப்பட்ட உறவுகளைத் தேடும் போராட்டம், நில மீட்புப் போராட்டம், அரசியல் கைதிகளை விடுவிக்க வலியுறுத்தும் போராட்டம், இழைக்கப்பட்ட அநீதிகளுக்குக் காரணமானவர்களைச் சட்டத்தின் முன் நிறுத்தி, உரிய நடவடிக்கை எடுக்கும் விதத்திலான - பொறுப்புக் கூறலுக்கான - போராட்டம் என்று தமிழர் தாயகம் எங்கும் போராட்ட அனல் வீசுகின்றது. அதன் வெம்மைகளைத் தமிழர் தாயகம் எங்கும் நேற்று ஒருமித்த குரலில் அனுஷ்டிக்கப்பட்ட ஹர்த்தால் - கடையடைப்பு - நிரூபித்து நிற்கின்றது.

மறுபக்கத்தில் தென்னிலங்கையிலும் போராட்டத் தீவிரம் சூடு பிடித்திருக்கின்றது.

நாடு முழுவதிலும் வேலையில்லாப் பட்டதாரிகள் போராட்டம் என்றால், மறுபக்கத்தில் திடீர் திடீரென பல தரப்புகளும், தொழிற் சங்கங்களும் வேலைநிறுத்தப் போராட்டங்களில் குதித்து விடுகின்றன. இதனால், அரசுக்கு தீராத தொல்லை. 'நித்திய கண்டம்; பூரண ஆயுசு' என்ற நிலைமையிலேயேதான் தற்போதைய அரசு இழுபறிப்படுகின்றது.

ஒருநாள் மருத்துவர்கள் என்றால், அடுத்த நாள் ரயில்வே ஊழியர். இன்னொரு நாள் பெற்றோலியச் சுத்திகரிப்பு ஊழியர்கள் என்றால், பிறிதொரு நாள் மருத்துவ மாணவர்கள். மாறி மாறி வேலை நிறுத்தங்களும், போராட்டங்களும். தாங்க முடியாத நிலைக்கு நல்லாட்சி அரசு தள்ளப்பட்டு விட்டது என்பதை அரசின் அமைச்சரவைப் பேச்சாளர் ராஜித சேனாரத்னவே ஒப்புக்கொண்டிருக்கின்றார்.

"...அரசுக்கு எதிரான அரசியல் ரீதியான போராட்டங்கள், ஆர்ப்பாட்டங்கள் அதிகரித்துள்ளன. எந்தவொரு விடயம் தொடர்பிலும் பேச்சு நடத்தாமல், திடீர், திடீரென ஆர்ப்பாட்டங்களையும், வேலைநிறுத்தப் போராட்டங்களையும் நடத்துகின்றனர். பேச்சு நடத்தித் தீர்த்துக்கொள்ளப்படக் கூடிய விடயங்களுக்குக் கூட ஆர்ப்பாட்டங்களையும், வேலை நிறுத்தங்களையும் நடத்தி மக்களை அசௌகரியங்களுக்கு உட்படுத்துகின்றார்கள். இந்த நிலைமையைத் தொடர்ந்து அனுமதிக்க முடியாது." - என்று பெரும் ஆதங்கத்தோடு கூட்டிக்காட்டியிருக்கின்றார் அவர்.

வடக்கிலும், தெற்கிலும் தற்போது நடக்கும் போராட்டங்களுக்கு இடையில் ஒரு வித்தியாசம் உண்டு.

வடக்கு, கிழக்கில் - தமிழர் தாயகத்தில் - நேற்று நடத்தப்பட்ட ஹர்த்தால் இந்தத் தாயக மக்கள் தம்பாட்டில்கூடி, தனித் தனியாகக் கலந்துரையாடி, ஒட்டுமொத்தமாக எடுத்த நடவடிக்கை. யாரையும் வற்புறுத்தி, பலவந்தப்படுத்தி, யாருக்கும் எதிராக இது முன்னெடுக்கப்பட்டதல்ல. தவிரவும், வடக்கு, கிழக்கில் தற்போது நடை பெறும் போராட்டங்கள் யாரையும் - பாதிப்பவையல்ல. எந்த வேலையையும் - செயற்பாட்டையும் - முடக்கும் நடவடிக்கையும் அல்ல.

ஆனால், தென்னிலங்கையில் நிலைமை வேறு. மக்களின் அன்றாட வாழ்க்கை முறைகளை முடக்கும் விதத்திலேயே அங்கு போராட்டங்கள் நடக்கின்றன.

ஒரு காலத்தில் முழு இலங்கைத் தீவையுமே ஸ்தம்பிக்கச் செய்யும் விதத்தில் மிக அற்புதமான - உன்னதமான - உயிரிய - அளப்பரிய - தியாகங்களோடு போராட்டம் நடத்திய தமிழர் மண்ணில், இன்று அஹிம்சை வழிப் போராட்டமே - சத்தியப் பாதையிலான போராட்டமே - தொடர்கின்றது.

இத்தகைய போராட்டங்களை அடக்கும் நோக்கத்தில் பாதுகாப்புத் துறையில் ஓர் உயர் பதவியைக் கொடுத்து பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகாவை வடக்கு, கிழக்கு உட்பட போராட்டம் நடைபெறும் இடம் எங்கும் பொறுப்பானவராக நியமித்து அனுப்பி வைக்கத் தீர்மானிக்கப்பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் மாநாட்டில் ஒரு செய்தியாளர் கேள்வி எழுப்பிய மாதிரி, இது மற்றொரு கோட்டாபய ராஜபக்ஷவை உருவாக்கும் முயற்சியா என்ற சந்தேகம் எழுவது தவிர்க்க முடியாததே.

மக்கள் கருத்தறிவுக்கு முன்னர் உள்ளூராட்சி சபைத் தேர்தலே!

அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவிப்பு

உள்ளூராட்சி சபைத் தேர்தலே இந்த வருடம் முதலில் நடத்தப்படும். மக்கள் கருத்தறியும் வாக்கெடுப்பு முதலில் நடத்தப்படமாட்டாது.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொதுச்செயலாளரும் அமைச்சருமான மஹிந்த அமரவீர இவ்வாறு தெரிவித்துள்ளார்.

மக்கள் கருத்தறியும் வாக்கெடுப்பை நடத்துவது குறித்து ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி இதுவரை எவ்வித பேச்சும் நடத்தவில்லை எனவும் அவர் கூறியுள்ளார்.

கொழும்பில் உள்ள ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

உள்ளூராட்சி சபைத் தேர்தலை துரிதமாக நடத்த வேண்டும் என்பதில் நாங்கள் தெளிவாக இருக்கின்றோம்.

கடந்த 25 ஆம் திகதி நடந்த அமைச்சரவைக் கூட்டத்தில் உள்ளூராட்சி சபைத் தேர்தலை நடத்துவது தொடர்பாக கலந்துரையாடினோம்.

புதிய தேர்தல் முறையின் கீழ் உள்ளூராட்சி சபைத் தேர்தல் நடத்தப்படும் எனவும் அமைச்சர் அமரவீர குறிப்பிட்டுள்ளார்.

எனுஎப்படி இருந்தபோதிலும் இந்த ஆண்டின் முதல் தேர்தலாக புதிய அரசமைப்புச் சட்டம் தொடர்பான மக்கள் கருத்தறியும் வாக்கெடுப்பே நடத்தப்படும் என்று அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

துப்பாக்கிச் சூட்டில் சந்தேகநபர் உயிரிழப்பு!

அம்பாந்தோட்டை பகுதியில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன் இரு பொலிஸ் அதிகாரிகள் காயமடைந்துள்ளனர்.

கடந்த வருடம் குரு நாகல் - மாஸ்பொத பகுதியில் பொலிஸ் அதிகாரி ஒருவர் கொல்லப்பட்டசம்பவத்துடன் தொடர்புடைய பிரதான சந்தேக நபரே துப்பாக்கிச்சூட்டுச்சம்பவத்தில் உயிரிழந்துள்ளார்என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் நேற்று பிற்பகல் இடம் பெற்றுள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். சம்பவத்தில் டீகே.சமிந்தஎன்றழைக்கப்படும் மாத்தறை ரொசான் என்பவரே உயிரிழந்துள்ளார்என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சந்தேகநபரைக் கைது செய்வதற்காக கொழும்பில் இருந்து அனுப்பப்பட்ட சிறப்பு பொலிஸ் குழு மீது சந்தேகநபர் துப்பாக்கிப் பிரயோகம் செய்துள்ளார் என்றும்இதனையடுத்து, பொலிஸ் குழுக்களுக்கும் சந்தேக நபருக்கும் இடையில் பரஸ்பர துப்பாக்கி பிரயோகம் இடம் பெற்ற போது, சந்தேக நபர் பொலிஸாரின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகிப்பலியாகியுள்ளார் என்றும் கூறப்படுகின்றது. (ஐ)

ஐ.நா. சிறப்பு நிபுணர் இலங்கை வருகிறார்!

கொழும்பு, ஏப்.28

உண்மை, நீதி தொடர்பிலான ஐக்கிய நாடுகளின் சிறப்பு நிபுணர் பாப்லோ டி கிரீப், இலங்கைக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளார்.

பாப்லோ டி கிரீப், இந்த ஒக்ரோபர் மாதம் 10 ஆம் திகதி வருகைதரவுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது

இவர் 13 நாள்கள் உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டு இலங்கைக்கு வருகை தரவுள்ளார் என்று ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகளுக்கான உயர்ஸ்தானிகராலயம் தெரிவித்துள்ளது.

2012 ஆம் ஆண்டு மே மாதம் முதலாம் திகதி உண்மை, நீதி தொடர்பிலான ஐக்கிய நாடுகளின் சிறப்பு நிபுணராக பாப்லோ டி கிரீப் நியமனம் பெற்றார்.

இலங்கை விஜயத்தின் போது, மனித உரிமை மீறல்கள் மற்றும் நீதித் துறை தொடர்பான நல்லிணக்கச் செயல்முறைகள், வன்முறைகள் தொடர்பில் கலந்துரையாடல்கள் மேற்கொள்ளவுள்ளார் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. (ஐ)

மாமனிதர் 'தராகி' சிவராமின் 12 ஆம் ஆண்டு நினைவேந்தல்

நாளை கிளிநொச்சி நகரில்

மாமனிதர் தராகி சிவராமின் (தர்மரட்ணம் சிவராம்) 12 ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு இந்த முறை கிளிநொச்சி நகரில் நடத்த ஏற்பாடாகியுள்ளது.

இந்த நிகழ்வு நாளை சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு ஏ-9 வீதியின் கிளிநொச்சி, பாரதி ஸ்ரார் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

யாழ். ஊடக அமையத் தலைவர் ஆ.சபேஸ்வரன் தலைமையில் நடைபெறும் இந்த நினைவேந்தல் நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் உள்ளிட்ட அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், அரசியல் கட்சிகளின் தலைவர்கள், வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த ஊடகவியலாளர்கள் மற்றும் தெற்கு ஊடக அமைப்பின் பிரதிநிதிகள் எனப்பலர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந்த நிகழ்வில், நினைவுரைகளாக 'தராகியும் இலங்கையின் பூகோள அரசியலும்' என்னும் தலைப்பில் யாழ். பல்கலைக்கழக ஊடகக் கற்கை, கலைப்பீட இணைப்பாளர் கலாநிதி எஸ்.ரகுராமும், 'தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உருவாக்கத்தில் சிவராம்' என்னும் தலைப்பில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிறேமச்சந்திரனும், 'சிவராமின் கனவு' என்னும் தலைப்பில் மூத்த ஊடகவியலாளர் ராதேயனும், 'நானும் சிவராமும்' என்ற தலைப்பில் மூத்த ஊடகவியலாளர் மாணிக்கவாசகரும் உரையாற்றவுள்ளனர்.

தமிழர் தாயகத்தில் துணிச்சலுடனும், ஊடக அறத்துடனும், செயற்பட்டுவரும் ஊடகவியலாளர்களை ஊக்குவிக்கும் வகையில் யாழ். ஊடக அமையம் இந்த ஆண்டு முதல் வழங்குவதற்கு தீர்மானித்திருக்கும் 'தராகிசிவராம்ஞாபகார்த்த விருது' மறைந்த கேலிச் சித்திரக் கலைஞரும், ஊடகவியலாளருமான அமரர் அஸ்வின் சுதர்சனுக்கு வழங்கப்படுகின்றது.

இதேவேளை, வடக்கு, கிழக்கில் நெருக்கடியான சூழலில் பணியாற்றிய ஊடகவியலாளர்களைக் கௌரவிக்கும் வகையில் சர்வதேச தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியத்தால் விருது வழங்கப்பட்ட ஊடகவியலாளர்களும் இந்த நிகழ்வில் வைத்துக் கௌரவிக்கப்படவுள்ளனர்.

மட்டக்களப்பு, யாழ்ப்பாணத்தை தொடர்ந்து, இந்த முறை கிளிநொச்சியில் யாழ். ஊடக அமையத்துடன் வடக்கு, கிழக்கில் உள்ள அனைத்து ஊடக அமைப்புக்களும் இணைந்து நினைவேந்தல் நிகழ்வை ஏற்பாடு செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

(ஐ)

நாளை

29.04.2017
சனிக்கிழமை

நட்சத்திரம் : ரோகிணி பி.ப.3.12 வரை
திதி : திருதியை மு.ப. 11.21 வரை

சுபநேரம் : 2.58 – 4.28 வரை
இராகுகாலம் : 08.58 – 10.28 வரை

நாட்டின் அபிவிருத்திக்கும் அதிகாரப் பகிர்வு அவசியம்!

தேசிய இனப் பிரச்சினைக்கான தீர்வாக மட்டும் இது அமையாது என்கிறார் அமைச்சர் ராஜித

தேசிய இனப்பிரச்சினைக்கான தீர்வாக மட்டுமே அதிகாரப் பகிர்வு பிரசாரப்படுத்தப் பட்டுள்ளது. அதிகாரப் பகிர்வானது நாட்டின் முழுமையான அபிவிருத்திக்கும் அத்தியாவசியமானது என்பதை தென்னிலங்கைக்குத் தெரிவிக்க வேண்டும்.

இவ்வாறு அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் ஸ்தாபகதலைவர் எஸ்.ஜே.வி.செல்வநாயகத்தின் 40 ஆவது ஆண்டு நினைவு தின நிகழ்வு நேற்றுமுன்தினம் புதன்கிழமை கொழும்பு தன்பலப்பிட்டி புதிய கதிரேசன் மண்டபத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் தந்தை செல்வாவின்உருவப்படத்திற்கு மலரஞ்சலிசெலுத்தப்பட்டதைத் தொடர்ந்து தந்தை செல்வா நினைவுப்பேருரையை அமைச்சர் ராஜித சேனாரத்ன ஆற்றினார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன்தலைமையில்நடைபெற்ற இந்த நிகழ்வில், எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன், வடமாகாண சபை உறுப்பினர் சயந்தன், வெளிநாட்டு இராஜதந்திரிகள் மற்றும் பலர் கலந்து கொண்டிருந்தனர்.

அமைச்சர் ராஜித தொடர்ந்தும் உரையாற்றும் போதே தெரிவித்தவை வருமாறு:-

அதிகாரங்கள் பகிரப்படாமையால்தான் கடந்த 70 ஆண்டுகளாக நாடு அபிவிருத்தியில் பின்னடைவைச்சந்தித்துள்ளது.

அதிகாரங்களைப் பகிரும் சமஷ்டியானது நாட்டை பிளவுபடுத்தாது. இது தமிழர்களுக்கு மட்டுமல்லசிங்களவர்களுக்கும் தேவையானது.

புதிய அரசமைப்பை உருவாக்கும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அந்தச் செயற்பாடுகளின் இறுதியில் மக்களின் அங்கீகாரத்துக்காக வாக்கெடுப்புக்கு விடப்படும். அந்தப்பணிகளில் சில தாமதங்கள் நிலவுகின்றன. இதனை நான் ஏற்றுக்கொள்கிறேன்.

தந்தை செல்வா சகலராலும் அறியப்பட்ட ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு நேர்மையான அரசியல்வாதியாக இருந்தவர். அவர் இந்த நாட்டில் தமிழ் மக்களும் சமத்துவமாக வாழவேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்தே போராடியிருந்தார். நாட்டைப் பிரிக்க வேண்டும் என்பதற்காக அவர் போராடியிருக்கவில்லை.

அதேநேரம், சிங்கள மக்களுடன் முரண்பட வேண்டும் என்று ஒரு போதும் நினைக்கவில்லை. அனைத்து மக்களும் ஒற்றுமையுடன் சமத்துவமாக இருக்கவேண்டும்என்றநிலைப்பாட்டைக் கொண்டிருந்தவர். பிரிக்கப்படாத நாட்டுக்குள் தமிழ் மக்களுக்கு சமஷ்டி அடிப்படையில் அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும் என்பதில்உறுதியானகொள்கையைக் கொண்டிருந்தார்.

அந்த முயற்சிகள் தோல்வியடைந்தன. இதனால் வேறு தெரிவுகள் இல்லாமல் தமிழீழக் கோரிக் கையை அவர் தெரிவு செய்தார். இதற்கு இரண்டு பிரதான சிங்களக் கட்சிகளே காரணம்.

இன்னமும் தேசிய இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்படாமல் இருப்பதற்கு முக்கிய காரணம் ஐக்கிய தேசியக் கட்சியும், சுதந்திரக் கட்சியும்தான்.

மாறி மாறி மூன்றாம் தர - கீழ்த்தரமான அரசியல் செய்தனர். அவர்கள் மட்டுமல்ல, பாரம்பரியமான இடதுசாரிக் கட்சிகளும் கூட ஆரம்பத்தில் தமிழ் மக்களின் உரிமைக்காகப் பேசினாலும், பின்னர் இனத்துவேச அரசியல் ஈடுபட்டனர்.

இதற்குநான்பொறுப்பில்லை என்று சொல்ல முடியாது. நானும் பொறுப்பாளிதான். இவை நடக்கும்போது நான் மாணவன்.

தந்தை செல்வாவின் முழுமையான சீடனாகவே நான் சம்பந்தனை பார்க்கின்றேன். அவருடைய அரசியல் பயணமும் நீண்டதாகும்.

சமஷ்டி என்ற விடயத்தைப் பார்க்கையில் அது பல்வேறு வகையிலான அதிகாரங்களை பகிர்ந்த ஆட்சிமுறைமையே குறிக்கின்றது. அதாவது அதிகாரங்கள் பகிரப்பட்ட ஜனநாயக ரீதியான செயற்பாடே சமஷ்டியாகக் காணப்படுகின்றது. உலகில் பல்வேறு சமஷ்டி முறைகள் காணப்படுகின்றன.

இந்தநாட்டில்தந்தைசெல்வா சிங்களப் பெருந் தலைவர்களுடன் இரண்டு ஒப்பந்தங்களைச் செய்திருந்தார். இருப்பினும் அவை கிழித்தெறியப்பட்டிருக்கின்றன. இந்த நாட்டில் இடதுசாரித் தலைவர்கள்சிறுபான்மை மக்களின் பிரச்சினைக்காகக் குரல்கொடுத்து வந்தார்கள். இருப்பினும்ஒருநாடுஇருமொழி, ஒரு மொழி இரு நாடு என்று உரைத்தகொல்வின்ஆர்.டிசில்வாபின் னர் 1972 இல் சிங்கள பௌத்த வாதத்தை முன்னிலைப்படுத்தி அரசமைப்பை உருவாக்னார்.

இதனால் சிங்களத் தலைவர்கள் போன்று இடதுசாரித் தலைவர்களும் மூன்றாம் தர அரசியலுக்குள் சென்றிருந்தனர். இவ்வாறான நிலைமைகளால்தான் தந்தை செல்வா வேறு தெரிவுகள் இன்றித் தீர்மானத்தை எடுக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டிருந்தார்.

தலைசிறந்த தலைவரான விஜயகுமாரதுங்கவின் மக்கள் கட்சியூடாகவேநான்அரசியலுக்குள் பிரவேசித்தேன். நாங்கள் சிறுபான்மையினருக்காக குரல் கொடுத்தோம். அந்தக் காலப் பகுதியில் 13 ஆம் திருத்தச் சட்டம் தொடர்பாக பேசியிருந்தோம். சம உரிமைகள் வழங்கப்பட வேண்டும் என்பது குறித்து வலியுறுத்தியிருந்தோம். போராட்டங்களைநடத்தினோம்.

இந்தப் போராட்டங்களால் எமது கட்சியைச் சேர்ந்த 107 பேர் உயிர்களைத்தியாகம் செய்துள்ளனர். நான்கூட இரண்டு துப்பாக்கிவேட்டுக்கள்களை தற்போதும் சுமந்து கொண்டிருக்கின்றேன். தமிழ் மக்களின் உரிமைகளுக்காக போராடியமைக்காக எனக்கு கிடைத்த கௌரவமாகவே அதனைக் கருதுகின்றேன்.

அதிகாரங்கள் பகிரப்பட வேண்டும் என்பதை சிங்கள மக்களுக்குப் புரியவைப்பதற்கு நாம் கடுமையாக உழைத்தோம். அன்றைய காலத்தில் அதனை இலகுவாக செய்திருக்க முடியும். ஆனால் தற்போது அவ்வாறான செயற்பாடு ஒன்றை முன்னெடுப்பதற்கானநிலைமை மிகவும் கடினமானதாகவும் மோசமானதாகவும் உள்ளது.

காரணம் தமிழ் மக்களின் பிரச்சினைக்கானதீர்வாகசமஷ்டி அமையும்என்றேகருதப்பட்டது. ஆனால் சிங்கள மக்கள் சமஷ்டி என்பது தனிநாட்டுக் கோரிக்கைக்கான ஆரம்பப் படியாக அமையும், அதனால் நாடு பிரியும் என்று கருதினர்.

சமஷ்டி தமிழ் மக்களின் கோரிக்கையே என்று அவர்கள் கருதினார்கள். ஆகவே அவ்வாறான தோற்றப்பாடே அவர்கள் மத்தியில் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றது.

அபிவிருத்தியில்முன்னேற்றமடைந்துள்ள நாடுகள் அனைத்திலும் சமஷ்டி, வெவ்வேறு வடிவங்களில் கடைப்பிடிக்கப்படுகின்றது. உலகிலுள்ள பல அபிவிருத்தியடைந்த நாடுகள் சமஷ்டியைக் கொண்ட அதிகாரப் பகிர்வைப் பின்பற்றுகின்றன. அபிவிருத்திக்கானவழியாக அதிகாரப் பகிர்வு உள்ளது.

(19 ஆம் பக்கம் பார்க்க...)

அரசியல்வாதிகள் மக்களை இருட்டில் வைக்கக் கூடாது

கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் தெரிவிப்பு

கொழும்பு, ஏப்.28

புதிய அரசமைப்புக்கு மக்கள் எதிர்ப்புக்களை வெளியிடுவார்கள் என்று நான் கருதவில்லை. அரசியல்வாதிகள் மக்களை இருட்டில்வைக்கக்கூடாது. புதிய அரசமைப்பு முழு நாட்டுக்கும்அவசியமானது.

இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

கொழும்பு பம்பலப்பிட்டி புதிய கதிரேசன் மண்டபத்தில்நடைபெற்ற தந்தை செல்வா நினைவு தின நிகழ்வில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

நாடாளுமன்றம் அரசமைப்புச்சபையாகமாற்றப்பட்டிருக்கின்றது. புதிய அரசமைப்பை உருவாக்கும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன.

புதிய அரசமைப்பை உருவாக்குவது என்பது இலகுவான விடயமல்ல. புதிய அரசமைப்பானது முழு நாட்டுக்கும் அவசியமான ஒன்றாகும். பிரிக்க முடியாத, பிளவுபடுத்தப்படாத ஐக்கிய இலங்கைக்குள் அதிகாரங்கள் பகிரப்பட வேண்டும் என்பதே எமது நிலைப்பாடாகும்.

இந்த நாட்டின் ஒவ்வொரு தலைவரும் அரசமைப்புத் தொடர்பாக நடவடிக்கைகளை எடுத்துள்ளார்கள். முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாஸ, சந்திரிகா பண்டாரநாயக்க, ரணில் விக்கிரமசிங்க ஆகியோரும் விசேடமாக மஹிந்த ராஜபக்ஷவும் தேசிய இனப் பிரச்சினைக்கான தீர்வைக் காண்பதற்காக அரசமைப்பு அல்லது அரசமைப்பு திருத்த முன்மொழிவுகளைச் செய்துள்ளார்கள்.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தனது ஆட்சிக் காலத்தில் சர்வகட்சிகுழுவின்அங்குரார்ப்பணக் கூட்டத்தில் உரையாற்றுகையில், அதியுச்சமாக அதிகாரங்கள் பகிரப்படும்எனக்குறிப்பிட்டிருந்தார்.

ஆகவே, இந்த நாட்டில் அதிகாரங்கள் பகிரப்பட வேண்டும் என்பதை, அனைத்துத் தலைவர்களும் ஏற்றுக்கொண்டிருந்தார்கள். அவ்வாறிருக்கையில்தற்போது உருவாக்கப்படும் அரசமைப்பு சகல மக்களும்ஏற்றுக்கொள்ளக் கூடிய வகையில் தயாரிக்கப்பட வேண்டும்.

புதிய அரசமைப்பானது தனியே ஒரு இனமக்களுக்கானது அல்ல. இந்த நாட்டுக்குப் புதிய அரசமைப்பு அனைத்து மக்களுக்கும் அவசியம்.- என்றார். (ஐ)

தமிழ் மக்களது அபிலாஷைக்கு விடிவு கிட்டவில்லை

தந்தை செல்வா நினைவு நிகழ்வில் சுமந்திரன் எம்.பி.

கொழும்பு, ஏப்.28

நல்லாட்சி அரசு ஆட்சிக்குவந்துஇரண்டு ஆண்டுகள் பூர்த்தியாகியுள்ள நிலையில்தமிழ் மக்களது அபிலாஷைகளுக்குஇன்னும்விடிவுகிட்டவில்லை.

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளரும் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன்; தந்தைசெல்வாவின் நினைவு நிகழ்வில் உரையாற்றும்போதே தெரிவித்தார்.

அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில்தெரிவித்தவை வருமாறு:-

இலங்கையில்வாழும் தமிழ் பேசும் மக்களுக்கு, கடந்த ஆண்டைவிடவும் இந்த ஆண்டின் சூழல் மிகவும்முக்கியமானதாக இருக்கின்றது.

2015 ஆம் ஆண்டு ஆட்சி மாற்றம் இடம்பெற்று இரண்டு ஆண்டுகள் பூர்த்தியாகின்றநிலைமையில் எமது மக்களின் அபிலாஷைகளுக்கான விடிவு இன்னமும் ஏற்படவில்லையே என்ற ஏக்கத்துடனேயே இந்த ஆண்டும் பிறந்துள்ளது.

புதிய அரசமைப்பு உருவாக்கப்படும் இந்தச் சந்தர்ப்பத்தில்அதில்என்ன இருக்கின்றது,என்பது பகிரங்கப்படுத்துவதற்குமுன்னதாகவே ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியிலிருந்து தங்களைகூட்டு எதிரணியாக அறிவித்துச் செயற்படுகின்ற51 உறுப்பினர்கள், ஏனையத்து விடயங்களையும் எதிர்க்கும் குழுவொன்றுதற்போதுள்ளது.

கடந்தஆண்டுஜனவரி மாதம்9ஆம்திகதிநாடாளுமன்றம் அரசமைப்பு பேரவையாக மாற்றப்படும் பிரேரணைசபையில்சமர்ப்பிக்கப்பட்டு, இரண்டு மாதங்கள் கழித்து மார்ச் மாதம்9 ஆம்திகதி அந்த தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

எட்டப்படும் புதிய அரசமைப்பு நகலில் மக்களின் அங்கீகாரத்துக்காக சர்வஜன வாக்கெடுப்புக்காக விடப்படும் என்றும் கூறப்பட்டிருக்கின்றது. அவ்வாறான தீர்மானம் ஏகமனதாகவே நிறைவேற்றப்பட்டது. கூட்டு எதிரணியாக இருக்கும்51 நாடாளுமன்ற உறுப்பினர்களும் இதற்கு ஆதரவைவெளியிட்டிருந்தனர். அவர்களில் ஒருவர் கூட எதிர்த்து வாக்களித்திருக்கவில்லை. அவ்வாறானவர்களே சர்வஜன வாக்கெடுப்புஎன்றிட்டஅனைத்துக்கும் இவ்வாறுஎதிர்ப்பு வெளியிட்டுக் கொண்டிருக்கின்றார்கள்.

வழிநடத்தல்குழு பல தடவைகள் கூடியுள்ளது. தற்போது இடைக்கால அறிக்கைதயாராகவுள்ளது. கடந்த டிசெம்பர் மாதம் வெளிப்படுத்தப்பட்டிருக்க வேண்டிய அறிக்கை சற்றுத் தாமதமாகியுள்ளது. விரைவில்அந்த அறிக்கை உப்படஅடுத்தகட்டசெயற்பாடுகள்நடந்தேறவேண்டும் என்பதே எமது நிலைப்பாடாகவுள்ளது.- என்றார். (ஐ)

மாயக்கல்லி விவகாரத்துக்கு ஆதரவளிப்பது நல்லாட்சிக்கு களங்கம் ஏற்படுத்தும் செயல்!

எதிர்க்கட்சித் தலைவர் சம்பந்தனுடனான சந்திப்பில் அமைச்சர் ஹக்கீம் விசனம்

திருகோணமலை,ஏப்.28

மாயக்கல்லி மலையில் பௌத்த விகாரை அமைப்பதற்கு எடுக்கப்படும் முஸ்தீபுக்கு ஆதரவளிப்பது நல்லாட்சிக்கு களங்கம் ஏற்படுத்தும் ஒரு செயல் என இலங்கை முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும், அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

இறக்காமம் மாயக்கல்லி மலையில் பௌத்த விகாரை அமைப்பதற்கு எடுக்கப்படும் முயற்சியைத் தடுப்பது தொடர்பில், இலங்கை முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும், எதிர்க்கட்சித் தலைவருமான இரா. சம்பந்தனை நேற்று முன் தினம் புதன்கிழமை சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளார். இதன் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

வில்பத்து நிகழ்வுக்குச் செல்லும் வழியில் எதிர்க்கட்சித் தலைவரின் இல்லத்துக்கு விஜயம் செய்த அமைச்சர் ரவூப் ஹக்கீம், மாயக்கல்லி மலை விவகாரம் தொடர்பில் பேச்சு நடத்தியுள்ளார்.

மாயக்கல்லி மலை ஆக்கிரமிப்புக்கு எதிராக மேற்கொள்ள வேண்டிய உயர்மட்ட நடவடிக்கைகளை இருதரப்பும் கூட்டாக முன்னெடுப்பதற்கு இதன்போது இணக்கம் காணப்பட்டது.

முஸ்லிம் காங்கிரஸும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் இதுதொடர்பாக ஜனாதிபதி மட்டத்தில் மிக விரைவாகப் பேசுவதற்கும் இதன்போது தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக கிழக்கு மாகாண சபையில் நிறைவேற்றப்பட்டுள்ள தடையுத்தரவுத் தீர்மானத்தை அமுல்படுத்துவதில், சம்பந்தப்பட்ட உயரதிகாரிகள் எவரும் இடைஞ்சலாகச் செயற்படக்கூடாது என்பதை இருவரும் அழுத்தமாக வலியுறுத்தவுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ச)

தின்மக்கழிவு நிலையத்தில் தீ!

ஒலுவில் அஷ்ரப் நகரிலுள்ள தின்மக்கழிவு முகாமைத்துவ நிலைய வளாகத்தில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை மாலை திடீரென்று தீ பரவியுள்ளது.

இந்நிலையில், அயலவர்கள் தகவல் தெரிவித்தமையை அடுத்து, அக்கரைப்பற்று மாநகர சபைத் தீயணைப்பு பிரிவின் உதவியால் தீ கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டது என அட்டாளைச்சேனை பிரதேச சபையின் செயலாளர் எம்.ஐ.எம். பாயிஸ் தெரிவித்தார்.

அட்டாளைச்சேனைப் பிரதேச சபையின் பராமரிப்பின் கீழுள்ள இந்தத் தின்மக்கழிவு நிலையத்தில் வேண்டுமென்றே தீ மூட்டப்பட்டிருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படுகின்றது. (ச)

விகாரை அமைப்பதைத் தடுத்து நிறுத்துக!

அமைச்சர் ரிஷாத் கோரிக்கை

இறக்காமம் மாயக்கல்லி பிரதேசத்தில் முஸ்லிம்களுக்குச் சொந்தமான காணியில் பௌத்த விகாரை அமைக்க மேற்கொள்ளப்படும் முயற்சியைத் தடுத்து நிறுத்த நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதியின் செயலாளர் பீ.பி. அபேயக்கோனிடம் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவர் அமைச்சர் ரிஷாத் பதியுதீன் கோரிக்கை விடுத்துள்ளார்.

ஜனாதிபதியின் செயலாளர் பீ.பி அபேயக்கோனை, ஜனாதிபதிச் செயலகத்தில் வைத்து நேற்று வியாழக்கிழமை அவர் சந்தித்தார். இந்தச் சந்திப்பின் போதே அவர் மேற்படி கோரிக்கையை விடுத்தார்.

விகாரை அமைக்கும் முயற்சி முன்னெடுக்கப்பட்டால் இனங்களுக்கிடையில் பிரச்சினைகள் தோன்றுவதற்கு வழி ஏற்படும். நல்லாட்சி அரசின் மீது முஸ்லிம்களுக்கு நம்பிக்கை அற்றுப் போகும். இந்தநடவடிக்கைமூலம் அம்பாறை மாவட்டத்தில் காலம் காலமாக இருந்த சிங்கள - முஸ்லிம் நல்லுறவுக்குக் குந்தகம் ஏற்பட்டுள்ளது எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (ச)

அம்பாறை மாவட்டத்தில் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட 99 குடும்பங்களுக்கு வீடுகள்!

அம்பாறை,ஏப்.28

அம்பாறை மாவட்டத்தில் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட ஆயிரத்து 650 குடும்பங்கள் புனர்வாழ்வளிப்பு மற்றும் மீள்குடியேற்ற அமைச்சின் வீட்டுத்திட்டத்துக்காக தெரிவு செய்யப்பட்ட நிலையில், இரண்டாம் கட்டமாக 99 குடும்பங்களுக்கு வீடுகளை நிர்மாணித்துக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

- இவ்வாறு மாவட்டச் செயலகத்தின் திட்டமிடல் பணிப்பாளர் எஸ்.அன்பர்தீன் தெரிவித்தார்.

வீடுகளைப் பெறவுள்ள பயனாளிகளுக்குத் தெளிவு படுத்தும் கூட்டம் திருக்கோவில் பிரதேச செயலகத்தில் நடைபெற்றது. இதன்போது கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட 56 குடும்பங்களுக்கு மீள்குடியேற்ற அமைச்சால் திருக்கோவிலில் முதற்கட்டமாக வீடுகள் நிர்மாணித்துக் கொடுக்கப்பட்டுள்ளன.

தற்போது அமைக்கப்படவுள்ள ஒவ்வொரு வீடுகளும் தலா 8 லட்சம் ரூபா பெறுமதியில் நிர்மாணிக்கப்படவுள்ளது. இந்த வீடுகளுக்கான நிர்மாணப் பணியை எதிர்வரும் மூன்று மாதங்களுக்குள் பூர்த்திசெய்து வீடுகளைப் பயனாளிகளிடம் கையளிப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

திருக்கோவிலில் 30 வீடுகளும், ஆலையடிவேம்பில் 26 வீடுகளும், நாவிதன்வெளியில் 18 வீடுகளும், சம்மாந்துறையில் 7 வீடுகளும், லாகுகலவில் 3 வீடுகளும், உகணவில் 6 வீடுகளும், தமணவில் ஒரு வீடும் மாஓயாவில் 8 வீடுகளும் தெரிவு செய்யப்பட்ட குடும்பங்களுக்கு நிர்மாணித்துக் கொடுக்கப்படவுள்ளன.-என்றார். (ச)

மட்டக்களப்பில் ஒரே பிரசவத்தில் இளம் தாய்க்கு 4 குழந்தைகள்



மட்டக்களப்பு,ஏப்.28

மட்டக்களப்பில் தாய் ஒருவர் ஒரே பிரசவத்தில் நான்கு சிசுக்களைப் பிரசவித்த சம்பவம் ஒன்று நேற்றுமுன்தினம் புதன்கிழமை இடம்பெற்றுள்ளது.

பொத்துவில் தாமரைக்குளத்தைச் சேர்ந்த ஐ.விஜித குமாரி (வயது-35) என்பவரே இவ்வாறு 4 சிசுக்களைப் பிரசவித்துள்ளார்.

அதிகாலை நான்கு மணியளவில் மூன்று பெண் குழந்தைகளும், ஓர் ஆண் குழந்தையும் சத்திர சிகிச்சை மூலம் மேற்படி தாய் பிரசவித்துள்ளார் என மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்தியர் எம்.எஸ். இப்ராலெப்பை தெரிவித்தார்.

நிறை குறைவு காரணமாக குழந்தைகள் நால்வரும் தீவிர சிகிச்சைப் பிரிவில் வைக்கப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ச)

அம்பாறையில்இன்று கண்டனப் பேரணி!

இறக்காமம் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட மாணிக்கமடு மாயக்கல்லி மலைப் பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்டுவரும் நில ஆக்கிரமிப்பைக் கண்டித்து ஹர்த்தால் மற்றும் கண்டனப் பேரணி என்பன அம்பாறை மாவட்டத்தில் இன்று ஜும்மா தொழுகையின் பின்னர் நடத்தப்படும் என அப்பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் யு.கே. ஜெபீர் மௌலவி தெரிவித்தார்.

அம்பாறை மாவட்டத்தின் ஒவ்வொரு பிரதேச செயலகங்களிலும் உள்ள ஜும்மா பள்ளிவாசல்களிலிருந்து ஆரம்பமாகும் பேரணி, அவ்வப் பிரதேச செயலகங்களை நோக்கிச் சென்று, அங்கு பிரதேச செயலாளர்களிடம் மகஜர்களும் ஒப்படைக்கப்படவுள்ளன.என அவர் மேலும் தெரிவித்தார். (ச)

வடக்கு, கிழக்கு தமிழ் மக்கள் வஞ்சிக்கப்பட்டவர்களாகவே உள்ளனர்!

விவசாய அமைச்சர் துரைராஜசிங்கம் தெரிவிப்பு

திருகோணமலை,ஏப்.28

இந்த நாட்டில் அரசியலாளர்களின் கொள்கைகளின் அடிப்படையில் வஞ்சிக்கப்பட்ட மக்களாகவே வடக்கு மற்றும் கிழக்கில் வாழும் தமிழ் மக்கள் உள்ளனர்.

- இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பொதுச் செயலாளரும், கிழக்கு மாகாண விவசாய அமைச்சருமான கிருஸ்ணபிள்ளை துரைராஜசிங்கம் தெரிவித்தார்.

திருகோணமலையில் விளையாட்டு வீரர்களுக்கு பதக்கம் வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இந்த நாட்டின் மற்றைய ஏழு மாகாணங்களும் சுதந்திரம் அடைந்தநாள் தொடக்கம் வளர்ந்து கொண்டிருக்கின்றன. வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் மாத்திரமே சுதந்திரம் அடைந்த நாள் தொடக்கம் வீழ்ந்து கொண்டிருக்கின்றன.

வெளிநாடுகளில் அந்தந்த நாட்டு மக்களைத் தம் சொத்துக்களாக மதிக்கின்றார்கள். ஆனால் நம்முடைய நாட்டில் நிலைமை அவ்வாறு இல்லை. இனம், மொழி, மதம் என்கின்ற பேய்களை நாங்களே வளர்த்துக் கொண்டிருக்கின்றோம். இந்தப் பேய்களுக்கு அடிபணிந்து கொண்டு நாங்களும் உலக நாடுகளுக்கு முன் தலை நிமிர்ந்து நிற்க வேண்டும் என்று சொல்வதற்கு எந்தத் தகுதியும் எமக்குக் கிடையாது.

மக்களின் குறைகளைக் கேட்டு அதனைத் தீர்க்க வேண்டிய கடமை அரசியலாளர்களுக்கு உண்டு. ஆனால் நிர்வாகிகள் என்பவர்கள் அரசியலாளர்கள் தீட்டுகின்ற திட்டங்களை எந்தளவுக்கு நடைமுறைப்படுத்துகின்றார்கள் என்கின்ற கேள்வியும் எங்களுக்கு இருக்கின்றது. ஜனாதிபதி இந்த நாட்டின் வளங்கள் சரியான முறையில் அனைத்துப் பிரதேசங்களுக்கும் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும் என்கின்ற விடயத்தில் அக்கறையுள்ளவராக இருக்கின்றார். ஆனால் இந்த விடயங்கள் எல்லாம் அதிகாரிகளுக்கு ஊடாகவே செல்லுகின்றன. இந்த விடயத்தில் நிர்வாக அதிகாரிகள் அவர்களுடைய ஏகபோக நிர்வாக உரிமைகளைச் சரியாக இறுகப் பிடித்துக் கொள்கின்றார்கள். இதுவும் இந்த நாடு சரியான முறையில் வளர்ந்திடாமைக்கு காரணம் ஆகும். - என்றார். (ச)

அரசுக்கு எதிராக நடத்தப்படும் ஆர்ப்பாட்டங்களை முடக்கவே பொன்சேகாவுக்குப் பாதுகாப்புப் பதவி!

அமைச்சரவைப் பேச்சாளரான ராஜித சேனாரத்ன விளக்கம்

கொழும்பு, ஏப்.28

அரசுக்கு எதிராக அரசியல் ரீதியாக முன்னெடுக்கப்படும் ஆர்ப்பாட்டங்களைக் கட்டுப்படுத்தி நாட்டில் ஒழுக்கத்தை ஏற்படுத்தும் நோக்கில் முன்னாள் இராணுவத் தளபதியும் தற்போதைய அமைச்சருமான பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகாவுக்கு அதிகாரங்கள் அடங்கிய இராணுவப்பதவியொன்றை வழங்குவதற்கு அரசு முன்வந்துள்ளது.

முப்படைகள், பொலிஸாரை உள்ளடக்கிய வகையில், ஒட்டுமொத்த பாதுகாப்பு விவகாரங்களையும் கவனிக்கும் உயர் நிலைப் பதவிக்கு பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகாவை நியமிக்க அரசு திட்டமிட்டுள்ளது.

அமைச்சர் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் பதவிகளில் இருந்து விலகி, இந்த உயர்நிலைப் பதவிக்கு பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகாவை நியமிக்கப்படுவதற்கான காரணங்களை நேற்று முன்தினம் கொழும்பில் நடந்த அமைச்சரவைக் கூட்டத்தில் அமைச்சரவைப்பேச்சாளரானராஜித சேனாரத்ன வெளியிட்டார்.

இந்த செய்தியாளர் சந்திப்பில் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும் போது அமைச்சர் ராஜித சேனாரத்ன இந்த விடயத்தைத் தெரிவித்துள்ளார்.

அவர்மேலும்தெரிவித்துள்ளவை வருமாறு:-

முப்படையையும் பொலிஸாரையும்கொண்டு நாட்டில்ஒழுக்கத்தை ஏற்படுத்தும் நோக்கில் இந்தப் பதவியை பொறுப்பேற்பதற்காக, தற்போது வகிக்கும் அமைச்சர் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் பதவிகளை விட்டு விலக சரத் பொன்சேகா தயாராக இருக்கிறார்.

அரசுக்கு எதிராக அரசியல் ரீதியான ஆர்ப்பாட்டங்கள் அதிகரித்துள்ளன. எந்தவொரு விடயம் தொடர்பிலும் பேச்சு நடத்தாமல்திடீரென ஆர்ப்பாட்டங்களையும் வேலை நிறுத்தப் போராட்டங்களையும் நடத்தி வருகின்றனர்.

பேச்சு நடத்தித்தீர்த்துக் கொள்ளக் கூடிய விடயங்களுக்கும் கூட, ஆர்ப்பாட்டங்களையும் வேலை நிறுத்தங்களையும்நடத்தி மக்களை அசௌகரியங்களுக்கு உட்படுத்துகின்றனர். இந்த நிலைமையைத் தொடர்ந்தும் அனுமதிக்க முடியாது.

இவ்வாறு அரசுக்கு எதிராக அரசியல் ரீதியில் ஆர்ப்பாட்டங்களை நடத்தி மக்களை அசௌகரியப்படுத்துபவர்கள் தொடர்பில் எவ்வாறான நடவடிக்கை எடுப்பது என்பது குறித்து அமைச்சரவைக் கூட்டத்தில் விரிவாக ஆராயப்பட்டது.

இதன்போது அமைச்சர் பதவியையும் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியையும், விட்டு விலகி அரசுக்கு எதிராக அரசியல் ரீதியில் ஆர்ப்பாட்டம்செய்பவர்களைக்கட்டுப்படுத்தி நாட்டில் ஒழுக்கத்தை ஏற்படுத்த இரண்டு ஆண்டுகளுக்கு சிறப்பு பதவியொன்றை ஏற்க முடியுமா என அமைச்சர் சரத் பொன்சேகாவிடம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கேள்வி எழுப்பினார்.

முப்படைகளையும் பொலிஸாரையும்கொண்டு நாட்டில் ஒழுக்கத்தை ஏற்படுத்தும் சிறப்பு பதவியொன்றைத்தான் வழங்குவதாகவும் அதற்கு உடன்பட முடியுமா என்றும் ஜனாதிபதி கேட்டிருந்தார். அதிகாரங்களைக்கொண்ட இராணுவ தளபதி போன்ற ஒரு பதவியையே பொன்சேகாவுக்கு வழங்க அவர் முன்வந்துள்ளார்.-என்றார்.

இதன்போது மற்றுமொரு கோட்டாபய உருவாக்குவதற்காகப் பொன்சேகாவுக்கு இராணுவத் தளபதி பதவியை வழங்கப்போகின்றீர்களா? என்று ஊடகவியலாளர்கள் கேள்வி எழுப்பினர்.

இதற்குப் பதிலளித்த ராஜித, அப்படி இல்லை. கோட்டாபய யார் என்று உங்களுக்குத் தெரியும். கோட்டாபயவுக்கு மஹிந்த ராஜபக்ஷவே அஞ்சி கொண்டிருந்தார். ஒரு முறை மஹிந்த ராஜபக்ஷ சமாதானம் தொடர்பாக ஒருகுழுவினருடன் பேச்சு நடத்திக் கொண்டி ருந்த போது அங்கே கோட்டா வந்து கொண்டிருந்தார். அதனைக்கண்ட மஹிந்த ராஜபக்ஷ, கோட்டா வருகிறார்என்று பதறியடித்துக் கொண்டு கூறியமையுடன் பேச்சுநடத்தவந்திருந்தவர்களை ஓர் அறையில் போட்டு பூட்டிவிட்டார். இவ்வாறு தான் மஹிந்த ராஜபக்ஷ போர் செய்தார். -என்றார். (ஐ)

உலகத் தரம் வாய்ந்த வீதிகள் வடக்கு, கிழக்கில் அமைப்பு!

இணைக்கம் தெரிவித்தது இந்தியா





கொழும்பு, ஏப்.28

வடக்கு,கிழக்குப்பகுதிகளில்உலகத்தரம்வாய்ந்த வீதி உட்கட்டமைப்பு அபிவிருத்தியை மேற்கொள்வதற்கு இலங்கை அரசுடன் ஒத்துழைக்க இந்திய அரசு இணங்கியுள்ளது என்று இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இந்தியாவுக்குப் பயணம் மேற்கொண்டுள்ள பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடன் இந்தியாவின் மத்திய தரைவழிப் போக்குவரத்து அமைச்சர் நிதின் கட்கரி நடத்திய பேச்சுகளின் போதே இந்த இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளது.

இந்தப் பேச்சுக்களின் போது, மூன்று பிரதான வீதி அமைப்புகளை அபிவிருத்தி செய்து தருமாறு இந்திய அரசிடம் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கோரிக்கை விடுத்திருந்தார்.

யாழ்ப்பாணம்- மன்னார், மன்னார்- வவுனியா, தம்புள்ள - திருகோணமலை வீதிகளையே அபிவிருத்தி செய்து தருமாறு இந்தியாவிடம் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

இதற்கு ஒத்துழைப்பு வழங்குவதாக இந்திய அமைச்சர் நிதின் கட்கரி உறுதி அளித்துள்ளார்.

எனினும், உள்ளூர் அனுமதிமற்றும்காணிகள் சுவீகரிப்புபோன்றவற்றை உள்ளூர் முகவர் அமைப்புகள் பொறுப்பேற்றுக் கொண்டால் மாத்திரமே இது சாத்தியமாகும் என்றும், காணிகள் சுவீகரிப்பு மற்றும் ஏனைய அனுமதிகளைப் பெற்றுக் கொள்ளாமல், இந்த திட்டத்தை உரிய காலத்தில் நிறைவேற்றுவது கடினம் என்றும் நிதின் கட்கரி தெரிவித்துள்ளார்.

இந்த வீதிகள் அமைப்புக்கான நிதி தொடர்பாகவும் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற சந்திப்பின் போதுகலந்துரையாடப்பட்டுள்ளது.

விரிவானதிட்ட அறிக்கையைத்தயாரிக்கஅனைத்துலக ஆலோசகரை நியமிக்க எதிர்பார்த்திருப்பதாகவும், இறுதியான திட்ட அறிக்கையைப் பெற்றுக் கொண்டு இந்திய அரசு இதனை முன்னெடுக்கும் என்றும் கட்கரி தெரிவித்துள்ளார்..

இந்தியா - இலங்கை இடையிலான உறவுகளை வலுப்படுத்தும், இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் திட்டத்துக்கு தமது அமைச்சு முழு ஒத்துழைப்பை வழங்கும் என்றும் நிதின் கட்கரி குறிப்பிட்டுள்ளார் என்று அந்தச் செய்திகள் மேலும் தெரிவிக்கின்றன.

இதேவேளை, காங்கிரஸ் கட்சியின் தலைவர் சோனியா காந்தி, இந்தியாவின் முன்னாள் பிரதமர் மன்மோகன் சிங், இந்தியாவின் மத்திய உள்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் ஆகியோருடனும் இலங்கைப் பிரதமர் சந்திப்பில் ஈடுபட்டார். (ஐ)

மன்னார் - இராமேஸ்வரத்தை இணைக்கும் துரோகச் செயற்பாட்டுக்கு அனுமதியில்லை!

சுட்டிக்காட்டுகிறார் ஜனாதிபதி சிறிசேன

கொழும்பு, ஏப்.28

தலைமன்னாரையும், இராமேஸ்வரத்தையும் இணைக்கும் அனுமன் பாலத்தை அமைப்பது தொடர்பாக இந்தியாவுடன் பேச்சு நடத்தப்படவில்லை என்று இலங்கை அரசு தெரிவித்துள்ளது.

அத்தகைய துரோகச் செயலுக்கு தாம் ஒருபோதும் அனுமதி அளிக்கமாட்டார் என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உறுதியளித்துள்ளார்.

இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையில் வீதி இணைப்பை ஏற்படுத்துவது தொடர்பாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடன், இந்தியாவின் மத்திய தரைவழிப் போக்குவரத்து மற்றும் கப்பல்துறை அமைச்சர் நிதின் கட்கரி பேச்சு நடத்தியுள்ளார்.

இந்தியாவுக்குப் பயணம் மேற்கொண்டுள்ள பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை, புதுடில்லியில் உள்ள தாஜ் விடுதியில் நேற்று முன்தினம் இந்திய மத்திய அமைச்சர் நிதின் கட்கரி சந்தித்தார்.

இந்தச் சந்திப்புக்குப் பின்னர், நிதின் கட்கரி தனதுடுவிட்டர் பக்கத்தில் இட்டுள்ள பதிவில், 'இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையில் வீதி இணைப்பை ஏற்படுத்துவது தொடர்பாக இலங்கைப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடன் கலந்துரையாடினேன்' என்று குறிப்பிட்டுள்ளார். எனினும் மேலதிக விவரங்கள் எதையும் அவர் வெளியிடவில்லை.

சில மாதங்களுக்கு முன்னர், இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் தரை வழிப் பாலத்தை அமைக்கும் திட்டம் இந்தியாவிடம் இருப்பதாகவும் அது குறித்து இலங்கையுடன் பேச்சு நடத்தி வருகிறார் என்றும் நிதின் கட்கரி கூறியிருந்தார்.

23 ஆயிரம் கோடி இந்திய ரூபா செலவு ஏற்படும் என்று மதிப்பீடு செய்யப்பட்ட இந்தத் திட்டத்துக்கு ஆசிய அபிவிருத்தி வங்கியும் உதவ முன்வந்திருந்தது என்பதும் குறிப்பிடத்தக்கது.

இந்த நிலையில் ஜனாதிபதியின் கருத்து மேற்கண்டவாறு அமைந்துள்ளது. (ஐ)

கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஏப். 28

யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்தின் வணிகமாணி (அரையாண்டு அடிப்படை) கற்கை நெறியைத் தொடரும் முதலாம் வருட மாணவர் களுக்கான நேரடிக் கலந்துரை யாடல் எதிர்வரும் 6 ஆம் திகதி சனிக்கிழமையும், 7 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை யும் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் முகாமைத்துவ வணிக பீடத்தில் நடை பெறவுள்ளது.

இது தொடர்பான நேர அட்டவணையையும், மேல திக விவரங்களையும் திறந்த மற்றும் தொலைக் கல்வி நிலைய அறிவுறுத்தல் பல கையில் பார்வையிடலாம் என்று யாழ்.பல்கலைக்கழகத் தின் திறந்த மற்றும் தொலைக் கல்வி நிலையத்தின் பணிப் பாளர் பேராசிரியர் பா.நிமல தாசன் தெரிவித்துள்ளார். (ச)

வரணியில் வெட்டுக்குளம் புனரமைப்பு

23 வருடங்களின் பின் பிரதேச மக்கள் மகிழ்ச்சி; பாராட்டு

வரணி, ஏப். 28

சுமார் 23 வருடங்களுக்குப் பின்னர் வரணி வடக்கில் வெட்டுக்குளம் புனரமைக்கப் பட்டுள்ளது.

இது குறித்து பிரதேச மக்கள் மகிழ்ச்சியுடன் பாராட்டுத் தெரிவித்துள்ளனர்.

புனரமைப்புப் பணிகளின் போது வரணி வடக்கு ஜே/339 கிராம அலுவலர் பிரிவுக்குள் அமைந்துள்ள இந்த வெட்டுக் குளம் கிராமிய அபிவிருத்தி உட்கட்டமைப்பு அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் சுமார் 10 லட்சம் ரூபா செலவில் புனர மைக்கப்பட்டுள்ளது. நீர் தடுப் புச் சுவர் கட்டுதல், குளம் வெட்டுதல், வாய்க்கால் அமைத் தல் போன்றவை நடந்துள்ளன.

இந்தக் குளத்துக்கு அருகில் சிமிழ் கண்ணகைபுர வீதி அமைந்துள்ளது.

குளம் அரிப்பெடுத்து கடந்த மாரிகாலத்தில் போக் குவரத்துக்கள் பெரிதும் பாதிக் கப்பட்ட நிலையில் அருகில் உள்ள வீடுகளுக்கும் வெள்ள நீர் உட்புகும் நிலைமை இருந்தது.

ஆனால் இந்தப் புனரமைப் புப்பணிகளால் பொதுமக்களும் பிரயாணிகளும் பெரும் நன்மை அடைந்துள்ளனர்.

இனி வரும் காலங்களில் வீதிக்கு (குளத்தருகு) அருகில் உள்ள வீடுகளுக்கு நீர் புக வாய்ப்பு ஏற்படாது என பொது மக்கள் தெரிவிக்கின்றனர்.

இந்தக் குளம் கடந்த 1994 ஆம் ஆண்டுக்குப் பின் தற் போது தான் முழுமையாக புனரமைப்புச் செய்யப்பட்டுள் ளது என்பது குறிப்பிடத்தக் கது. (இ-25)

முதியோர் இல்லத்துக்கு மதிய உணவு

புலம்பெயர்ந்த தாயக உறவு களினால் உதவி வழங்கும் செயற்திட்டத்தின்கீழ் வவு னியா கோவில்குளம் சிவன் ஆலயத்தின் எல்லப்பர் மருதங் குளம் முதியோர் இல்லத்துக்கு நேற்றுமுன்தினம் செவ்வாய்க் கிழமை நிதியினூடாக விசேட மதிய உணவு வழங்கப்பட்டுள் ளது.

ஜனநாயகமக்கள்விடுதலை முன்னணியின் சுவிஸ் கிளை உறுப்பினர் விஜயநாதன் ரட்ண குமார் தனது தந்தையாரான வைத்திலிங்கம்விஜயநாதனின் ஓராண்டு நினைவுதினத்தை முன்னிட்டு முதியோர்க்கு உணவு மற்றும்அத்தியாவசியப் பொருள்களைபெற்றுக்கொடுப் பதற்காக அனுப்பிவைக்கப் பட்ட 15 ஆயிரம் ரூபா நிதி யிலிருந்து மேற்படி உதவி வழங்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில் ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணி யின் உப தலைவர்களுள் ஒரு வரும், வவுனியா மாவட்ட அமைப்பாளருமான க.சந்திர குலசிங்கம் (மோகன்), கட்சி யின் செயற்குழு உறுப்பினர்க ளான சு.காண்டீபன், வ.பிரதீ பன், ஜெ.இந்துஜன் மற்றும் ரவி ஆகியோர்கலந்து கொண்டி ருந்தனர். (எ)

புத்தாண்டை முன்னிட்டு பொது அறிவுப் போட்டி

யாழ்ப்பாணம், ஏப். 28

புத்தாண்டை முன்னிட்டு கொட்டடி கிராம அபிவிருத்திச் சங்கமும், சனசமூக நிலையமும் இணைந்து பொது அறிவுப் போட்டி, மரதன் போட்டி என்பனவற்றை நடத்தத் தீர்மா னித்துள்ளன.

பொது அறிவுப் போட்டி எதிர்வரும் 14 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு யாழ்.வைத்தீஸ்வராக் கல்லூரியிலும், மரதன் ஓட்டப் போட்டி 21 ஆம் திகதி ஞாயிற் றுக்கிழமை அதிகாலை 5.30 மணிக்கு நிலைய முன்றி லிலும் இடம்பெறவுள்ளன. (ச)

'யுகதர்மம்' அறிமுக விழா

யாழ்ப்பாணம், ஏப்.28

யாழ். பொதுநூலக வாச கர் வட்டத்தின் 'யுகதர்மம் நாடகமும் பதிவுகளும்' எனும் அறிமுக நிகழ்வு நாளை சனிக்கிழமை பிற்பகல் 3.45 மணிக்கு நூலகக் கேட்போர் கூடத்தில் எழுத்தாளர் அ.யேசு ராசா தலைமையில் இடம் பெறும். (ச)

தினசரி ராசி பலன் 28.04.2017

ஏவிளம்பி வருஷம் 2017 ஆம் ஆண்டு சித்திரைத் திங்கள் 15 ஆம் நாள் பிரதமைத்திதி பகல் 2.09 மணி வரை. பின்னர் துவிதீயை. நட்சத்திரம்: பரணி மாலை 4.30 மணி வரை. பின்னர் கார்த்திகை. சித்தயோகம் மாலை 4.30 மணி வரை. பின்னர் அசுபயோகம். ராகு காலம்: பகல் 1.41 மணிமுதல் 3.14 மணி வரை. சுபநேரம்: காலை 7.28 மணி முதல் 8.58 மணி வரை. இன்று கார்த்திகை விரதம், சித்திரைப்பரணி, வைரவ விரதம். திவசம் செய்ய வேண்டிய திதி: சித்திரைமாத பிரதமை, துவிதீயை. பிறந்த நட்சத்திர வழிபாடு: பரணி.

'ஜோதிடமணி' பிரம்மஸ்ரீ சி.ஜெகதீஸ்வரசர்மா ஜே.பி.

மேஷம்: ஆக்கபூர்வமான பலன்கள் காணப் படுகின்றன. வருமானம் வளமாக இருக்கும். குடும்பத்தில் பாசமும், நேசமும் கலந்திருக்கும். தொழிலில் விருத்தியடைவார்கள்.

ரிஷபம்: அனுகூலமான நாள். எதிர்பார்த்த காரியம் கைகூடும். திருமண காரியங்கள் எளிதில் அனு கூலமாகும். முதலீடுகளுக்கு ஆதாயம் கிடைக்க யுக்திகளைக் கையாளுவார்கள்.

மிதுனம்: அலைச்சல் மிகுந்த நாள். சிலர் உடல் குறைவால் மருத்துவரின் உதவியை நாடுவார்கள். சிலர் வியாபாரத் தலத்தை விரிவுபடுத்துவதற்காக வங்கிகளின் உதவியை நாடுவார்கள்.

கடகம்: யோகமான நாள். பணம் தாராளமாகப் புழங்கும். வீட்டில் சுபகாரிய நிகழ்ச்சி இடம்பெறும். வீடு வாங்கும் எண்ணம் நிறைவேறும். பூர்வீகச் சொத்துக்களால் ஆதாயம் கிடைக்கும்.

சிம்மம்: மத்திம பலன்கள் காணப்படுகின்றன. தேவையற்ற செலவுகள் உண்டாகும். சொத்து சம்பந்தமான பிரச்சினைகள் உண்டாகும். கொடுக் கல், வாங்கலில் கவனம் தேவை.

கன்னி: இன்பமான நாள். நிதிநிலைமை வளமாக இருக்கும். தடைப்பட்டுக் கிடந்த காரியம் கைகூடும். திருமண வாய்ப்புகள் வலிய வரும்.

துலாம்: கவலையான நாள். பணவரவு குறையும். குடும்பத்தில் பிரச்சினைகள் உண்டாகும். வியா பாரத் தொழில் தேக்கமடையும். கொடுக்கல், வாங்கலில் சிக்கல்கள் உண்டாகும்.

விருச்சிகம்: விருத்தியான நாள். பணப்புழக்கம் திருப்தியைத் தரும். குடும்பத்தில் புரிந்துணர்வு அதிகரிக்கும். வியாபாரம் விருத்தியடையும்.

தனுசு: அனுகூலமான நாள். பணப்புழக்கம் தாரா ளமாக இருக்கும். தொழில் ரீதியாக இவர்களுக்கு பல வாய்ப்புகள் கிட்டும்.

மகரம்: ஆக்கபூர்வமான பலன்கள் காணப்படு கின்றன. பணவரவு வந்துசேரும். புத்திரர்களின் உதவியால் முயற்சி கைகூடும். பிரிந்திருந்தவர்கள் ஒன்று சேர்வார்கள்.

கும்பம்: துன்பமான நாள். பொருளாதாரம் நலி வடையும். குடும்பத்தில் காரசாரமான விவாதங்கள் ஏற்படும். சக ஊழியர்களின் ஒத்துழைப்புக் குறையும். பயணத்தின்போது உடைமைகள் தொலைந்து போகும்.

மீனம்: சம பலன்கள் காணப்படுகின்றன. பொருளாதாரம் ஏற்றமும், இறக்கமுமாக இருக்கும். அளவுக்கு மீறிய செலவுகள் ஏற்படும். உத்தியோகத்தர்கள் தொழிலில் அதிக அக்கறை எடுக்க வேண்டும்.

சந்திராட்டமநாள்: சித்திரை 3, 4, சுவாதி, விசாகம் 1, 2, 3 ஆகிய நட்சத்திரங்களில் பிறந்தோருக்கு இந்நாள் பல விதத்திலும் யோகமானதல்ல.

ஆலய மஹோற்சவம்

சுன்னாகம், ஏப். 28

மல்லாகம் காளிகாதேவி ஆலய மஹோற் சவப் பெரு விழா நாளை சனிக்கிழமை முற் பகல் 11 மணிக்குக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

பன்னிரண்டு தினங்கள் இடம்பெறவுள்ள மஹோற்சவத்தில் எதிர்வரும் 9 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்குத் தேர்த் திருவிழாவும், மறுநாள் புதன்கிழமை முற்பகல் 10.30 மணிக்குத் தீர்த்தத் திரு விழாவும் இடம்பெறும். (ச)

***** *****

வவுனியா, ஏப். 28

வவுனியா வெளிவட்ட வீதி அருள்மிகு ஸ்ரீ சிந்தா மணி விநாயகர் ஆலய மஹோற் சவம் எதிர்வரும் முதலாம் திகதி முற்பகல் 10.30 மணிக்கு கொடி யேற்றத்துடன் ஆரம்பமா கும்.

7 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு வேட்டைத்திருவிழாவும், மறுநாள் திங்கட்கிழமை இரவு 7 மணிக்கு சப்பைரதத் திருவிழாவும், 9 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணிக்குத் தேர்த்திருவிழாவும், மறுநாள் புதன்கிழமை காலை 9 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும்.

***** *****

சித்தன்கேணி, ஏப். 28

சித்தன்கேணி கலைநகர் கம்பம்புலோ சாமுண்டிகா உடனுறை ஆதி வைரவப் பெரு மான் ஆலய அலங்கார உற்சவம் எதிர்வரும் 2 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை ஆரம்ப மாகவுள்ளது.

தொடர்ந்து பத்துத் தினங்கள் இடம்பெறும் உற்சவத்தில் எதிர்வரும் 12 ஆம் திகதி வெள் ளிக்கிழமை காலை 10 மணிக்கு சங்காபிஷே கம் இடம்பெற்று மாலை விசேட பூசை வழி பாடும், தொடர்ந்து ஆதிவைரவப் பெருமான் வீதியுலா வருதலும் இடம்பெறும். (ச)

***** *****

பண்டத்தரிப்பு, ஏப்.28

யாழ்ப்பாணம் பண்டத்தரிப்புப் பத்திமா அன்னை ஆலயத்தின் வருடாந்த திருவிழா எதிர்வரும் 4ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

தவநாள் வழிபாடுகள் மாலையில் நடை பெற்று 12 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை நற்கருணை ஆராதனை இடம்பெறும். மறுநாள் 13 ஆம் திகதி சனிக்கிழமை யாழ்.ஆயர் பேரருட் பேர்ணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை தலை மையில் திருநாள் கூட்டுத்திருப்பலியும், திருச்சொருப பவனியும் இடம்பெறும். (ச)

குட்டித் தீவுக்கு எத்தனை போட்டி...!

வழிமூலம் - Global Risk Insights
ஆங்கிலத்தில் - Jeremy Luedi
மொழியாக்கம் - நித்தியபாரதி

இலங்கையில் இடம்பெற்ற பல பத்தாண்டு கால யுத்தம், 2009 இல் நிறைவு பெற்ற பின்னர் நாடு தற்போது அதனை அபிவிருத்தி செய்து வரும் தருணத்தில் இந்திய மாக்கடல் மீதான அனைத்துலக சமூகத்தின் அக்கறை அதிகரித்துள்ளது.

இலங்கைத் தீர்வு பல்வேறு பெரிய சக்தி வாய்ந்த நாடுகளின் கவனத்துக்கு உட்பட்டுள்ளது.

மத்திய கிழக்குக்கும் மலாக்கா நீரிணைக்கும் இடையில் கேந்திர முக்கியத்துவம் மிக்க அமைவிடத்தில் இலங்கைத் தீவு அமைந்துள்ளதன் காரணமாக உலக நாடுகளின் கவனம் இதன் மீது குவிந்துள்ளது. இவ்வாறான பல்வேறு வாய்ப்புகள் இலங்கைக்கு வந்துள்ள போதிலும், இந்தத் தீவானது சில பிரச்சினைகளுக்கும் முகங்கொடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

சீனாவின் உறவால் அதிருப்தி

உலக நாடுகளில் குறிப்பாக இந்தியா, ஜப்பான் போன்ற நாடுகள் இலங்கை மீதான சீனாவின் அதிகரித்து வரும் செல்வாக்குத் தொடர்பில் அதிருப்தியடைந்துள்ளன.

இதனால் இந்த இரண்டு நாடுகளும் இலங்கையுடனான தமது உறவைப் பலப்படுத்துவதில் ஈடுபட்டுள்ளன. ஏப்ரல் மாதம் 12 அன்று, ஜப்பானியப் பிரதமர் அபே மற்றும் இலங்கைப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோர் தமது நாடுகளுக்கிடையில் பரஸ்பர ஒத்துழைப்பை மேலும் அதிகரிப்பதற்கான கலந்துரையாடல் ஒன்றை மேற்கொண்டிருந்தனர்.

ஜப்பானின் நகர்வு

ரணில் விக்கிரமசிங்க 2015 இல் ஆட்சிக்கு வந்தார் அதன் பின்னர், ஜப்பானுக்கு இரண்டாவது தடவையாகப் பயணம் செய்துள்ளார். இந்தச் சந்திப்பின் போது இலங்கையில் கட்டுமானத் திட்டங்களை மேற்கொள்வதற்காக 410 மில்லியன் டொலர் நிதியைக் கடனாக வழங்குவதாக ஜப்பான் உடன்பட்டது. அத்துடன், திருகோணமலைத் துறைமுகத்தை அபிவிருத்தி செய்வதற்காக 9.2 மில்லியன் டொலரை மானியமாக வழங்குவதாகவும் உறுதி வழங்கப்பட்டது.

இதுமட்டுமல்லாது, இலங்கையில் அபிவிருத்திகளை மேற்கொள்வதை ஒருங்கிணைப்பதற்காக சிறப்புப் பிரதிநிதி ஒருவரை நியமிப்பதாகவும் ஜப்பான் தெரிவித்தது.

இது மட்டுமல்லாது, இலங்கை எயார்லைன்ஸ் சேவைக்கும் ஜப்பான் எயார் லைன்ஸ் சேவைக்கும் இடையில் தகவல் பரிமாற்ற உடன்படிக்கை ஒன்று மேற்கொள்ளப்பட்டது. இந்த உடன்படிக்கை ஜப்பான் மற்றும் தென்னாசியாவுக்கு இடையிலான ஆறு புதிய வான் வழிகளை அனுசரணை செய்வதற்கும் கொழும்பு மற்றும் ரோக்கியோவுக்கு இடையில் வர்த்தக மற்றும் சுற்றுலாத்துறையை விரிவாக்குவதற்கும் உதவும்.

ஜப்பானின் பிரதமர் கூளுரை!

'இந்திய மாக்கடல் சுதந்திரமாகவும் அனைத்து நாடுகளும் பயன்படுத்தத் தக்கவிதமாக அமையாவிட்டால், இப்பிராந்தியத்தில் உண்மையான செழுமை ஏற்படமாட்டாது. இதனால் அனைத்துத் தரப்பினரும் பயன்படுத்தக் கூடிய துறைமுகங்களை விருத்தி செய்வதுடன் இலங்கையை நிலையான வளர்ச்சியைக் கொண்ட தொரு மையமாக மாற்ற வேண்டிய அவசியம் உள்ளதாகவும்' ரணில் விக்கிரமசிங்கவுடனான அண்மைய சந்திப்பின் போது, ஜப்பானியப் பிரதமர் அபே தெரிவித்திருந்தார்.

சுதந்திரமான கடற் போக்குவரத்து மற்றும் ஐ.நா. கடல் சாசனத்தின் அதிகாரத்துவம் போன்றன தொடர்பில் இலங்கையால் வழங்கப்பட்ட உறுதிப்பாட்டைத் தொடர்ந்தே ஜப்பான் இவ்வாறு தெரிவித்தது. ஜப்பானின் இந்த நிலைப்பாடு இலங்கை மீதான ஜப்பானின் கவனம் எத்தகையது என்பதை உறுதிப்படுத்தும் அதேவேளையில், இலங்கையில் இருந்து சீனாவை வெளியேற்ற வேண்டும் என்பதற்கான ஜப்பானின் கருத்தாகவும் நோக்க முடியும்.

ரணில் உறுதி தெரிவிப்பு!

இந்திய மாக்கடலில் அதிகரித்து வரும் சீனாவின் பிரசன்னத்தையும் குறிப்பாக மத்திய கிழக்கிலிருந்து ஜப்பான் வரையான சுதந்திரமான கப்பல் போக்குவரத்தைக் கருத்தில் கொண்டே ஜப்பான் தனது கருத்தை வெளியிட்டிருந்தது. இலங்கை வர்த்தக மற்றும் நிதி சார் மையமாக விளங்கும் எனவும் டோகா மற்றும் சிங்கப்பூருக்கு இடையிலான மையமாக விளங்கும் எனவும் ஜப்பானுக்கான தனது அண்மைய பயணத்தின் போது பிரதமர் விக்கிரம சிங்க உறுதி வழங்கியிருந்தார்.

'வர்த்தகத்துக்கான ஒரு மையமாக இலங்கையை ஜப்பான் பயன்படுத்த வேண்டும். பொருளாதார, தொழிநுட்ப ஒத்துழைப்பு உடன்படிக்கையின் ஊடாக ஏற்கனவே எமக்கிடையில் காணப்படும் சுதந்திர வர்த்தக உடன்படிக்கையை மேலும் பலப்படுத்த வேண்டும் என நாம் எதிர்பார்க்கிறோம். இதற்காக இலங்கை, சிங்கப்பூர் மற்றும் சீனாவுடன் சுதந்திர வர்த்தக உடன்படிக்கையை மேற்கொள்ள வேண்டும் என எதிர்பார்க்கின்றது. சுதந்திர வர்த்தக உடன்படிக்கைகள் தொடர்பில் ஜப்பான், இந்தோனேசியா மற்றும் ஏனைய ஆசியன் அமைப்பைச் சேர்ந்த நாடுகளுடன் நாங்கள் பேச்சுகளை நடத்துவோம் என நம்பிக்கை கொண்டுள்ளோம்' என்று விக்கிரமசிங்க தெரிவித்திருந்தார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஜப்பானுக்குப் பயணம் செய்வதற்கு ஒரு வாரத்துக்கு முன்னர் ரோக்கியோவுக்கான ரணிலின் பயணத்தை சமப்படுத்தும் நோக்குடன் சீனா தனது உயர் மட்டப் பிரதிநிதிகளை இலங்கைக்கு அனுப்பியிருந்தது. இந்தப் பின்னணியிலேயே சீனாவுடன் சுதந்திர வர்த்தக உடன்படிக்கை ஒன்றை மேற்கொள்வது தொடர்பான இலங்கையின் முயற்சிகள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

சீனாவுடன் வர்த்தக உடன்பாடு

இந்தக் கலந்துரையாடலின்போது, இரு தரப்பு சுதந்திர வர்த்தக உடன்படிக்கை ஒன்றை மேற்கொள்வது தொடர்பாக சீன அதிகாரிகளால் வாக்குறுதிகள் வழங்கப்பட்டன. அத்துடன் சீனாவின் 21 ஆம் நூற்றாண்டுக்கான கடல் சார் பட்டுப்பாதைத் திட்டத்தில் இலங்கை முக்கிய பங்காளியாக உள்ளதாகவும் இலங்கைக்கு வருகை தந்த சீனப் பிரதிநிதிகள் புகழ்ந்துரைத்தனர். இவ்வாறான திட்டத்தின் மூலம் இலங்கை அதிகரித்து வரும் சீனாவின் அக்கறையின் மூலமும் அபேயின் சுதந்திரமானதும் திறந்த இந்திய-பசிபிக் மூலோபாயத்திலிருந்தும் இந்தியாவின் 'கிழக்கைப் பார்' (Look East) என்கின்ற கோட்பாட்டின் மூலமும் நன்மை பெறுகிறது.

உற்று நோக்கப்படும் இலங்கை!

இலங்கையுடன் இராணுவம் சார் உறவும் தற்போது வலுப்படுத்தப்படுகின்றது என்பதை இந்தியாவுடனான அண்மைய கூட்டு இராணுவப் பயிற்சியின் மூலம் உறுதிப்படுத்த முடியும். கடல்வழிப் பாதைகளுக்கு அண்மையில் கண்காணிப்பை மேற்கொள்வதை நோக்காகக் கொண்டே இந்த இராணுவப் பயிற்சி வழங்கப்பட்டது. இதற்கும் மேலாக, சீனாவுடன் இணைந்து பாகிஸ்தானால் நிர்மாணிக்கப்பட்ட ஜே.எப். 17 போர் விமானங்கள் 12 ஐக் கொள்வனவு செய்வதற்கு இலங்கை முயற்சித்தபோது இந்தியா தனது புதிய தயாரிப்பான தேஜஸ் விமானத்தை இலங்கைக்கு வழங்க முன் வந்ததது.

கரையோரக் கண்காணிப்புப் படகுகளைக் கொள்வனவு செய்வதற்காக 2016 இல் சீனாவால் இலங்கைக்குப் 11 மில்லியன் டொலர் கடனாக வழங்கப் பட்டது. இந்தக் கொள்வனவு இன்னமும் நிறைவு செய்யப்படவில்லை. ஜப்பானும் இரண்டு கண்காணிப்புப் படகுகளை இலங்கைக்கு வழங்கியுள்ளது.

பலம் பெற்ற நாடுகள் கவலை

சீனாவானது தனது இராணுவத் தளத்தை விரிவுபடுத்துவதற்காக இலங்கையில் நிலைகொண்டு விடும் என்று ஜப்பான், இந்தியா மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகள் கவலை கொள்கின்றன. இதற்கு இலங்கையின் இராணுவ மற்றும் பூகோளச் செல்வாக்குகளே காரணமாகும். 'நாங்கள் எமது அனைத்து துறைமுகங்களையும் விரிவாக்க விரும்புகிறோம். இவை அனைத்தும் வர்த்தக சார் நோக்கங்களுக்கு மட்டுமே பயன்படுத்தப்படுகின்றன. எந்தவொரு நாடும் எமது துறைமுகங்களை இராணுவ நோக்குக்குப் பயன்படுத்த முடியாது' என்று பிரதமர் ரணில் அறிவித்திருந்தார்.

ரணிலின் இந்த அறிவிப்பானது சீனாவுக்குக் கிடைத்த ஒரு வெற்றியாகவே நோக்க முடியும். ஏனெனில் இலங்கை மீதான சீனாவின் அதிகரித்து வரும் செல்வாக்குத் தொடர்பில் பல்வேறுவிமர்சனங்கள்முன்வைக்கப்பட்ட நிலையில் எந்தவொரு நாடும் இலங்கைத் துறைமுகங்களைத் தமது இராணுவத்தேவைகளுக்காகப்பயன்படுத்த முடியாது என்று பிரதமர் அறிவித்தமை சீனா மீதான பிற நாடுகளின் எதிர்மறைக் கருத்தை நீக்கியுள்ளதாகவே சீனா கருதுகிறது.

ஆகவே, இலங்கையின் இந்த அறிவிப்பு சீனாவுக்கு வெற்றியாக உள்ளது. ஆனால், நடைமுறை உண்மை இதற்கு மாறானதாகவே உள்ளது. முதலாவதாக, இலங்கை இவ்வாறான தொரு கோட்பாட்டை அமுல்படுத்துமாயின் இந்த விடயத்தில் அமெரிக்காவின் விருப்புக்களைப் புறந்தள்ள முடியாது. குறிப்பாக எந்தவொரு நாடும் இலங்கையைத் தமது இராணுவத் தேவைகளுக்காகப் பயன்படுத்த முடியாது எனக் கூறினாலும் தற்போதும் சீனா இலங்கையில் நன்மை பெற்று வருகிறது. இலங்கையை இராணுவச் செல்வாக்கை நிலைப்படுத்த ஒரு நாடாக மாற்றுவதன் மூலம் இந்திய மாக்கடலின் வல்லரசு நாடுகளான இந்தியாவும் அமெரிக்காவும் தமது நடவடிக்கைகளை எவ்வித அச்சுறுத்தலுமின்றி முன்னெடுக்க முடியும் எனக் கருதுகின்றன.

போட்டியிடும் நாடுகளும் எதிர்க்கும் மக்களும்

இந்தப் போட்டி இலங்கைத் துறைமுக அபிவிருத்திக்காக உலக நாடுகள் பலவும் தமது முதலீடுகளை மேற்கொள்வதற்குக் காலாக அமைந்துள்ளது. அம்பாந்தோட்டை துறைமுகம் மீது சீனாவும், திருகோணமலைத்துறைமுகம் மீது ஜப்பான் மற்றும் இந்தியாவும், யாழ்ப்பாணத்தில் அமெரிக்காவும் என்று உலகின் சக்தி வாய்ந்த நாடுகள் தமது இருப்பைப் பலப்படுத்துவதற்கு இலங்கையின் துறைமுகங்களை அபிவிருத்தி செய்ய முன்வந்துள்ளன.

2016 இல் இலங்கையின் பொருளாதார வளர்ச்சி 4.4 சதவீதமாக இருந்தால் வெளிநாட்டு முதலீடுகளைப் பெற்று இலங்கையின் பொருளாதாரத்தை வளர்ச்சியடையச் செய்ய வேண்டிய தேவை காணப்படுகிறது. இது இலங்கையின் உள்நாட்டிலும் சில பிரச்சினைகளை உருவாக்கியுள்ளது.

கட்டுமானத் திட்டங்கள் தொடர்பில் இலங்கை ஏனைய நாடுகளுடன் செய்து கொள்ளும் சில ஒப்பந்தங்கள் அநீதியானவை எனச் சுட்டிக்காட்டி இலங்கையர்கள் ஆர்ப்பாட்டங்களை மேற்கொண்டுள்ளனர். இதில் திருகோணமலையில் எண்ணெய்க்களஞ்சியம் ஒன்றை உருவாக்குவதற்காக இந்தியாவுடன் மேற்கொள்ளப்படவுள்ள திட்டத்துக்கு உள்நாட்டு மக்கள் எதிர்ப்புத் தெரிவித்தனர்.

இதேபோன்று எட்டு தொடக்கம் பத்து மைல்கள் வரை கொழும்புத் துறைமுகத்தை விரிவுபடுத்தும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட போது அதற்கும் மக்கள் எதிர்ப்புத் தெரிவித்தனர். இதேபோன்று அம்பாந்தோட்டைத் துறைமுகத்தக்கு அருகிலுள்ள 15 ஆயிரம் ஏக்கர் நிலத்தை பொருளாதார வலயமாக மாற்றுவதற்கான சீனாவின் திட்டத்தை எதிர்த்தும் மக்கள் ஆர்ப்பாட்டங்களை மேற்கொண்டனர்.

இத்திட்டத்துக்காக சீனாவினால் 1.4 பில்லியன் டொலர்களும் அம்பாந்தோட்டையில் புதிய பொருளாதார வலயம் ஒன்றை அமைப்பதற்காக 13 பில்லியன் டொலர்களையும் சீனா வழங்க முன்வந்தது. நிதி நகரம், துறைமுகம் போன்ற பல்வேறு அபிவிருத்திகள் மூலம் 83 ஆயிரம் தொழில் வாய்ப்புக்கள் வழங்கப்படும் எனக் கூறப்பட்டது. ஆனால், உள்ளூர் மக்களின் ஆர்ப்பாட்டம் காரணமாக இந்தத் திட்டம் இடை நிறுத்தப்பட்டுள்ளது.

அம்பாந்தோட்டை திட்டம் தொடர்பில் மேற்கொள்ளப்படும் எதிர்ப்பு சீன - இலங்கை உறவில் பெரியளவில் தாக்கத்தைச் செலுத்தவில்லை. மாறாக இலங்கை மீதான சீனாவின் நிலைப்பாடு இன்னமும் பலமாகவே உள்ளது. இலங்கை அரசுதன்னைநிலைப்படுத்திக் கொண்டு செயற்படும் போது அதிகாரத்துவம் மிக்க நாடுகள் மத்தியில் காணப்படும் போட்டியின் தாக்கத்திலிருந்து தன்னைப் பாதுகாப்பதுடன் தனக்கும் தனது மக்களுக்கும் நன்மையளிக்கத்தக்க செயற்பாடுகளை நோக்கிச் செல்ல முடியும்.

காலைக்கதிர்

"ஓ! அமெரிக்கா ...!! எங்கே போகிறாய்...?" 162

வான்.வேணு கிருஷ்ணா

சிரியாவை போல வட கொரியா இல்லாதபோதும், அதன் மூலோபாய நோக்கங்களை தொடர்வதற்கு பியோங் யாங்கிற்கு எதிராக இராணுவப் படையை பயன்படுத்த அமெரிக்கா தயங்காது. வடகொரியா அதன் அணு ஆயுதங்களை பயன்படுத்தும் எந்தவொரு முயற்சியினையும் எடுக்கும் பட்சத்தில் ''செயல் திறன் மிக்க மற்றும் பெரிய விடையிறுப்பை சந்திக்க நேரிடுமென அமெரிக்க பாதுகாப்புச் செயலர் ஜேம்ஸ் மாட்டிஸ் ஏற்கனவே அதனை எச்சரித்துள்ளார். வட கொரிய தொழிற்றுறையையும், இராணுவத்திறன்களையும் அழிப்பதற்கு போதுமான அளவு அணு ஆயுதங்களை தாங்கிச் சென்று ஏவிவிடும் திறனை Carl Vinson தாக்குதல் குழு மட்டுமே கொண்டுள்ளது.

மேலும், சிரியா மீதான தாக்குதல்கள் வடகொரியா மீதான அமெரிக்கத் தாக்குதலை தவிர்க்க வழி செய்யுமென யாரும் முடிவிற்குவர முடியாது. ரஷ்யாவையும், சீனாவையும் அடிபணியச் செய்வதற்கான, அதன்மூலம் யூரேசிய நிலப்பகுதிகளை அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் மேலாதிக்கத்திற்கு இலக்காக்கும் ஒரு மிகப்பரந்த மூலோபாயத்தின் வெறும் பினாமி இலக்குகளாகவே டமாஸ்கஸும், பியோங் யாங்கும் உள்ளன. முதலில் மாஸ்கோவுடன் மோதவேண்டுமா அல்லது பெய் ஜிங் உடனா என்பது பற்றிய தந்திரோ பாயங்கள் குறித்து அமெரிக்க அரசியல், இராணுவ மற்றும் புலனாய்வு அமைப்புக்குள் கசப்பான உள்மோதல்கள்நிகழ்கின்றநிலையிலும், மனித இனத்திற்கு பேரழிவுகரமான விளைவுகளை தரும் சிரியா மற்றும் வடகொரியா ஆகிய இரு நாடுகள் மீதான தாக்குதல்களையும் ஒதுக்கிவிட முடியாது.

வட கொரியா மீதான தாக்குதலுக்கு ட்ரம்ப் தயாரிப்பு செய்து கொண்டிருப்பதாக அமெரிக்கஊடகங்கள் அறிவிக்கின்றன

வட கொரியா மற்றொரு அணு ஆயுத சோதனை நடத்த இருப்பதாக அது கருதும்போது ட்ரம்ப் நிர்வாகம் ''வழமையான இராணுவ ஆயுதங்களைக்கொண்டு முன்கூட்டிய தாக்குதல்'' ஒன்றை நடத்த தயாராகி வருவதாக அமெரிக்காவின் NBC நியூஸ் ஏப்ரல் 13 அன்று அதன் மாலை செய்தியில் ஒரு ''பிரத்தியேக'' செய்தியை வெளியிட்டது.

''பல மூத்த அமெரிக்க உளவுத்துறை அதிகாரிகளை'' NBC அதன் செய்திக்கு ஆதாரமாக மேற்கோடிட்டது.

வட கொரிய ஆட்சி, சீனா மற்றும் ரஷ்யா இரண்டினது எல்லையை ஒட்டியுள்ள அதன் எல்லை பகுதியான Punggye-ri தளத்தில் ஓர் அணுசக்தி சோதனைக்கான தயாரிப்பில் முன்னேறிய கட்டத்தில் இருப்பதை எடுத்துக் காட்டி குற்றஞ்சாட்டும் செயற்கைகோள் படங்களை அந்த அமெரிக்க ஊடகம் வெளியிட்டது. வட கொரிய ஆட்சி இவ்வாரயிறுதியில் அதன் ஸ்தாபக சர்வாதிகாரி Kim Il-sung இன் பிறந்தநாளை மிகப்பெரும் நிகழ்வுகளுடன் கொண்டாடி வருகிறது. அதுபோன்ற கடந்த கால நிகழ்வுகள், நீண்டதூர ஏவுகணை பரிசோதனைகள் அல்லது ஓர் அணுசக்தி வெடிப்பைக் கொண்டிருந்தன.

ஆப்கானிஸ்தானில் ஒரு தலை மறைவு வலையமைப்பு என்று கூறப்படும் ஒன்றின்மீது நேற்று வானிலிருந்து பெரிய வெடிமருந்து குண்டு வீசப்பட்டமை (Massive Ordnance Air Blast & MOAB) வெறுமனே அந்த குண்டின் தாக்கம் குறித்து சோதிப்பதை மட்டுமே நோக்கமாகக் கொண்டதல்ல, மாறாக பதுங்குகுழி அமைப்புகளைத் தாக்க அமெரிக்க இராணுவம் அணு ஆயுதங்களைப் பிரயோகிக்க வேண்டிய அவசியமில்லை என்பதை எடுத்துக் காட்டுவதாகவும் ஆகும்.

MOAB வீசப்பட்ட பின்னர் வியாழன் அன்று ட்ரம்ப் குறிப்பிடுகையில், ''இது வட கொரியாவுக்கு ஒரு சேதியை அனுப்பி உள்ளதா என்று எனக்குத் தெரியவில்லை. அது அவ்வாறு அனுப்பி இருந்தாலும் இல்லையென்றாலும் அது எந்த வித்தியாசத்தையும் ஏற்படுத்தாது'' என்றார். வட கொரியா ''ஒரு பிரச்சினை - அந்த பிரச்சினை கவனத்தில் எடுக்கப்படும்'' என்றும் அறிவித்தார்.

வட கொரியாவில் ஒரு பெரிய இராணுவத் தாக்குதல் நடத்தி, பின்னர் அந்த நடவடிக்கை ஏறத்தாழ நிச்சயமாக தூண்டிவிடக்கூடிய முழு அளவிலான போரை நடத்த அமெரிக்க இராணுவம் அதற்கு அவசியமான சகல படைகளையும் நிலைநிறுத்தி உள்ளது.

நூறாயிரக் கணக்கான தென் கொரிய துருப்புகள் மற்றும் சுமார் 30,000 அமெரிக்கர்களை தயார் செய்வதற்கு வருடாந்தர Foal Eagle பயிற்சிகள் மூடு மறைப்பாக பயன்படுத்தப்பட்டு, அவர்கள் உயர் தயார்நிலையில் வைக்கப் பட்டுள்ளனர். தென் கொரியாவில் உள்ள அமெரிக்க பிரிவுகளுக்கு மத்தியில் 2011 இல் ஒசாமா பின்லேடனை கொன்ற உயரடுக்கு கொலைப்படையும் உள்ளது. வட கொரிய சர்வாதிகாரி கிம் ஜொங்-உன் மற்றும் ஏனைய மூத்த ஆட்சி பிரமுகர்களைப் படுகொலை செய்வதற்கான ''இரகசிய கொலை'' வேட்டைகள் அமெரிக்க இராணுவ உத்தியோகபூர்வ திட்டமிடலின் பாகமாக உள்ளன.

கடற்படை சிறுபோர்க்கப்பல்களும் மற்றும் எண்ணிக்கையில் தெரியாத அணு ஆயுத நீர்மூழ்கிக் கப்பல்களும்

அறிவுறுத்தப்பட்டிருப்பதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன

தென் கொரியாவைப் போலவே, ஏனைய அமெரிக்க கூட்டாளிகளும் போர் தயாரிப்புகளில் இணைந்துள்ளன. ஜப்பானிய பிரதம மந்திரி ஷின்ஜோ அபே அரசாங்கம் கார்ல் வின்சன் தாக்கும் குழுவுடன் இணையுமாறு பல சிறு போர்க்கப்பல்களுக்கு உத்தரவிட்டுள்ளதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. டோக்கியோ ''கூட்டு தற்காப்பு'' என்ற சாக்குபோக்கை பயன்படுத்தி வருகிறது, ஆக்ரோஷ இராணுவ நடவடிக்கைகள் மீதான அந்நாட்டின் இரண்டாம் உலக போருக்குப் பிந்தைய அரசமைப்பு தடைகளைக் கடந்து வர அபே இந்த கருத்துருவை தான் 2015 இல் ஜப்பானிய நாடாளுமன்றத்தில் நகர்த்தினார்.

மத்திய ஆஸ்திரேலியாவின் Pine Gap தளத்தில் அமைக்கப்பட்டுள்ள முக்கிய அமெரிக்க-ஆஸ்திரேலிய செயற்கைகோள் மற்றும் தொலை தொடர்பு இடைமறிப்பான்கள், அமெரிக்க தாக்குதல்களுக்கு சாத்தியமான இலக்குப் பட்டியலை அடையாளங் கண்டு பட்டியலிட வட கொரியா மீது ஒருங்குவிந்திருக்குமாறு அறிவுறுத்தப் பட்டிருப்பதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. ஏப்ரல் தொடங்கியதில் இருந்து குறைந்த பட்சம் ஆஸ்திரேலிய போர்க் கப்பல் ஒன்றாவது ஆசியாவில் வழமையான நடவடிக்கைகள் என்ற போலிக் காரணத்தில் அனுப்பப்பட்டுள்ளது.

தென் கொரியாவில் நிறுவப்பட்ட Terminal High Altitude Area Defense (THAAD)

ஒரு வாரத்திற்கு முன்னர் ஒரு சிரிய விமானத் தளத்தைத் தாக்க பயன்படுத்தப்பட்ட அதே டோமாஹாக் எனும் போர்க்கப்பல் ஏவுகணைகளைக்கொண்டு ஆயுதமயப்படுத்தப்பட்டு, கொரிய கடல்களில் வலம் வருகின்றன. விமானந்தாங்கி போர்க்கப்பல் கார்ல் வின்சன் மற்றும் அதனைத் தாக்கும் குழு ஆகியவை அவற்றுடன் இணைய அனுப்பப் பட்டுள்ளன. டசின் கணக்கான அமெரிக்க போர் விமானங்கள் ஜப்பான் மற்றும் தென் கொரியாவின் விமானத் தளங்களில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. திட்டமிட்டுத் தாக்கும் B-1 வகை போர் விமானங்கள் பெப்ரவரியில் சத்தமில்லாமல் வடக்கு ஆஸ்திரேலியாவுக்கு நகர்த்தப்பட்டிருந்தன. அங்கிருந்து அவற்றை விரைவாக அந்த தீபகற்பத்திற்கு நகர்த்திக் கொள்ள முடியும்.

மத்திய ஆஸ்திரேலியாவின் Pine Gap தளத்தில் அமைக்கப்பட்டுள்ள முக்கிய அமெரிக்க-ஆஸ்திரேலிய செயற்கைக்கோள் மற்றும் தொலைத்தொடர்பு இடைமறிப்பான்கள், அமெரிக்க தாக்குதல்களுக்கு சாத்தியமான இலக்குப் பட்டியலை அடையாளங்கண்டு பட்டியலிட வட கொரியா மீது ஒருங்குவிந்திருக்குமாறு

அமெரிக்கத் தாக்குதலுக்கு பதிலடி கொடுக்க, தென் கொரியா, ஜப்பான், குவாம் அல்லது ஏனைய இடங்கள் மீது வடகொரியா அணு ஆயுத ஏவுகணைகளைச் செலுத்தும் சம்பவத்தில், அமெரிக்கா அவற்றை சுட்டு வீழ்த்த கடந்த மாதம் தென் கொரியாவில் நிறுவப்பட்ட Terminal High Altitude Area Defense (THAAD) எனும் அமைப்பைச் சார்ந்துள்ளது. ஒருவேளை வட கொரியா அணு ஆயுதங்களைக் கொண்டு பதிலடி கொடுக்காவிட்டாலோ அல்லது கொடுக்க முடியாவிட்டாலோ கூட, ஒரு கோடிக்கும் அதிகமான மக்கள் தொகை கொண்ட தென் கொரிய தலைநகரம் சியோல் 10,000 என மதிப்பிடப்படும் வட கொரிய வெடிகுண்டுகளின் வீச்சு எல்லைக்குள் உள்ளது.

அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் 25 ஆண்டுகால தொடர்ச்சியான போர் மற்றும் சதிக்குப் பின்னர், கடந்த வார சம்பவங்கள் கேள்விக்கிடமின்றி பண்பு ரீதியில் ஒரு புதிய கட்டத்தை குறிக்கிறது. வொஷிங்டன் துரிதமாக ரஷ்யாவுடன் பதற்றங்களை அதிகரித்து, சிரியாவில் இன்னும் கூடுதலாகத் தாக்குதல்களுக்கு அச்சுறுத்துகின்ற நிலையில், அது வடகிழக்கு ஆசியாவில் செயலூக்கத்துடன் சதி நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகிறது, இது சீனாவுடன் ஒரு நேரடியான மோதலில் போய் முடியக் கூடியதாகும். 1950-53 கொரிய போர் காலத்தில் இருந்து, பெய்ஜிங் அதன் வடக்கில் உள்ள ஸ்ராலினிஸ அரசை அதன் சொந்த எல்லைகளுக்கும் தெற்கில் உள்ள அமெரிக்கப் படைகளுக்கும் இடையிலான ஒரு முக்கிய இடைத்தடை பகுதியாகக் காண்கிறது.

ஆசியாவில் சீனா ஒரு போட்டி மூலோபாய மற்றும் பொருளாதார அதிகார மையமாக மாறுவதைத் தடுப்பதே அமெரிக்க ஆளும் உயரடுக்கின் உறுதியான தீர்மானமே வட கொரியாவுக்கு எதிரான அமெரிக்க போர் முனைவுக்குப் பின்னால் உள்ள நிஜமான உந்துதல் என்பது சீன ஆட்சிக்கு நன்றாகவே தெரியும்.

வட கொரியா மீதான சாத்தியமான அமெரிக்கத் தாக்குதலுக்கு சீனாவின் விடையிறுப்பு, இந்த நிலைமையில் மிகவும் அனுமானிக்கவியலாத அம்சங்களில் ஒன்றாகும்.

Global Times மற்றும் People's Daily போன்ற சீன அரசுக்கு சொந்தமான பத்திரிகைகளது தலையங்கங்களும் கருத்துரைகளும், சீன ஜனாதிபதி ஜிஜின்பிங் மற்றும் சீன இராணுவம், குறைந்தபட்சம், வட கொரியாவிற்குள் அவற்றின் சொந்த தலையீட்டை பரிசீலித்து வருவதாக குறிப்பிடுகின்றன. ஏப்ரல் 10 இல் வெளியான Global Times தலையங்கம் ஒன்று, குறிப்பிட்ட நிலைமைகளின்கீழ், ''மக்கள் விடுதலைப்படை (PLA) DPRK வட கொரிய அணுசக்தி ஆலைகள் மீது அதன் சொந்த தாக்குதல் களைத் தொடங்கும்'' என்று குறிப்பிட் டது.

ஏப்ரல் 13 இல் வெளியான Global Times இன் மற்றொரு தலையங்கம், வட கொரியா அதன் அணு ஆயுதத்திட்டத்தைக் கைவிடுமாறு அறிவுறுத்தியது. என அது குறிப்பிட்டது: DPRK மீது அமெரிக்கா இராணுவத் தாக்குதல்களைத் தொடங்கவில்லை என்றாலும், நீண்டகால தடையாணைகளுக்கு DPRK ஆல் தாக்குப் பிடித்து இருக்க முடியாது. DPRK ஏற்கனவே உலகின் மிகவும் தனிமைப்பட்ட நாடாக மாறி உள்ளது மற்றும் ஏறத்தாழ 'முழுமையாக முற்றுகையிடப்பட்டுள்ளது.' நவீன நாடுகளில் எதுவொன்றும் இவ்விதத்தில் நீடித்திருக்க முடியாது. வட கொரியாவிற்கு அவசியமான சகல பாதுகாப்பையும் சீனாவினால் வழங்க முடியும் என்று அறிவித்தது.

வட கொரியாவின் ஒருசில ஏற்றுமதிகளில் ஒன்றும் மற்றும் வெளிநாட்டு செலாவணிக்கான ஆதாரங்களில் ஒன்றுமான அதன் நிலக்கரி கொள்முதல்கள் அனைத்தையும் இரத்து செய்து, பெய்ஜிங் பியொங்யாங் மீது பொருளாதார அழுத்தத்தைத் தீவிரப்படுத்தி உள்ளது. சீன துறைமுகங்களில் இருந்து வட கொரிய கப்பல்கள் இந்த வாரம் திருப்பி அனுப்பப்பட்டன.

வட கொரிய எல்லையில் சுமார் 150,000 சீன துருப்புகள் திரட்டப்பட்டிருப்பதாக வந்த செய்திகளை சீன அரசாங்கம் ''கட்டுக்கதைகள்'' என்று உதறிவிட்ட போதினும், அதுபோன்ற வாதங்கள் தொடர்ந்து கசிந்து கொண்டிருக்கின்றன.

நிச்சயமாக இருப்பது என்னவென்றால், அமெரிக்க ஏகாதிபத்தியம் அதன் நலிந்து வரும் உலகளாவிய மேலாதிக்கத்தைப் பேணும் ஈவிரக்கமற்ற மற்றும் முன்பினும் அதிக பொறுப்பற்ற முயற்சிகளின் காரணமாக, பத்து மில்லியன் கணக்கான மக்களின் வாழ்க்கை அபாயத்தில் உள்ளது.

(கேள்வி தொடரும்...)

தமிழ்த் தேசிய எழுச்சி

ஈழத் தமிழினத்தின் தேச விடுதலை பற்றி சிந்தனைப் புடீசீயை முன்னெடுத்தவர்களுள் விடுதலைப் புலிகளின் தத்துவ ஆசிரியரான அன்ரன் பாலசிங்கம் மிக முக்கியமானவர். அரசியல் ஞானம் மிக்க தத்துவ ஆசிரியர்.

ஈழத் தமிழினத்தின் உயிரிய வரலாற்றுப் பதிவு ஏடான 'போரும் சமாதானமும்' என்ற நூலை அவர் படைத்திருக்கின்றார். இலங்கைத் தீவில் தமிழ்த் தேசிய எழுச்சி பற்றி அந்நூலில் அவர் குறிப்பிடும் நுட்பமான – நுண்ணியமான – விடயங்களை இக்கட்டுரைத் தொடரில் நாம் அறிந்து கொள்ளலாம்.



புலிகளின் போரியல் வளர்ச்சியும் நோர்வேயின் சமாதான முயற்சியும்

வன்னி மீட்புச் சமர்: ஓயாத அலைகள் III

ஓயாத அலைகள் மூன்று என்ற குறியீட்டுப் பெயருடன் நிகழ்ந்த வன்னிப் பெரும் சமரின் முழுப் பரிமாணத்தையும் சிங்கள அரசாலும் இராணுவத் தலைமையாலும் சரிவரக் கிரகித்துக் கொள்ள முடியவில்லை. இருபதாயிரம் இராணுத்தினர் ஐந்நூறு சதுர மைல் பாதுகாப்பு வலயத்தில், கெட்டியாகக் கட்டிக் காத்த பெரும் படைத் தளங்கள் புலிகளின் புயல் வேகத் தாக்குதலில் ஒவ்வொன்றாக ஒரு சில நாள்களில் நிலைகுலைந்து வீழ்ந்த விசித்திரத்தை அவர்களால் புரிந்துகொள்ள முடிய வில்லை. நம்ப முடியாதது ஒன்று நடந்து விட்டது போலச் சிங்கள அதிகார வர்க்கம் திகைத்து நின்றது.

இரண்டரை ஆண்டு காலமாகப் பகீரத முயற்சி எடுத்து, பல்லாயிரம் படையினரைப் பலிகொடுத்து, அங்குலம் அங்குலமாக இரத்தம் சிந்திக் கைப்பற்றிய பிரதேசங்களும், ஆக்கிரமித்த அந்நிலத்தில் கட்டியெழுப்பப்பட்ட பாதுகாப்புக் கோட்டைகளும், ஐந்தே நாள்களில் பேரலையால் அடித்துச் செல்லப்பட்ட மண்வீடுகள் போன்று கரைந்து அழிந்து போனமை சிங்கள தேசத்துக்கு அதிர்ச்சியையும் ஏக்கத்தையும் கொடுத்தன. உலக விடுதலை வரலாற்றில் என்றுமே நிகழாத இந்தப் புதுமையான இராணுவச்சாதனையையும் அதனால் விளைந்த விபரீதமான பின்னடைவையும் வர்ணிப்பதற்குச் சரியான சொற்பதங்கள் கிடையாது ஊடக உலகம் தடுமாறியது.

விடுதலைப் புலிகள் இயக்கத்தால் இந்த மாபெரும் இராணுவச் சாதனையை எப்படி நிலைநாட்ட முடிந்தது என்ற கேள்வியை ஊடகங்கள் எழுப்பின. யாழ்ப்பாணச்சமரில் தோற்கடிக்கப்பட்டு, வன்னிக் காடுகளில் பின்வாங்கிய ஒரு சிறிய கெரில்லா இயக்கம் எவ்விதம் இத்தகைய பூதாகார வளர்ச்சியையும் இராட்சதப் பலத்தையும் பெற்றது என்பதை இராணுவ ஆய்வாளர்களால் விளக்கமுடியவில்லை. புலிகளின் வளர்ச்சியைச் சரிவர எடைபோடத் தவறிய இவர்கள், இராணுவத் தளர்ச்சியையே இந்தப் பெரும் பின்னடைவுக்குக் காரணமாகக் காட்டினர். பதினைந்து ஆண்டுகளுக்கு மேலாக முடிவின்றி, பயனின்றி, அர்த்தமின்றித் தொடரும் இந்த யுத்தத்தில் வெற்றி நிச்சயமற்றதாகவும் சாவு நிஜமானதாகவும் மாறியுள்ளமையால் சிங்கள ஆயுதப் படைகள் மனம் முறிந்து, ஊக்கமிழந்து, போராடும்

உறுதி தளர்ந்து போயுள்ளதாக இவர்கள் விளக்கமளித்தனர். இந்த வன்னிப் பெரும்சமர் பற்றிப் பல பரிமாணங்களில் பல ஆய்வுகள் முன்வைக்கப்பட்ட போதும் ஓர் உண்மையைச் சிங்களதேசம் புரிந்து கொண்டது. அதாவது, விடுதலைப்புலிகளைப் போரில் வெற்றி கொள்வது இலகுவான காரியமல்ல என்பதைச் சிங்கள மக்கள் உணரத் தொடங்கினர்.

ஓயாத அலை மூன்று படை நடவடிக்கையில் களப் பலியான இராணுவத்தினரின் தொகையை எவருமே சரியாக மதிப்பிட முடியவில்லை. இரண்டாயிரம் வரையான படையினர் பலியாகியிருக்கலாமெனப் புலிகள் தரப்பு மதிப்பிட்டது. மூவாயிரத்துக்கும் மேற்பட்ட இராணுவத்தினர் கொல்லப் பட்டுள்ளனர் என எதிர்க்கட்சியாகிய ஐக்கிய தேசியக்கட்சி நாடாளுமன்றத்தில் குரலெழுப்பியது. தணிக்கைத் திரையால் உண்மையை மூடி மறைத்தது அரசு. 110 பேர் மட்டுமே கொல்லப் பட்டனர் என முழுப் பூசணிக்காயை சோற்றில் மறைக்க முயன்ற அரசின் கேலிக் கூத்தை எவருமே நம்பவில்லை.

தமிழீழ மண்மீட்புப் போரில், ஓயாத அலைகள் மூன்று வரலாறு காணாத போரியல் சாதனையைப் படைத்தது. சிங்களக் குடியேற்றம் விழுங்கிய மண லாறு மண் உட்பட வன்னியின் பெரு நிலங்கள் விடுதலைப் புலிகளின் நிர்வாகக் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரப்பட்டன. இந்தப் பெரு வெற்றியின் பயனாக, படைச் சமவலு புலிகளுக்குச் சாதகமாகத் திரும்பியது. தலைவர் பிரபாகரனின் நேர்த்தியான நெறிப்படுத்தலும், களத் தளபதிகளின் நிதானமான மதிநுட்பமான வழிநடத்தலும், அணித் தலைவர்களதும் புலிப் போராளிகளின் அபாரமான சாதனைகளும் ஒன்றிணைந்தனவாக எமது போரியல் வரலாற்றில் ஒரு புதிய, புரட்சிகரமான அத்தியாயம் படைக்கப்பட்டது.

ஆனையிறவு முற்றுகைச் சமர்

ஓயாத அலைகள் மூன்றின் நான்காவது கட்டமாக அமைந்த ஆனையிறவுச் சமர் வன்னிப் பெரும் சமர்களுக்கு எல்லாம் சிகரமாக அமைந்தது. ஆனையிறவுப் பெருந்தளத்தின் புவியியல் கட்டமைவு, அதன் படை வலு, ஆயுத வலு, அதன் கேந்திர முக்கியத்துவம் ஆகியவற்றை நன்கு பரிசீலனை செய்தே ஒரு நுட்பமான தாக்குதல் திட்டத்தை வகுத்தார் தலைவர் பிரபாகரன். மூலோபாயம், வியூக அமைவு, படை நகர்வு எல்லாவற்றிலுமே இந்தத் திட்டம் வித்தியாசமானது; புதுமையானது. ஆனையிறவுச் சமரை ஒரு முற்றுகைச் சமராகவே நெறிப்படுத்தினார் பிரபாகரன்.

ஒருபுறம் கடலும், மறுபுறம் நீரேரிகளும், இன்னொரு புறத்தில் தரையும் சதுப்பு நிலங்களுமான புவியியல் அமைப்பைக் கொண்ட ஆனையிறவுப் படைமுகாம், யாழ்ப்பாணக் குடாநாட்டையும் வன்னியையும் துண்டித்து வைத்திருக்கும் தடை முகாமாகவே இயங்கி வந்தது. வட தமிழீழத்தின் தொண்டைமுள்ளாகவும் யாழ்ப்பாணத்தின் சிறை வாசலாகவும் செயற்பட்டு வந்த இந்தப் படைத் தளத்தை அழித்தொழிக்க 1991 ஆம் ஆண்டு எமது இயக்கம் மேற்கொண்ட வலிந்துதாக்குதல் நடவடிக்கை வெற்றியளிக்கவில்லை. வெற்றிலைக் கேணியில் பெரிய தொரு மீட்புப் படையைத் தரையிறக்கி ஆனையிறவைத் தக்க வைத்துக் கொண்டது சிங்கள அரசு. அந்தத் தாக்குதல் நடவடிக்கையை அடுத்து, ஆனையிறவுப் படைமுகாம் படிப்படியாகப் பல பிரதேசங்களைக் கபளீகரம் செய்து, அதன் நிலப்பரப்பு விரிவாக்கப்பட்டதுடன் அதன் பாதுகாப்பும் பலப்படுத்தப்பட்டது. பரந்தனிலிருந்து பளை வரை கண்டி வீதியை விழுங்கியபடி நீட்சிபெற்று, வெற்றிலைக்கேணி, கட்டைக்காடு, உடுத்துறை, முள்ளியான் போன்ற தென்கிழக்குக் கரையோரப் பகுதிகளையும், வடக்கே புல்லாவெளியையும் உள்ளடக்கியதாக, ஒரு பரந்த பிரதேசத்தில், இயக்கச்சியிலும் ஆனையிறவிலும் இரு பெரும் படை முகாம்களையும், கரையோரத் தளங்களையும், பல்வேறு சிறுமுகாம்களையும் கடினமாகக் கட்டப்பட்ட காவல் அரண்களையும் கொண்ட தான ஒரு பிரமாண்டமான கூட்டுப் படைத்தளத் தொகுதியாக (A Massive Military Complex) ஆனையிறவு விளங்கியது.

ஓயாத அலைகளாக வன்னிப் பெரும் சமர்களில் திகைப்பூட்டும் போரியல் சாதனைகளைப் படைத்த பிரபாகரனுக்கு ஆனையிறவுப் படைத்தளம் ஒரு சவாலாக அமைந்தது. யாழ்ப்பாண மீட்புக்குத் தடைக்கல்லாக விளங்கிய இந்தப் படைத்தளத்தைத் தகர்த்தெறியும் தந்திரோபாயத்தைக் கொண்டதாக்குதல் திட்டத்தை அவர் வரைந்தார். ஆனையிறவு மீதான முந்திய தாக்குதல் திட்டம் பிசகிய காரணங்களை ஆய்வு செய்து பார்த்ததில் அவருக்கு ஓர் உண்மை புலனாகியது. ஆனையிறவைக் கைப்பற்றுவதாயின் கடற்படையின் கடலாதிக்கத்தைக் கட்டுப்படுத்துவதோடு, தென்கிழக்காகவுள்ள பிரதேசங்களையும் எமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வர வேண்டும் என்பதை அவர் உணர்ந்து கொண்டார். இதன் அடிப்படையில் ஒரு புதுமையான முற்றுகைச் சமருக்கான போர்த் திட்டத்தை வகுத்தார் பிரபாகரன்.

இந்தத் திட்டத்துக்கு அமைவாக ஓயாத அலைகள் மூன்றின் மூன்றாம் கட்டம் முடுக்கிவிடப்பட்டது. 1999 ஆம் ஆண்டு 10 ஆம் நாள் இருள் பொழுதில், விடுதலைப் புலிகளின் தாக்குதல் அணிகள் கட்டைக்காடு, புல்லாவெளி படைமுகாம்களின் முன்னணிக் காவலரண்களை அழித்து முன்னேறின. பல மணிநேரமாக நடைபெற்ற கடும் மோதலின் பின்பு இந்தப் படை முகாம்கள் புலிகளின் வசம் வீழ்ந்தன. இதனையடுத்து, வெற்றிலைக் கேணித் தளம் எமது போராளிகளின் தாக்குதலுக்கு இலக்காகியது. தரை வழியாகப் புலிகளின் ஒரு பெரும் படையணியும், கடல் வழியாகக் கடற் புலிகளின் தாக்குதல் அணியுமாகக் கூட்டிணைந்து வெற்றிலைக்கேணிப் படைத்தளம் மீது உக்கிரமான தாக்குதலைத் தொடுத்தன. வெற்றிலைக் கேணிப் படையினர் அபாய அறிவிப்பு விடுத்தமையைத் தொடர்ந்து சிறிலங்கா கடற்படை அந்த இடத்துக்கு விரைந்தது. ஒரு கட்டளைக் கப்பலும், எட்டு டோறாப் பீரங்கிகளும் களத்தில் குதித்தன. போர் விமானங்கள் குண்டுபொழிய தரையிலும் கடலிலும் மூர்க்கமான சண்டை தொடர்ந்தது. கொந்தளித்த கடலில், சக்திவாய்ந்த கடற்கலங்களுக்கு எதிராக வீராவேசத்துடன் போரிட்டனர் கடற்புலிகள். இறுதியில் வெற்றிலைக் கேணிக்கு மீட்பு உதவி செய்ய முடியாது கடற் படைக்கலங்கள் பின்வாங்கின. தனிமைப்படுத்தப்பட்ட வெற்றிலைக் கேணித் தளம் டிசெம்பர் மாதம் 11 ஆம் நாள் பிற்பகல் புலிப்படை வீரர்களிடம் வீழ்ந்தது. வெற்றிலைக்கேணியின் வீழ்ச்சியுடன் முல்லைத்தீவு மாவட்டத்தின் கரையோரக் கடலாதிக்கம் கடற் புலிகளின் கைக்கு வந்தது. வெற்றிலைக் கேணியைக் கைப்பற்றியமையை அடுத்து, முள்ளியான், புல்லாவெளி, ஆழியவளை ஆகிய இடங்களில் அமைந்திருந்த சிங்கள இராணுவத்தின் படை முகாம்களை அழித்து அந்தப் பிரதேசங்களைத் தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்தனர் புலிப் படை வீரர்கள். இந்தப் பிரதேசங்கள் கைப்பற்றப்பட்டமையை அடுத்து, ஆனையிறவின் தென்கிழக்குப் பாதுகாப்பு வலயம் விடுதலைப் புலிகளின் ஆதிக்கத்தின் கீழ் வந்தது. அத்துடன், வெற்றிலைக் கேணிக்கடற்தளத்தை பறிகொடுத்தமையால் கடல்வழி விநியோகத்தையும் ஆனையிறவுப் பெரும் தளம் இழந்தது.

(தொடரும்...)

அண்மையில் இந்தியத் தலைநகர் புதுடில்லியில் நடைபெற்ற சார்க் நாடுகளின் தென்னாசிய இலக்கியத் திருவிழாவில் இலங்கையிலிருந்து கலந்து கொண்ட குழுவினரோடு கவிஞர் சோ. பத்மநாதன் கவிதை வாசிப்பதையும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆங்கில மொழிக் கற்பித்தல் சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி கந்தையா ஸ்ரீ கணேசன் 'ஆங்கிலத்தில் இலங்கை தமிழ்க் கவிதைகள்' எனும் தலைப்பில் உரையாற்றுவதையும் படங்களில் காணலாம். (இ)

ஹொலண்ட் நாட்டை வதிவிடமாகக் கொண்ட கிருபமூர்த்தி விஜயராணி தென்மராட்சி கச்சாய்ப் பிரதேசத்தில் ஜே/324 கிராம அலுவலர் பிரிவில் உள்ள வறிய குடும்பங்கள் சிலவற்றுக்கு அத்தியாவசியப் பொருள்கள் மற்றும் பண உதவிகளை அண்மையில் வழங்கினார். இந்த நிகழ்வு கச்சாய் ஜே/324 கிராம அலுவலர் அலுவலகத்தில் இடம்பெற்றது. இந்த உதவிகள் மிளிர்விற்கு கை கொடுப்போம் அமைப்பின் ஊடாக வழங்கப்பட்டு இருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ-21)

மண்கும்பான் சாட்டி வெள்ளைக் கடற்கரை பள்ளிவாசலில் பாரம்பரியமாக பனையோலையில் (பிலா சோறு) விருந்து வழங்கும் நிகழ்வும் யாழ். முஸ்லிம்களின் ஒன்றுகூடலும் அண்மையில் நடைபெற்றன.

4 ஆயிரத்துக்கும் அதிகமான தமிழ், முஸ்லிம் மக்கள் இதில் கலந்து கொண்டனர். (ஐ-19)

யாழ்.நீரிழிவு கழகத்தின் ஏற்பாட்டில் எஸ்லோன் ஸ்தாபனத்தின் ஆதரவில் பதினைந்து நீரிழிவு விழிப்பூட்டல் பதாகைகள் யாழ். நகரின் பல்வேறு இடங்களிலும் பொருத்தப்பட்டன. யாழ். பிரதான வீதியிலுள்ள வை.எம்.சி.ஏ.வளாகத்தில் பொருத்தப்பட்ட பதாகையை வண.பிதா டானியல் ஜெயரூபன் திரை நீக்கம் செய்து வைக்கிறார். (இ-19)

அரியாலை செல்வி மிஷாந்தி செல்வராசாவின் ''காகிதங்கள் பேசுதடி'' கவிதை நூல் வெளியீட்டு விழா நீராவியடி இலங்கைவேந்தன் கலைக் கல்லூரியில் அரியாலை சக்தி கலாசாரமன்ற இயக்குநர் இராசையா மதிகரன் தலைமையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் சிறப்பு விருந்தினராக வடமாகாண சபை உறுப்பினர் கே.என். விந்தன் கனகரத்தினம் கலந்து கொண்டார்.

வெளியீட்டுரையை 'கம்பிகளின் மொழி' பிறேமும் அறிமுகவுரையை யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீட உதவிப் பதிவாளர் இரத்தின சிங்கம் சர்வேஸ்வரனும் ஆற்றினர்.

இந்த நிகழ்வில் எழுத்தாளர்கள், கலை இலக்கிய ஆர்வலர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ஐ)

தென்மராட்சிப் பிரதேச செயலக மனித வள அபிவிருத்திப் பிரிவினர் மனித வலு வேலைவாய்ப்புத் திணைக்களத்தின் அனுசரணையுடன் மேற்கொண்ட பிரதேச தொழிற்சந்தை சாவகச்சேரி இந்துக் கல்லூரி மண்டபத்தில் தென்மராட்சி பிரதேச செயலக மனித வள அபிவிருத்தி உத்தியோகத்தர் சி.சிவரூபன் தலைமையில் நடைபெற்றது.

பிரதேச இளைஞர் யுவதிகளுக்கான வேலைவாய்ப்பு மற்றும் தொழிற் கல்வியைப் பெற்றுக்கொடுக்கும் முகமாக நடத்தப்பட்ட இந்தத் தொழிற்சந்தையில் 350 இற்கும் மேற்பட்ட இளைஞர், யுவதிகள் பங்குபற்றி பயன்பெற்றனர். 24 இற்கு மேற்பட்ட நிறுவனங்கள் இதில் கலந்து கொண்டன. (ஐ)

செயற்பட முடியாத நிலைமையில் தெல்லிப்பழை புற்றுநோய்ப் பிரிவு!

கதிரியக்க இயந்திரம் பழுதடைந்துள்ளமையே காரணம்

தெல்லிப்பழை, ஏப்.28

தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையின் புற்றுநோய் சிகிச்சைப் பிரிவின் கதிரியக்க இயந்திரம் பழுதடைந்து காணப்படுவதால் அதன் சேவைகள் முடங்கிப்போயுள்ளன.

இந்தநிலையில் வடக்கு மாகாணத்தில் உள்ள புற்று நோயாளர்கள் பல்வேறுபட்ட சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

புதிதாக புற்றுநோய் உள்ளது என இனங்காணப்பட்ட நோயாளர்களுக்கு உடலின் எந்தப் பாகத்தில் கதிரியக்க சிகிச்சை அளிக்கவேண்டும் என்பதைக் கண்டறியும் Moulding Machine பழுதடைந்துள்ளது.

ஏற்கனவே கதிரியக்க சிகிச்சை பெற்றுவரும் நோயாளர்களுக்கு வழமைபோன்று சிகிச்சை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. ஆயினும், அவர்களுக்கு வேறு பாகங்களில் தாக்கம் ஏற்பட்டு இருப்பின் அதனைக் கண்டறிய முடியாத நிலைமையும் காணப்படுகின்றது.

இந்தக் கதிரியக்க இயந்திரம் பழுது பார்க்கும் நிறுவனத்துடனான ஒப்பந்த காலம் முடிவடைந்துள்ளமையாலேயே கதிரியக்க இயந்திரம் திருத்தப்படாத நிலைமை காணப்படுகின்றது. அந்த நிறுவனத்துக்கு ஒப்பந்தத்தைப் புதுப்பிப்பதற்குக் கிட்டத்தட்ட ஒரு கோடி ரூபா தேவை என்று வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இலங்கையிலே மாகாண அரசின் நிர்வாகத்தின் கீழ் உள்ள புற்றுநோய் வைத்திய சாலையாகத் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை மட்டுமே காணப்படுகின்றது.

இந்த வைத்தியசாலையில் புற்றுநோய் சிகிச்சைப் பிரிவு ஆரம்பிக்கப்பட்டு போதிய நிதி மற்றும் ஆளணிப் பற்றாக் குறையால் பல்வேறு அசௌகரியங்களுடன் இயங்கி வருகின்றது.

தற்போது தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையின் புற்று நோய்க்கதிரியக்க சேவையும் சீராகச் செயற்படவில்லை என்று நோயாளர்கள் விசனம் தெரிவித்தனர்.

இது தொடர்பாகத் தெல்லிப்பழை ஆதார வைத்திய சாலை நோயாளர் நலன்புரி சங்கத்தின் செயலாளர் லயன் சி.ஹரிகரன் கருத்துத் தெரிவிக்கையில்:-

தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் வடக்கு மாகாணத்துக்கு அப்பால் இருந்தும் அதாவது, அனுராதபுரம், புத்தளம் ஆகிய பகுதிகளில் இருந்தும் புற்றுநோயாளர்கள் வந்து சிகிச்சை பெறுகின்றார்கள். நோயாளர்களுக்கு சகல வசதிகளுடனான தரமான வைத்திய சேவையை வழங்க வேண்டும் என்பதற்காகவே எமது சங்கம் பாடுபடுகின்றது.

வடக்கு மாகாண அரசு எமது வைத்தியசாலையை ஒரு பொருட்டாகக் கருதி அதன் தேவைகளைப் பூர்த்தி செய்யத் தவறிவருகின்றமை மனவேதனையைத்தருகின்றது.

புற்றுநோய் சிகிச்சைப் பிரிவை முழுமையாக இயக்குவதற்கு உரிய ஆளணி மற்றும் நிதி வளங்கள் மாகாண அரசிடம் இல்லை என்பதையும் நாம் ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும்.

அதற்காகத்தான் நாம் இந்த வைத்தியசாலையை தரம் உயர்த்துமாறும் பல்வேறுபட்ட தரப்புகளிடம் அழுத்தம் கொடுத்து வருகின்றோம்.

தற்போதும் சி.ரி. ஸ்கான் ஒன்று மத்திய அரசால் வடக்கு மாகாணத்துக்கு வழங்கப்படுகின்றது. அதனை எமது மாகாண சுகாதார அமைச்சு அவசர சேவையுடைய தெல்லிப்பழை புற்றுநோய் வைத்தியசாலையை விடுத்து, மிகவும் நோயாளர் சேவையைக் குறைவாக வழங்கும் வேறு ஒரு வைத்தியசாலைக்கு வழங்கவுள்ளது என்றவாறான செய்திகளும் வெளியாகியுள்ளன.

தற்போது புற்றுநோய் சிகிச்சைப் பிரிவின் மிக முக்கிய சேவையாக உள்ள கதிரியக்க இயந்திரம் பழுதடைந்துள்ளது. அதன் அவசியத்தையும் அவசரத்தையும் புரிந்து கொண்டு சீர் செய்யும் நிலையில் வடக்கு மாகாண அரசு இருக்கின்றது என எமக்குத் தென்படவில்லை. சுகாதாரத் தினைக்களமும் இது தொடர்பில் நடவடிக்கை எடுப்பதாகத் தெரியவில்லை.

ஆகவே, வடக்கு மாகாண அரசுஎமது வைத்தியசாலையை சரிவர தம்மால் இயக்க முடியாது என்று உணர்ந்தால் மத்திய அரசிடம் கையளிப்பதே ஒரே வழி. நோயாளர்கள் பாதிக்கப்படுவதை ஒருபோதும் எம்மால் ஏற்றுக்கோள்ள முடியாது.- என்றார். (ஐ)

வீரசிங்கம் மண்டபத்தில் நாளை ஆடல் அரங்கம்

யாழ்ப்பாணம், ஏப்.28

சர்வதேச நடன தினத்தை முன்னிட்டு யாழ். இந்திய துணைத்தூதரகத்தால் ஆடல் அரங்கம் சிறப்பு நடன நிகழ்வு நாளை சனிக்கிழமை மாலை 4 மணிக்கு யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

வடக்கு மற்றும் மத்திய மாகாண நடன ஆசிரியர்களான திருமதி சாந்தினி சிவநேசன், திருமதி கிருஷாந்தி ரவீந்திரா, திருமதி பத்மினி செல்வேந்திரக்குமார், திருமதி ஷிவாந்தி இராமமூர்த்தி, திருமதி உமா சிறிதரன், யாழ்.கல்வி வலய நடன ஆசிரியர்கள், யாழ். இந்து மகளிர் கல்லூரி நடன ஆசிரியர்கள், நாகேஷ் வரன் ஆகியோரின் நெறியாள்கையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் சாரி நடனம் - கதகளி, காளிங்க நிருத்தியம் - தில்லானா, காவடிக்கிந்து, கரகம் மற்றும் ஏர் உழவர்கள், நாட்டிய நாடகம், ராஜஸ்தான் கிராமிய நடனம், நாட்டிய நாடகம் (யாழ்.கல்வி வலயம்) ஆகியன இடம்பெறவுள்ளன.

சிறப்புரையை இந்திய துணைத்தூதுவர் அ.நடராஜன் வழங்குவார். (ச-19)

அறிமுக நிகழ்வு

பொதுசன நூலக வாசகர் வட்ட யுகதர்மம் என்னும் நாடகமும் பதிவுகளும் என்ற அறிமுக நிகழ்வு நாளை சனிக்கிழமை பிற்பகல் 3.45 மணிக்கு நூலகக் கேட்போர் கூடத்தில் அ.யேசுராசா தலைமையில் இடம்பெறவுள்ளது. (ஐ)

அதிஷ்டங்களை அள்ளித் தரும் அட்சய திருதியை

உலகெலாம் நிறைந்து விளங்குகின்ற எல்லாம் வல்ல பரம்பொருளான காத்தற் கடவுள் ஸ்ரீ மகாவிஷ்ணுவின் சக்தியை அம்பிகை ஸ்ரீ மகாலட்சுமியின் திருவருள் சுரக்கும் அற்புதநாள் அட்சயதிருதியை. அதிர்ஷ்டங்கள் பலவற்றை அள்ளித் தருகின்ற இந்த அட்சய திருதியை நாளில் சைவமக்களாகிய நாம் நல்ல எண்ணங்களுடன் ஆலய தரிசனம் செய்து, இறைவழி பாடாற்றி மகாலட்சுமி தேவியின் கருணை மிகு கடாட்சம் பெற்று உலகில் சுக வாழ்வு வாழலாம்.

இன்றும் நாளையும் அட்சய திருதியை நாள்கள்

இந்த அற்புத அதிர்ஷ்ட நாளில் தங்கம் வாங்கினால் இலட்சுமீகரம் நிறைந்த மங்கள வாழ்வு கிட்டும் என்பது ஆன்றோர் நம்பிக்கை. அந்த வகையில் செல்வத்துக்கு அதிபதியான இலட்சுமி தேவியின் நாமாவளிகளைப் பாராயணஞ் செய்து வணங்கி வழிபட்டுத் தங்கம் வாங்கி, நல்ல சுபிட்சம் நிறைந்த சுகவாழ்வுக்கு இன்று அடி கோலிக் கொள்ளவேண்டும்.

இந்த அட்சய திருதியை நாளில் தான் ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மாவிடம் யாசகம் கேட்டுச் சென்ற குசேலரின் வாழ்வில் குபேர சம்பத்துக் கிட்டியதாகச் சொல்லப்படுகிறது. சுசீலை செய்து கொடுத்த அவலுடன் சென்ற குசேலர் ஸ்ரீ கிருஷ்ணனைச் சந்தித்து உரையாடி மகிழ்ந்தார். அப்போது கிருஷ்ணன் குசேலரிடம் தங்கள் மனைவி எனக்கு ஏதாவது கொடுத்து அனுப்பியிருப்பாரே என்று கேட்டார். உடனே அவர் தான் கொண்டு வந்த அவல் முடிச்சை எடுத்துக் கொடுத்தார். உடனே கிருஷ்ணர் ஆவலோடு அவலை எடுத்துச் சாப்பிடும் போது ''அட்சயா'' என்றார். அடுத்த கணம் குசேலர் குபேரனாகி விட்டார். மறுபடியும் ஒரு பிடி அவலை எடுத்த கிருஷ்ணனைத் தடுத்தான் ருக்மணி. ஏன் தெரியுமா? அன்றைய நாள் அட்சயதிருதியை என்றபடியால் தமது செல்வம் முழுவதுமே போய்விடும் என்று கருதியே அவ்வாறு செய்தாள்.

ஆதலால் இன்றைய அட்சய திருதியை மிகச்சிறப்புமிக்க செல்வம் தருகின்ற புனித புண்ணியத் திருநாளாகும். இன்றைய இந்த அற்புத அதிசய நன்னாளில் தங்கம் வாங்க முடியாதவர்கள் உப்பு, மஞ்சள், சீனி, சீரகம், கடுகு என்பனவற்றையும் வாங்கிக் கொள்ளலாம்.

இது ஒரு புதுமையான அற்புத அதிசய பலன்களை அள்ளித் தருகின்ற அருமையான நாளாகும். இன்றைய இந்த இனிய நன்னாளில் இறைவழிபாடாயற்றி ஸ்ரீ மகாவிஷ்ணுவையும் இலட்சுமியையும் சிந்தித்து வஞ்சித்துச் சேவித்து நின்று அவனருளாலே அவன்தாள் வணங்கி புனிதப் பிறவியாகிய மனிதப் பிறவி எடுத்ததன் மாண்புமிக்க பயனைப் பெற்றுயதி பெறுவோமாக.

— தெய்வத் தமிழச்சூடர் இராசையா ஸ்ரீதரன்

இளைஞன் மீது பெண்கள் தாக்குதல்!

சாவகச்சேரி, ஏப்.28

கொடிகாமம் நாகநாதன் வீதியைச் சேர்ந்த இளைஞன் ஒருவன் பெண்களால் கடுமையாகத் தாக்கப்பட்டுக் காயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளார். 19 வயதுடைய இளைஞனே இவ்வாறுதாக்கப்பட்டவராவார்.

மேற்படி நபர் தாக்கப்பட்டமைக்கான காரணம் தெரியவரவில்லை.

இது தொடர்பாக கொடிகாமம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-21)

குப்பை மேட்டு அனர்த்தம்: விசாரிக்க நீதிபதி நியமனம்

மீதொட்டமுல்ல குப்பை மேட்டு அனர்த்தம் குறித்து விசாரிக்க ஓய்வுபெற்ற நீதிபதி சந்திரதாஸா நாணயக்கார நேற்றுமுன்தினம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நியமித்தார். (உ)

மேதின நிகழ்வுகள்

புதிய ஜனநாயக மார்க்சிச - லெனினிசக் கட்சியின் புரட்சிகர மேதினம் எதிர்வரும் முதலாம் மாலை 5 மணிக்கு யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறுவுள்ளது.

அன்று பிற்பகல் 3 மணிக்கு மேதினப் பேரணி கொக்குவில் சந்தியிலிருந்து ஆரம்பமாகவுள்ளது.

ஒக்ரோபர் சோசலிசப் புரட்சியின் பாதையில் அனைத்து ஒடுக்குமுறைகளையும் எதிர்த்து மக்கள் அதிகாரத்தை வென்றெடுக்கவும், உழைக்கும் மக்களையும் ஒடுக்கப்படும் தேசிய இனங்களையும் ஒன்றிணைக்கும் வகையில் இந்த மேதினம் அனுஷ்டிக்கப்படவுள்ளது.

உணவுப் பொருள்களின்விலை அதிகரிப்பு, 15 வீத வற்வரி, அந்நிய உள்நாட்டுகடன்சுமை, காணாமற்போனவர்கள்பிரச்சினை, சுழற்சி முறைப் போராட்டங்களுக்குரிய தீர்வின்மை, காணிப் பிரச்சினை போன்ற விடயங்களை முன்னிறுத்தி ஊர்வலம் நடத்தப் படவுள்ளது. (ஐ-19)

***

வடக்கு மாகாணக் கூட்டுறவாளர்களின் மேதின நிகழ்வு இந்த வருடம் புதுக்குடியிருப்பில் நடைபெறவுள்ளது.

புதுக்குடியிருப்பு சிவன் கோயில் முன்பாகப் பேரணி ஆரம்பமாகி அங்கிருந்து புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி பொன்விழா மண்டபத்தை வந்தடையும். அங்கு கூட்டுறவாளர்களின் எழுச்சி மேதினக் கூட்டம் நடைபெறும் என்று ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (ச)

***

தொழிலாளர் ஒத்துழைப்பு அமைப்பின் மேதின நிகழ்வுகள் எதிர்வரும் முதலாம் திகதி மாலை 4 மணிக்கு யாழ். நூலகசிற்றுண்டிச்சாலை மண்டபத்தில்நடைபெறவுள்ளன. இதில் இடதுசாரி மற்றும் தொழிலாளர் அமைப்புகளைச் சார்ந்தோர் உரையாற்றுவர்.

தொழிலாளர்சமூகத்தை உடன் வெளியிடுக. தற்காலிக, அமைய, வெளிக்கள ஊழியர்களின் பதவிகளை நிரந்தரமாக்குக, கடைகளது சிட்டைந்திகள், ஊழியர்களுக்கு நியாய சம்பளத்தை வழங்குக போன்ற கோரிக்கைகளை முன்வைத்து இந்தக் கூட்டம்நடத்தப்படவுள்ளது. (ஐ)

உட்கட்சி விவகாரங்கள் தொடர்பில் எதிர்க்கட்சிகள் பேசத் தேவையில்லை!

சபாநாயகர் தம்பிதுரை காட்டம்

உட்கட்சி விவகாரம் தொடர்பில் எதிர்க்கட்சிகள்பேசத்தேவைஇல்லை என மக்களவை துணை சபாநாயகர் தம்பிதுரை தெரிவித்துள்ளார்.

அ.தி.மு.கவின் இரு கட்சிகளும் இணைவது தொடர்பில் பல்வேறு அரசியல் தலைவர்கள் கருத்துத் தெரிவித்து வருகின்றமைதொடர்பில் சென்னை விமான நிலையத்தில் வைத்து செய்தியாளர்களிடம் கருத்து தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

அ.தி.மு.க-வின் இரு அணிகளும்இணைவதற்கான சுமுகமான சூழ் நிலை தற்போது ஏற்பட்டுள்ளது. அதற்கானமுயற்சியில் இருதரப்பினரும் ஈடுபட்டுள்ளனர். எங்களது கட்சி விவகாரங்கள் பற்றி ஏனைய கட்சிகளால்முன்வைக்கப்படும் கருத்துக்களுக்குநாங்கள் பதில் கூறவேண்டிய அவசியமும் இல்லை. -என்றார்.

இரண்டாகப் பிளவுபட்டிருக்கும் அ.தி.மு.கவின் இரு அணிகளையும் ஒன்றாக இணைப்பதற்கான முயற்சிகள்மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில், அது குறித்து தி.மு.க.உள்ளிட்டஏனைய கட்சிகள் பல்வேறு விமர்சனங்களை முன்வைத்து வருகின்றமைகுறிப்பிடத்தக்கது. (ச)

அ.தி.மு.கவின் இரு அணிகளும் இணையும் நிலையில்

தமிழக அரசியலில் அடுத்தடுத்து திடீர் திருப்பங்கள், மாற்றங்கள் வரும்!

இரகசிய பேச்சில் முக்கிய முடிவுகள் எட்டப்பட்டன

மாறி மாறி கருத்துக்களைகூறுகின்றமையால் பல்வேறு குழப்பங்கள் ஏற்படுகின்றன. அதனால் எங்கள் அணியின் குழு தலைவர் வைத்திலிங்கம் மட்டுமே இனி பேச்சு நடத்துவார்என எடப்பாடி அணியைச்சேர்ந்தஅமைச்சர் செங்கோட்டையன் தெரிவித்துள்ளார்.

சென்னைமாநகராட்சி வளாகத்தில் தியாகராயரின் 166 ஆவது பிறந்த நாள் விழா அரசு சார்பில் கொண்டாடப்பட்டது. இந்நிகழ்வில் கலந்து கொண்டுஉரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இருஅணிகளும்இணைவதற்கான முயற்சியில் ஈடுபடுகின்றமையால் அரச பணிகள் முடங்குகின்றன என பலவாறான கருத்துக்களைத் தெரிவிக்கின்றனர். அது தவறு. தமிழக அரசு சிறப்பாக செயற்பட்டுக் கொண்டிருக்கிறது. -என்றார்.

இரகசியப் பேச்சு

அ.தி.மு.க. இரு அணிகளின் தலைவர்களுக்கிடையே கடந்த செவ்வாய்க்கிழமை இரகசியப் பேச்சு இடம்பெற்றது எனத் தெரிவிக்கப்படுகிறது. இரவு 8 மணிக்குத் தொடங்கிய இந்தப் பேச்சு நள்ளிரவு ஒரு மணிவரைநீடித்துள்ளது. இதன்போது பல முக்கிய முடிவுகள்எடுக்கப்பட்டன என தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த ரகசிய பேச்சை எடப்பாடி மற்றும் பன்னீர் அணியைச் சேர்ந்தவர்கள் சென்னையில் உள்ள ஒருநட்சத்திர விடுதியில் நடத்தினர்.

எடப்பாடி அணி சார்பில் அமைச்சர் வைத்திலிங்கம், செங்கோட்டையன்ஆகியோரும்,பன்னீர் அணிசார்பில்கே.பி.முனுசாமி, நத்தம் விசுவநாதன் ஆகியோரும் இந்த இரகசிய பேச்சில் ஈடுபட்டனர்என இந்திய ஊடகங்கள்செய்திவெளியிட்டுள்ளன.

அதிகாரபூர்வ பேச்சு தொடங்கும்பட்சத்தில் தமிழக அரசியலில் அடுத்தடுத்து பரபரப்பானதிருப்பங்கள் ஏற்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (ச)

தினகரனுடன் சென்னை புறப்பட்டது டில்லி பொலிஸ்

டி.டி.வி.தினகரனை அழைத்துக் கொண்டு டில்லிபொலிஸார்நேற்றுக் காலை9.55மணியளவில் ஏர்இந்தியாவிமானம்மூலம் சென்னை புறப்பட்டனர் எனத்தெரிவிக்கப்பட்டது.

இரட்டை இலைசின்னம்பெறலஞ்சம்கொடுத்த வழக்கில் கைது செய்யப்பட்டடி.டி.வி.தினகரனை 5 நாள்கள் பொலிஸ் காவலில் வைத்து விசாரிக்க டில்லி மாவட்ட நீதிமன்றம் அனுமதி அளித்தது.

இதையடுத்து,அவரை சென்னை, கொச்சி ஆகிய இடங்களுக்கு அழைத்துச் சென்று விசாரணைநடத்த பொலிஸார் முடிவு செய்தனர்.அதனடிப்படையில், தினகரன்சென்னைஅழைத்துவரப்படுகிறார். சென்னையில் உள்ள தினகரன் வீட்டில்டில்லிபொலிஸார் சோதனைமேற்கொள்வார்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ச)

இலங்கைக் கடற்படையினரால் கடந்த இரண்டரை ஆண்டுகளாகச் சிறைபிடிக்கப்பட்ட 143 படகுகளை மீட்க வேண்டும் என வலியுறுத்தி இராமேஸ்வரம் கடற்கரையில் மணற் சிற்பம் வரையப்பட்டிருக்கின்றமையைப் படத்தில் காணலாம். (ச)

வைகோவுக்கு ஜூன் 2 வரை விளக்க மறியல் நீடிப்பு

சென்னை,ஏப். 28

விடுதலைப்புலிகளை ஆதரித்துப் பேசியமை காரணமாகத் - தேசத்துரோக வழக்கில் கைது செய்யபட்ட ம.தி.மு.க. பொதுச்செயலாளர் வைகோவுக்கு எதிர்வரும் ஜூன் மாதம் 2 ஆம் திகதி வரை விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது.

மேற்படி வழக்கு சென்னை மாவட்ட முதன்மை அமர்வு நீதிமன்றத்தில் நீதிபதி நசீமாபானு முன்னிலையில் நேற்று வியாழக்கிழமை எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன்போதே அவரின் விளக்க மறியலை நீடித்து உத்தரவிடப்பட்டது.

கடந்த 2009 ஆம் ஆண்டு தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு ஆதரவாகவும், இந்திய இறையாண்மைக்கு எதிராகவும் கருத்துகளை வெளியிட்டார் எனக் கூறி வைகோ மீது தேசத்துரோக வழக்கு பதிவுசெய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ச)

2 ஜி அலைக்கற்றை ஊழல் வழக்கு: ஜூலை மாதம் 15 ஆம் திகதி தீர்ப்பு!

முன்னாள் மத்திய தி.மு.க. ஆ.ராசா மற்றும் அமைச்சர் கலைஞர் கருணாநிதியின் மகள் கனிமொழி ஆகியோருக்கு எதிரான 2ஜி அலைக் கற்றை ஊழல் வழக்குக்கு எதிர்வரும் ஜூலை மாதம் 15 ஆம் திகதி தீர்ப்புவழங்கப்படும் என மத்திய புலனாய்வு சிறப்பு நீதிமன்ற நீதிபதி ஓ.பி.சைனி தெரிவித்துள்ளார்.

குற்றம் சாட்டப்பட்டவர்கள்கூடுதல்ஆவணங்களைத் தாக்கல் செய்ய விரும்பினால் ஜூலை 5 ஆம் திகதிக்குள் சமர்ப்பிக்க வேண்டும் என்று நீதிபதி ஓ.பி.சைனி மேலும் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய முற்போக்குக் கூட்டணி ஆட்சியின் போது2ஜிஅலைக்கற்றை ஒதுக்கீடு செய்ததில் முறைகேடுநடந்ததுஎன முறைப்பாடு எழுந்தது. இதையடுத்து, டில்லி மத்திய புலனாய்வுசிறப்பு நீதிமன்றத்தில் மத்திய புலனாய்வுத் துறை 2 வழக்குகளைத் தாக்கல் செய்தது. இதுபோல அமலாக்கல்துறை ஒரு வழக்கைத் தாக்கல் செய்தது. இந்தமூன்றுவழக்குகளையும் நீதிபதி ஓ.பி.சைனி விசாரணை நடத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

முதல் வழக்கில் ஆ.ராசா, கனிமொழி மற்றும் முன்னாள்தொலைத் தொடர்பு செயலாளர்

சித்தார்த், ஆ.ராசாவின் முன்னாள் செயலாளர் ஆர்.கே.சந்தோலியா, சுவான் டெலிகாம் புரமோட்டார்சின் ஷாகித் பால்வா, வினோத் கோயங்கா, யுனிடெக் நிறுவனத்தின் நிர்வாக மேலாளர் சஞ்சய் சந்திரா, குசேகான் புரூட்ஸ் அண்ட் வெஜிடபிள்ஸ் நிறுவனத்தின் ஆசிப் பால்வா, ராஜீவ் அகர்வால், கலைஞர் டி.வி. இயக்குநர் சரத்குமார் உட்பட 14 பேர் மற்றும் ஸ்வான் தொலைத் தொடர்பு நிறுவனம், ரிலையன்ஸ் தொலைத் தொடர்பு நிறுவனம், யுனிடெக் வயர்லெஸ் (தமிழ்நாடு) நிறுவனம் ஆகியவற்றின் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

இரண்டாவது வழக்கில் எஸ்ஸார் குரூப், புரமோட்டார்கள் ரவி ரூயா, அன்சுமன் ரூயா, லூப் டெலிகாம் புரமோட்டார்கள் கிரண் கேதான், அவருடைய கணவர் ஜ.பி.கேதான், எஸ்ஸார் குரூப் இயக்குநர் விகாஷ் ஷரப் மற்றும் லூப் டெலிகாம், லூப் மொபைல் இந்தியா, எஸ்ஸார் டெலிஹோல்டிங் ஆகிய 3 நிறுவனங்கள்மீதுகுற்றம் சாட்டப்பட்டுள்ளது.

அமலாக்கல்துறை தொடர்ந்த பணமோசடி வழக்கில் கலைஞர் டி.விக்கு ரூ.200 கோடி வழங்கப்பட்ட குற்றச் சாட்டில் ஆ.ராசா, கனிமொழி, ஷாகித் பால்வா, வினோத் கோயங்கா, ஆசிப் பால்வா உட்பட 19 பேர் மீதும் 2014 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது. இதில் தி.மு.க. தலைவர் கருணாநிதியின்மனைவி தயாளு அம்மாளின் பெயரும் இடம்பெற்றுள்ளது.

குற்றம் சுமத்தப்பட்டவர்கள் மீதான குற்றம் நிரூபிக்கப்பட்டால் ஆறு மாதங்கள் முதல் ஆயுள் தண்டனை வரை விதிக்கப்பட வாய்ப்பு உள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது. (ச)

வடகொரியாவின் ஏவுகணைத் திட்டங்களுக்கு முற்றுப்புள்ளி வைக்க அமெரிக்கா தீர்மானம்!

வடகொரியாவுக்கு அமெரிக்காவும் இடையில் பனிப்போர் இடம் பெற்றுவரும் நிலையில், வடகொரியாமேற்கொண்டு வரும் அணு மற்றும் ஏவுகணைத் திட்டங்களுக்கு முற்றுப் புள்ளி வைக்கும் நோக்கில் அதற்கு அழுத்தம் தரும் விதத்தில் ராஜ்ஜிய ரீதியான நட வடிக்கைகளை எடுக்க அமெரிக்கா தீர்மானித்துள்ளது.

சென‌ட் சபையில் உள்ள அனைத்து உறுப்பினர்களுடன் நடத்தப்பட்ட ஒரு சிறப்புக்கூட்டத்துக்குப் பின், அமெரிக்கஜனாதிபதிடொனால்ட்ட்ரம்ப் மேற்படி முடிவை அறிவித்தார்.

அமெரிக்காவை போருக்கு வருமாறு வடகொரியா பகிரங்கமாக மிரட்டல் விடுத்துள்ள நிலையில், தடைகளை மேலும் இறுக்க அமெரிக்கா எடுத்துள்ள இந்தத் திட்டம் தொடர்பில் முழுமையாக விவரிக்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

வடகொரியாவின் செயற்பட்டால் ஆத்திரமடைந்துள்ளஅமெரிக்கா அணு மற்றும் ஏவுகணைத் திட்டங்களை கைவிடுமாறு வடகொரியாவின் நட்பு நாடான சீனாவிடம் வலியுறுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ச)

அமெரிக்காவால் தென் கொரியாவில் நிறுவப்படவுள்ள ஏவுகணைத் தடுப்பு அமைப்பை எதிர்க்கிறது சீனா!

தென் கொரியாவின் தென்பகுதியில் நிறுவப்படவுள்ள அமெரிக்காவின் சர்ச்சைக்குரிய ஏவுகணைத் தடுப்பு அமைப்பை நிறுவும் நடவடிக்கைக்கு சீனா கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக சீன வெளியுறவு அமைச்சர் யாங் ஜீச்சி தெரிவிக்கையில்:-

அமெரிக்காதற்போது தென் கொரியாவில் செயற்படும் விதமானது, இப் பகுதியை போரில் தள்ளும் சூழ்நிலையை ஏற்படுத்தியுள்ளது.

அமெரிக்கா, கட்டுப்பாட்டுடன்நடந்துகொள்ள வேண்டும். அதனை விடுத்து தேவையற்ற விடயங்களை மேற்

கொள்வதை ஏற்றுக் கொள்ள முடியாது. அதே நேரத்தில், வடகொரியாவும் அணு ஆயுத மேம்பாடு போன்ற விடயங்களை கைவிட்டு அமைதியை ஏற்படுத்த உதவ வேண்டும்.-என்றார். (ச)

பொம்மை ஆயுதங்களை வைத்து படம் காட்டியது வடகொரியா !

ஆதாரத்துடன் வெளியிட்டது அமெரிக்கா

வடகொரியா பொம்மை ஆயுதங்களை வைத்து புகைப்படம் வெளியிட்டமையை அமெரிக்க இராணுவ நிபுணர்கள் கண்டறிந்துள்ளனர்.

கடந்த ஏப்ரல் 15 ஆம் திகதி வட கொரியாவை நிறுவிய அதிபர் கிம் இல் சொங்கின் 105 ஆவது பிறந்த தினத்தை முன்னிட்டு பியோங் யாங்கில் மிகப்பெரியஇராணுவஅணிவகுப்பை வட கொரியா நடத்தியது. இந்த அணிவகுப்பின் போது தங்களிடம் உள்ள பயங்கர ஆயுதங்களை வெளி உலகுக்குக் காட்டி மிரட்டியது.

இந்நிலையில், இந்த அணிவகுப்பின்போது எடுக்கப்பட்ட புகைப்படங்களை ஆய்வு செய்த அமெரிக்க இராணுவ நிபுணர்கள்குழுஅணிவகுப்பின் போது பல இராணுவ வீரர்கள் வைத்திருந்தவை பொம்மை ஆயுதங்கள் என கண்டறிந்துள்ளது. வீரர்கள் பலர் அணிந்திருந்த கண்ணாடிகூடபோலிஎனஅமெரிக்க இராணுவ நிபுர்ணர்கள் குழு கூறியுள்ளது.

வடகொரியா உலகநாடுகளை அச்சுறுத்தும் விதத்தில் தொடர்ந்து அணு ஆயுத சோதனைகளை நடத்தி அமெரிக்க, ஜப்பான் போன்ற நாடுகளைத்தகர்ப்போம் எனக் கூறிவருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ச)

இரசாயன தாக்குல் பின்னணியில் சிரிய ஜனாதிபதி உள்ளாராம்!

குற்றஞ்சாட்டுகிறது பிரான்ஸ்

சிரியாவில் அண்மையில் நடத்தப்பட்ட இரசாயனத் தாக்குதலின் பின்னணியில் சிரிய ஜனாதிபதி பஷார் அல் ஆசாத் காணப்படுகிறார் என பிரான்ஸ் குற்றச்சாட்டு ஒன்றை முன்வைத்துள்ளது.

கடந்த 2013 ஆம் ஆண்டு சிரியாவில் நடத்தப்பட்ட இரசாயன வாயுத் தாக்குதலின் மாதிரிகள், சமீபத்தில் சிரியாவில் நடத்தப்பட்டஇரசாயனதாக்குதலுக்குப்பயன்படுத்தப்பட்டகலவையுடன் ஒத்துப்போவதையடுத்து, இந்தக் குற்றச்சாட்டை பிரான்ஸ் முன்வைத்துள்ளது.

இது தொடர்பில் பிரான்ஸின் முன்னாள் ஜனாதிபதி அய்ரல்ட் கூறுகையில்:-

சிரிய இரசாயன வாயுத் தாக்குதலில் பயன்படுத்தப்பட்ட இரசாயனக் கலவைகள் சிரிய நாட்டில் உள்ள ஆய்வகங்களில் உருவாக்கப் பட்டுள்ளமைக்கான ஆதாரங்கள் கிடைத்துள்ளன. இந்தக்குற்றச்செயல்களின் பின்னால் உள்ளவர்கள் சர்வதேச நீதிமன்றத்தின் முன் நிறுத்தப்படுவார்கள்.-என்றார்.

சிரியாவின் இட்லிப் மாகாணத்தின் மத்திய பகுதியில் உள்ள கான் ஷெய்க்குன் நகரில் கடந்த 4 ஆம் திகதி நடத்தப்பட்ட இரசாயன தாக்குதலில் குழந்தைகள், பெண்கள் உட்பட 70 இற்கும் அதிகமானோர் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது. (ச)

லண்டன் வைத்தியசாலையில் தீ விபத்தால் பதற்றம்!

லண்டன் Christie வைத்தியசாலையில் பயங்கர தீ விபத்து ஏற்பட்டதால்அங்குபெரும் பதற்றம் ஏற்பட்டது.

மருத்துவமனையின் புற்றுநோய் ஆய்வகத்திலேயே இந்தத் திடீர்தீ விபத்து ஏற்பட்டுள்ளது. அதனைத் தொடர்ந்து 6 தீயணைப்பு பிரிவினர் வரவழைக்கப்பட்டு தீ கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டது என்றும் அங்கு சிகிச்சை பெற்று வந்த நோயாளிகள் அனைவரும் கவனமாக வெளியேற்றப்பட்டனர் என்றும் பொலிஸார் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மருத்துவமனை பகுதி புகைமண்டலமாகக் காட்சியளித்த நிலையில் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

தீ விபத்துக்கான காரணம் இன்னும் அறியப்படவில்லை என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். நேற்று முன்தினம் இந்தச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

டமாஸ்கஸ் விமான நிலையத்தில் நேற்றுக் காலை குண்டு வெடிப்பு!

சிரியாவின் தலைநகர்டமாஸ்கஸ் விமான நிலையத்தில் மிகப் பெரியகுண்டுவெடிப்பு சம்பவம் ஒன்று இடம் பெற்றுள்ளது எனத் தகவல் வெளியாகியுள்ளது.

நேற்று வியாழக்கிழமை காலை இடம் பெற்ற இந்தக் குண்டு வெடிப்புச் சம்பவத்தை சிரிய மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் தலைவர் ராமி அப்தேல் ரஹ்மான் உறுதி செய்துள்ளார்.

ஆனால், இதனால் ஏற்பட்ட இழப்புக்கள் தொடர்பான உறுதியான தகவல்கள் எதனையும் அவர் வெளியிடவில்லை.

இந்தத் தாக்குதல் யாரால் நிகழ்த்தப்பட்டது, உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை ஆகியன தொடர்பான விவரங்கள் அதிகாரிகளின் விசாரணைக்குபின் வெளியாகும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இதேவேளை, இப் பகுதியில் முகாமிட்டிருந்த ஈரானிய படைகளாலே இந்தத்தாக்குதல் நடத்தப்பட்டிருக்கலாம் என சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது. (ச)

வெனிசுவேலா ஜனாதிபதிக்கு எதிராக ஆர்ப்பாட்டம்: இதுவரை 29 பேர் உயிரிழப்பு: 437 பேர் படுகாயம்!

வெனிசுவேலா ஜனாதிபதி நிக்கோலா மடுரோவை பதவி விலகக் கோரி கராகஸ் நகரில் எதிர்க்கட்சியினர் மூன்று வாரங்களாக முன்னெடுத்து வரும் ஆர்ப்பாட்டத்தில், இதுவரை 29 பேர் உயிரிழந்துள்ளனர். 437 பேர் வரை படுகாயமடைந்தனர் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஆர்ப்பாட்டத்தில்பொலிஸார் மற்றும் பாதுகாப்புத் தரப்பினர் மேற்கொண்ட

துப்பாக்கிச்சூட்டிலேயே அவர்கள் உயிரிழந்துள்ளனர். மேலும், ஜனாதிபதி நிக்கோலா மடுரோவிற்கு எதிர்ப்புத் தெரிவித்து போராட்டத்தில் ஈடுபட்ட ஆயிரத்து 300 பேர் வரை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த 2014 ஆம் ஆண்டு நாட்டில் மோசமான வன்முறையை ஜனாதிபதி நிக்கோலா மடுரோ தூண்டிவிட்டார் எனத் தெரிவித்த ஆர்ப்பாட்டக்காரர்கள், 20 வருடங்களாக நடைபெற்று வரும் சோஷலிச கட்சியின் ஆட்சியை முடிவுக் கொண்டு வந்து தேர்தலை நடத்த வேண்டும் எனவலியுறுத்தியுள்ளனர்.

மேலும், ஜனாதிபதி நிக்கோலா ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது வன்முறையை கட்டவிழ்த்துவிட்டுள்ளார் என எதிர்க்கட்சியினர் குற்றம்சாட்டியுள்ளனர்.

இதேவேளை, 2002 ஆம் ஆண்டு முன்னாள் ஜனாதிபதி ஹ்யூகோ சாவேஸை பதவிவிலக்குவதற்கு அமெரிக்காவின் தூண்டுதலில் எதிர்க்கட்சியினர் போராட்டம் நடத்தியிருந்தமையைஜனாதிபதி நிக்கோலா மடுரோ சுட்டிக்காட்டியுள்ளார்.

மேலும், நாட்டில் அமைதி ஏற்படுவதற்கு எதிர்க்கட்சியினருக்கு விருப்பமில்லை என ஜனாதிபதி நிக்கோலா மடுரோ தெரிவித்துள்ளார்.

2013 ஆம் ஆண்டு நடைபெற்றஜனாதிபதித் தேர்தலில் இன்றைய எதிர்க்கட்சித் தலைவர் ஹென்ரிக் கேப்ரிஸை எதிர்த்து நிக்கோலா மடுரோ வெற்றிபெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச)

கொல்கத்தா அசத்தல் வெற்றி



புனே அணிக்கு எதிரான ஐ.பி.எல். லீக் போட்டியில் கொல்கத்தா அணி 7 விக் கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. உத்தப்பா அரைச் சதம் கடந்து அசத்தினார்.

இந்தியாவில் பத்தாவது ஐ.பி.எல். 'இருபதுக்கு 20' தொடர் நடக்கிறது. புனே யில் நேற்று முன்தினம் நடந்த லீக் போட்டியில் புனே அணி கொல்கத் தாவை எதிர்கொண்டது.

கொல்கத்தா அணிக்காக 100 ஆவது போட்டியில் அணித் தலைவராக கள மிறங்கிய கம்பீர் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று களத் தடுப்பைத் தேர்வு செய்தார்.

தோனி அசத்தல்

புனே அணிக்கு ரகானே, திரிபாதி ஜோடி நல்ல துவக் கம் தந்தது. உமேஷ் யாதவ் பந்தில் தப்பிப்பிழைத்த திரிபாதி 38 ஓட்டங்கள் (23 பந்து) எடுத்து ஆட்டமிழந் தார். ரகானே 46 ஓட்டங்கள் எடுத்து ஸ்டம்ப் ஆனார். அடுத்து களமிறங்கிய தோனி வந்த வேகத்தில் பியுஸ் சாவ்லாஓவரில் தலா ஒரு சிக்ஸர், பவுண்டரி அடித்தார். பின் சுதாரித்த குல்தீப், தோனி(23 ஓட் டங்கள்,11 பந்து), மனோஜ் திவாரியை (1ஓட்டம்) ஒரே ஓவரில் ஆட்டமிழக்கச் செய்தார்.

ஸ்மித் அரைச்சதம்

மறுபுறம் சீரான ஆட் டத்தை தொடர்ந்த ஸ்மித், 34 ஆவது பந்தில் அரைச் சதம் எட்டினார். கடைசிப் பந்தில் கிறிஸ்டியன் (16) ஆட்டமிழந்தார். புனே அணி 20 ஓவரில் 5 விக் கெட்டுக்கு 182 ஓட்டங்கள் குவித்தது. ஸ்மித் (51) ஆட்டமிழக்காமல் இருந்த தார்.

சூப்பர் ஜோடி

கடின இலக்கை விரட்டிய கொல்கத்தா அணிக்கு சுனில் நரைன், கம்பீர் ஜோடி துவக்கம் தந்தது.

நரைன் (16) 'ரன் அவுட்' முறையில் ஆட்டமி ழந்தார். பின் இணைந்த உத்தப்பா, கம்பீர் ஜோடி அசத்தல் ஆட்டத்தை வெளிப்படுத்தியது.

12 ஓட்டங்களில் உனத் கட் தயவில் கண்டம் தப்பிய உத்தப்பா, சிக்ஸர் மழை பொழிந்தார்.

வொஷிங்டன் சுந்தர் ஓவரில் 2 சிக்ஸர் அடித்த இவர். இம் ரான் தாகிர், கிறிஸ்டி யன் பந்து களையும் சிக்ஸ ருக்கு விரட்டி, அரைச்சதம் எட்டினார். இந்த ஜோடியின் வேக மான ஓட்டக் குவிப்புக் கை கொடுக்க, கொல் கத்தா அணி 10 ஓவரில் 100 ஓட்டங்களைக் கடந்தது.

இவர்களை பிரிக்க அணித்தலைவர் ஸ்மித் எடுத்த எந்த முயற்சியும் பலன் கிடைக்கவில்லை. இதேபோல 32 ஓட்டங்க ளில் தப்பிய கம்பீர், இம் ரான் தாகிர் பந்தை சிக்ஸருக்கு அனுப்பி, தன் பங்கிற்கு அரைச்சதம் அடித்தார்.

இரண்டாவது விக்கெட் டுக்கு 158 ஓட்டங்கள் சேர்த்த நிலையில், 47 பந்தில் 87 ஓட்டங்கள் (6 சிக் ஸர், 7 பவுண்டரி) குவித்த உத்தப்பா ஒரு வழியாக ஆட்டமிழந்தார். அடுத்த சில நிமிடத்தில் கம்பீர் (62 ஓட்டங்கள், 46 பந்துகளில்) ஆட்டமிழந்த போதும், கொல்கத்தா அணிக்கு பாதிப்பு ஏற்படவில்லை.

கடைசியில் டேரன் பிராவோ ஒரு சூப்பர் பவுண்டரி அடிக்க, கொல் கத்தா அணி 18.1 ஓவரில் 3 விக்கெட்டுக்கு 184 ஓட்டங்கள் எடுத்து, 7 விக்கெட் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது.

டேரன் பிராவோ (6) ஆட்டமிழக்காமல் இருந்தார். இந்த வெற்றியைத் தொடர்ந்து கொல்கத்தா அணி வித்தியாச ஓட்டங் கள் அடிப்படையில் முதலி டத்திற்கு முன்னேறியது.

இரண்டாவது இடத்தில் மும்பை உள்ளது.



ஊக்கமருந்துப் பாவனையை கிரிமினல் குற்றமாக்க வேண்டும்

இந்திய விளையாட்டுத்துறை அமைச்சர் கோரிக்கை



விளையாட்டுத்துறை யில் ஊக்கமருந்து பயன்பாட்டை கிரிமினல் குற்றமாக அறிவிக்க வேண் டும்.

-இவ்வாறு இந்திய மத்திய விளையாட்டுத்துறை அமைச்சர் விஜய் கோயல், தேசிய ஊக்கமருந்துத் தடுப்பு அமைப்பை (நாடா) கேட்டுக் கொண்டுள்ளார்.

தேசிய ஊக்கமருந்து தடுப்பு அமைப்பின் பிரதி நிதிகள் பங்கேற்கும் கருத் தரங்கு டில்லியில் நேற்று வியாழக்கிழமை நடைபெற விருந்தது. விளையாட்டில் ஊக்கமருந்துப் பயன்பாடு குறித்து அந்தக் கருத்தரங்கு நடைபெற இருந்த நிலை யில் விஜய் கோயல் இவ் வாறு அறிவுறுத்தியுள்ளார்.

இந்திய உதைபந்தாட்ட வீரரான சுப்ரதா பால் ஊக்கமருந்துக் குற்றச் சாட்டுக்கு ஆளாகியுள்ள நிலையில் விஜய் கோயலின் இந்தக் கருத்து முக்கியத்துவம் பெறுகிறது.

இதுகுறித்து விஜய் கோயல் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட் டுள்ளவை வருமாறு:-

விளையாட்டுத் துறை யில் ஊக்கமருந்துப் பயன்பாட்டைத் தடுக்கும் வகையில், அதை கிரிமினல் குற்றமாக அறிவிக்க வேண் டும். ஊக்கமருந்துப் பயன்பாட்டின் பாதிப்புக்கள் குறித்து அடிப்படையில் இருந்தே விளையாட்டு வீரர்களுக்கு அறிவுறுத்தப் பட வேண்டும். இதற்காக, பள்ளி மற்றும் கல்லூரி களில் கருத்தரங்குகள் மற்றும் பிரசாரங்கள் நடத் தப்படலாம்.

ஊக்கமருந்துப் பயன் பாடு பிரச்சினைகளைக் கையாள ஏதுவாக, விளை யாட்டு வீரர்களுக்கான உணவுப் பொருள்களைப் பரிசோதிக்கும் திட்டம் ஒன்றை ஏற்படுத்த அரசு சிந்தித்து வருகிறது. இதன் மூலம், தாங்கள் உட் கொள்ளும் உணவுகள் தடைசெய்யப்பட்ட பொருள்கள் இல்லாதவை என்பதை விளையாட்டு வீரர்கள் உறுதி செய்ய இயலும். அத்துடன், அறி வியல் பூர்வமான உணவுக் கட்டுப்பாடுகள் மற்றும் ஊட்டச்சத்துக்களை வீரர் களுக்கு வழங்க வேண்டும். - என்று அதில் விஜய் கோயல் கூறியுள்ளார். (உ)

கொல்கத்தா அணிக்கு டோனியை வாங்கத் துடிக்கிறார் ஷாருகான்!

ஐ.பி.எல். வீரர்களுக்கான ஏலத்தில் மகேந்திரசிங் டோனிஇடம்பெறுவாரா னால் அவரை வாங்கு வதற்கு கொல்கத்தா அணி தயாராகக் காத்திருக்கிறது.

- இவ்வாறு கூறியிருக் கிறார் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணியின் உரி மையாளர் நடிகர் ஷாருகான்.

வெற்றிகரமான அணித்தலைவர் என்ற பெருமைக்குரிய டோனி, ஐ.பி.எல். போட்டி தொடரில் சென்னை சூப்பர் கிங்ஸ் அணியின் அணித் தலைவராக இருந்தார்.

அவரது தலைமையில் சென்னை சூப்பர் கிங்ஸ் அணி 2010 மற்றும் 2011 ஆம் ஆண்டுகளில் கிண் ணத்தைக் கைப்பற்றியது.

ஐ.பி.எல். சூதாட்டச் சர்ச்சை காரணமாக சென்னை சூப்பர் கிங்ஸ் மற்றும் ராஜஸ்தான் ராயல்ஸ் அணிகளுக்கு 2 ஆண்டுகள் தடை விதிக்கப்பட்டமையால் டோனி, கடந்த 2 ஆண்டுகளாக ரைசிங் புனே சூப்பர் ஜெயண்ட் அணிக்காக விளையாடி வருகிறார். இந்தப் பருவகாலத்துக்கான புனே அணியின் தலைமைப் பதவியில் இருந்து டோனி கழற்றி விடப்பட்டு, ஸ்டீவன் ஸ்மித் தலைவராக நியமிக்கப்பட்டார். தலைவர் பதவியில் இருந்து டோனி நீக்கம் செய்யப்பட்டமை விமர்சனத்துக்கு உள்ளானது.

இந்த நிலையில் அடுத்த ஆண்டு முதல் சென்னை சூப்பர் கிங்ஸ் மற்றும் ராஜஸ்தான் அணிகள் ஐ.பி.எல். போட்டித் தொடரில் மீண்டும் இடம் பெறுகின்றன.

புதிய அணியாக இரு ஆண்டுகளுக்கு முன்பு இடம் பிடித்த குஜராத் லயன்ஸ், ரைசிங் புனே சூப்பர் ஜெயண்ட் ஆகிய அணிகள் அடுத்த பருவகாலத்தில் ஐ.பி.எல். போட்டியில் நீடிக்குமா என்பது தெரியவில்லை.

10 ஆண்டுகள் ஒப்பந் தம் முடிந்து விட்டதால் அடுத்த ஆண்டு (2018) எல்லா அணிகளில் உள்ள வீரர்களும் ஏலத்தில் வருவார்கள். டோனியை வாங்க சென்னை சூப்பர் கிங்ஸ் அணி தீவிரம் காட்டும் என்பதில் சந்தேகமில்லை.

அதேநேரத்தில் டோனியைக் கைப்பற்றுவதில் மற்ற அணிகளும் மல்லுக்கட்ட அதிக வாய்ப்பு இருக்கிறது.

இது குறித்து கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணியின உரிமையாளரும், இந்தி நடிகருமான ஷாருகானிடம் கேட்ட போது, ''எங்கள் அணிக்கு டோனியை வாங்குவதற்காக எனது பைஜாமா உட்பட எதனையும் விற்க நான் தயார். ஆனால் அவர் ஏலத்தில் இடம் பெறுவதை பொறுத்துத்தான் இது சாத்தியமானதாகும்.'' - என்றார்.

குழந்தை பெற்ற பின் செரீனா வில்லியம்ஸ் மீண்டும் ஆடுகளத்துக்குத் திரும்புவாராம்!

பத்திரிகைப் பேட்டியில் அவர் கூறிய உறுதி

குழந்தை பெற்ற பிறகு மீண்டும் களம் திரும்புவேன் என்று அமெரிக்காவின் முன்னணி டென்னிஸ் வீராங்கனை செரீனா வில்லியம்ஸ் தெரிவித்துள்ளார்.

முன்னணி டென்னிஸ் வீராங்கனையான அமெரிக்காவின் செரீனா வில்லியம்ஸுக்கும், அமெரிக்க தொழிலதிபர் அலெக்சிஸ் ஒஹானியனுக்கும் கடந்த டிசெம்பரில் திருமண நிச்சயதார்த்தம் நடந்தது. ஜனவரி மாதம் நடந்த ஆஸ்திரேலிய ஓபன் பட்டத்தை வென்ற பிறகு எந்தப் போட்டியிலும் 35 வயதான செரீனா வில்லியம்ஸ் விளையாடவில்லை.

இந்த நிலையில் கடந்த வாரத்தில் சமூக வலைத்தளத்தில் சற்று வயிறு பெருத்துத் தெரிவது போன்ற ஒரு படத்தை வெளியிட்ட செரீனா வில்லியம்ஸ் அதன் கீழ் '20 வாரங்கள்' என்று குறிப்பிட்டு இருந்தார். சற்று நேரத்தில் அந்த புகைப்படத்தை அவர் நீக்கி விட்டார். பின்னர் அவரது செய்தித் தொடர்பாளர் செரீனா கர்ப்பமாக இருப்பதை உறுதி செய்தார்.

செரீனா விளக்கம்

கர்ப்பமாக இருக்கும் படம் வெளியானமை குறித்து செரீனா வில்லியம்ஸ் பத்திரிகை ஒன்றுக்கு அளித்த பேட்டியில் கூறியவை வருமாறு :-

ஒவ்வொரு வாரமும் படம் எடுத்து அதனைப் பாதுகாத்து வைப்பேன். அதேபோல் தான் கர்ப்பமாக இருக்கும் படத்தையும் எடுத்துத் தனிப்பட்ட முறையில் வைத்து இருந்தேன். அதனைக் கவனிக்காமல் சமூக வலைத்தளத்தில் போட்டு விட்டேன். ஜனவரி மாதம் நடந்த ஆஸ்திரேலிய ஓபன் போட்டிக்கு 2 நாள்களுக்கு முன்பு தான் கர்ப்பமாக இருப்பது எனக்குத் தெரியவந்தது. அந்தப் போட்டியில் எனது 23 ஆவது கிராண்ட்ஸ்லாம் பட்டத்தை வென்றேன். அது எளிதான காரியம் அல்ல.

கர்ப்பமாக இருக்கையில் பெண்கள் சோர்வு அடைவது டன், மன அழுத்தத்துக்கு ஆளாகின்றனர் எனச் சொல்லப்படும் கதைகளை நான் கேட்டு இருக்கிறேன். ஆனால் நான் எந்தவித சோர்வும் இல்லாமல் வலுவாகவே இருக்கிறேன். எல்லாப் போட்டிகளையும் போல் தான் ஆஸ்திரேலிய ஓபனையும் வெல்ல வேண்டும் என்ற நோக்கில் தான் செயற்பட்டேன். நான் வெல்லாவிட்டால்

தான் அது பெரிய செய்தியாகும்.

களம் திரும்புவேன்

இந்த ஆண்டில் எஞ்சிய பருவ காலத்தில் விளையாடமாட்டேன். ஆனால், குழந்தை பெற்ற பிறகு நிச்சயம் மீண்டும் களம் திரும்புவேன். அது எப்போது என்பதை இன்னும் முடிவு செய்யவில்லை. என்னால் மீண்டும் விளையாட முடியும். 36 வயதாகியும் எனது அக்கா வீனஸ் இன்னும் விளையாடிக் கொண்டு இருக்கின்றமை எனக்கு உத்வேகம் அளிக்கின்றது. தாயாக இருப்பது எனது வாழ்க்கையில் புதிய அங்கமாகும். வருங்காலத்தில் எனது மகள் கேலரியில் அமர்ந்து என்னுடைய ஆட்டத்துக்கு உற்சாகம் அளிப்பார் என்று நம்புகிறேன்.-என்றார்.

மேற்கிந்தியத் தீவுகள் அணியினருக்கு பந்துவீச்சுத் தாமதத்துக்கு அபராதம்!



டெஸ்ட் போட்டியில் மேற்கிந்தியத் தீவுகள் அணி பந்து வீச்சின் போது கூடுதல் நேரம் எடுத்துக் கொண்டதாக மைதான நடுவர்கள் அளித்த முறைப்பாடைத் தொடர்ந்து அணித் தலைவர் ஜாசன் ஹோல்டருக்கு அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

பாகிஸ்தான்-மேற்கிந்தியத் தீவுகள் அணிகளுக்கு இடையிலான 3 ஆட்டங்கள் கொண்ட டெஸ்ட் போட்டித் தொடரில் கிங்ஸ்டனில் நடந்த முதலாவது டெஸ்ட் கிரிக்கெட்டுகள் போட்டியில் பாகிஸ்தான் அணி 7 விக்கெட் வித்தியாசத்தில் மேற்கிந்தியத் தீவுகள் அணியை வீழ்த்தியது.

இதன் மூலம் பாகிஸ்தான் அணி 1-0 என்ற கணக்கில் முன்னிலை பெற்றுள்ளது. இரு அணிகள் இடையிலான 2 ஆவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டி பிரிட்ஜ்டவுனில் வருகிற 30 ஆம் திகதி ஆரம்பமாகிறது.

இந்த நிலையில் முதலாவது டெஸ்ட் போட்டியில் மேற்கிந்தியத் தீவுகள் அணி பந்து வீச்சின்போது கூடுதல் நேரம் எடுத்துக்கொண்டனர் என மைதான நடுவர்கள் அளித்த முறைப்பாட்டைத் தொடர்ந்து விசாரணை நடத்திய ஐ.சி.சி. போட்டி நடுவர் கிறிஸ் பிராட், மேற்கிந்தியத் தீவுகள் அணியின் தலைவர் ஜாசன் ஹோல்டருக்கு போட்டி கட்டணத்தில் 20 சதவீதமும், வீரர்களுக்குப் போட்டிக் கட்டணத்தில் 10 சதவீதமும் அபராதமாக விதித்தார்.

இனவெறி நடவடிக்கை: ஹர்பஜன் முறைப்பாடு!

'ஜெட் ஏர்வேஸ்' விமானத்தின் விமானி சக பயணியிடம் இன வெறியுடன் நடந்து கொண்டார் என ஹர்பஜன் சிங் முறைப்பாடு தெரிவித்துள்ளார்.

இந்திய அணியின் சுழற்பந்து வீச்சாளர் ஹர்பஜன் சிங், (வயது - 36). ஐ.பி.எல். தொடரில் மும்பை அணிக்காக விளையாடி வருகிறார். சமீபத்தில் புனே அணித் தலைவர் ஸ்டீவ் ஸ்மித்தை ஆட்டமிழக்கச் செய்தவை மூலம் இவர் 'டுவென்டி-20' கிரிக்கெட்டில் 200 ஆவது விக்கெட் வீழ்த்தினார்.

கடந்த 5 ஆம் திகதி அவர் சண்டிகரில் இருந்து மும்பை வந்த 'ஜெட் ஏர்வேய்ஸ்' விமானத்தில் பயணம் செய்தார். அப்போது நடந்த சம்பவங்கள் குறித்து 'டுவிட்டரில்' பல செய்திகள் வெளியிட்டார்.

பெர்ன்டு ஹொஸ்லின் என்ற விமானி, என்னுடன் பயணித்த சக பயணியை பார்த்து தகாத வார்த்தைகள் கூறினார். 'இந்தியனே உடனடியாக விமானத்தை விட்டு வெளியேறு' என்றார். தவிர, பெண் பயணியைத் தாக்கினார். மாற்றுத்திறனாளி ஒருவரை திட்டினார். அவர் இன்னும் வேலையில் தான் உள்ளார். இது முற்றிலும் அவமானகரமான செயல்.

நமது இந்தியாவில்



இதுபோன்ற சம்பவங்களைப் பொறுத்துக் கொள்ள முடியாது. இவர் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும். - என அதில் தெரிவித்துள்ளார்.

மோடிக்கு டுவிட்டர்

இதுகுறித்து பிரதமர் மோடிக்கு அனுப்பிய டுவிட்டர் செய்தியில்,

இனவெறியைத் தூண்டும் வகையில் பேசிய விமானி பெர்ன்டு ஹொஸ்லின் இன்னும் பணியில் தான் உள்ளார். இவர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் எனத் தெரிவித்தார்.

பயணி நன்றி

ஹர்ப்ஜனின் இந்த முறைப்பாட்டை அடுத்து, சம்பந்தப்பட்ட விமானி மீது நடவடிக்கை எடுக்கப்பட்டதாக விமான நிறுவனம் தெரிவித்தது. இதற்காக ஹர்பஜனுக்கு, அந்தப் பயணி நன்றி தெரிவித்தார்.

சர்வதேச கிரிக்கெட் வருவாய்ப் பகிர்வு: இந்தியத் தரப்பின் கருத்து எடுபடவில்லை!

சர்வதேச கிரிக்கெட் கவுன்சிலின் வருவாய் பகிர்வு மற்றும் நிர்வாக நடைமுறையில் மாற்றம் கொண்டு வரும் தீர்மானத்துக்கு எல்லா நாடுகளும் ஆதரவு தெரிவித்துள்ளன. இதற்கு எதிர்ப்புத் தெரிவித்த இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபைக்கு ஆதரவு எதுவும் கிடைக்கவில்லை.

சர்வதேச கிரிக்கெட் கவுன்சிலின் (ஐ.சி.சி) வருவாயில் இந்தியா, ஆஸ்திரேலியா, இங்கிலாந்து ஆகிய நாடுகளின் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபைக்கு மற்ற உறுப்பினர் நாடுகளின் சபையை விட அதிக பங்கு அளிக்கும் வகையில் ஐ.சி.சி. விதிமுறையில் கடந்த 2014 ஆம் ஆண்டில் திருத்தம் செய்யப்பட்டது. அத்துடன் ஐ.சி.சி. நிர்வாக நடைமுறையிலும் இந்த 3 நாடுகளுக்கும் முக்கியத்துவம் அளிக்கும் வகையில் அந்த திருத்தத்தில் வகை செய்யப்பட்டது.

3 நாடுகளுக்கு நிர்வாகத்தில் அதிக முக்கியத்துவமும், வருவாயில் அதிக தொகையும் வழங்கும் வகையில் செய்யப்பட்ட இந்தத் திருத்தத்தை மாற்ற சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் கொள்கை ரீதியாக முடிவு செய்தது. ஆனால், இதற்கு இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை கடும் எதிர்ப்பு தெரிவித்தது. இந்திய கிரிக்கெட் சபையை சமரசப்படுத்தக் கூடுதலாக ரூ.650 கோடி தரப்படும் என்று ஐ.சி.சி. தலைவர் ஷசாங் மனோகர் உத்தரவாதம் அளித்தார். ஆனால், அந்த யோசனையை ஏற்க இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை மறுத்து விட்டது.

இந்த பரபரப்பான சூழ்நிலையில் சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் கூட்டம் துபாயில் நேற்று முன்தினம் தொடங்கியது. இதில் ஐ.சி.சி.யின் வருவாய் பகிர்வு மற்றும் நிர்வாக நடைமுறையில் மாற்றம்கொண்டு வரும் தீர்மானம் எடுத்துக் கொள்ளப்பட்டது. நிர்வாக சீர்திருத்தத்துக்கு இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை மட்டுமே எதிர்ப்பு தெரிவித்தது. மற்ற 9 உறுப்பினர்களும் ஆதரவு தெரிவித்தனர்.

இதேபோல் வருவாய் பகிர்வு தீர்மானத்துக்கும் இந்தியா மற்றும் இலங்கை கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபைகள் எதிர்ப்பு தெரிவித்தன. மற்ற 8 உறுப்பினர்களும் ஆதரவு தெரிவித்தனர். இதனால் ஐ.சி.சி.யின் விதிமுறை திருத்தம் திட்டமிட்டபடி நிறைவேறி இருக்கிறது. இதனால் இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபைக்குப் பெரிய அளவில் வருவாய் இழப்பு ஏற்படும் நிலை உருவாகி இருக்கிறது.

சர்வதேச கிரிக்கெட் கவுன்சிலின் விதிமுறை மாற்றம் இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபைக்கு பெருத்த பின்னடைவாகக் கருதப்படுகிறது. இந்த பிரச்சினை காரணமாக சம்பியன்ஸ் கிண்ணம் போட்டிக்கான இந்திய அணியை காலக்கெடுவுக்குள் அறிவிக்காமல் இழுத்தடித்து வரும் இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபை, சிறப்பு பொதுக்குழுவை கூட்டி அடுத்த கட்ட நடவடிக்கை குறித்து முடிவு செய்ய இருப்பதாகத் தகவல் வெளியாகி இருக்கிறது.

இதற்கிடையில் நடைமுறை பிரச்சினை காரணமாக சம்பியன்ஸ் கிண்ணப் போட்டிக்கான இந்திய அணியை அறிவிப்பதில் காலதாமதம் ஏற்பட்டு இருப்பதாக ஐ.சி.சி.க்கு, இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை தகவல் தெரிவித்து இருப்பதாக செய்திகள் வெளியாகி உள்ளன.

ஜனாதிபதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் பேச்சாளரும், யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், சிரேஷ்ட சட்டத்தரணியுமான எம்.ஏ.சுமந்திரன், பிரபல மனித உரிமைகள் சட்டத்தரணியும், முன்னைய அரசின் ஆட்சிக் காலத்தில் பெரும் நெருக்கு வாரங்களுக்குஉள்ளாக்கப்பட்ட வருமான ஜே.எஸ்.வெலியமுன ஆகிய இருவரினதும் பெயர் களும் இடம்பெற்றுள்ளன.

ஆனால், இருவரும் ஜனாதி பதி சட்டத்தரணி நியமனத்துக் காக விண்ணப்பிக்காதவர்கள் என்றும் –

எனினும், இருவருக்கும் அந்த நியமனம் ஜனாதிபதி யால் வழங்கப்பட்டுள்ளது என் றும் கொழும்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

தற்போல்தய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பதவி யேற்றகாலத்தின்பின்னர்ஜனா திபதிசட்டத்தரணிகள்நியமனம் குறித்துத்தமக்குநெருக்கமான வர்களுடன் பல தடவைகள் கலந்துரையாடியிருக்கின்றார் எனத் தெரியவருகின்றது.

"ஜனாதிபதி சட்டத்தரணிகள் நியமனத்துக்காக நானூறு வரையான விண்ணப்பங்கள் கிடைத்துள்ளன. ஆனால், இந் தப் பதவிக்குப் பொருத்தமான இருவரிடம் இருந்து – வெலிய முன, சுமந்திரன் ஆகியோரிட மிருந்து –எந்தவிண்ணப்பமும் வரவில்லை. இதுஏன்? அறிந்து கொள்ளுங்கள்." – என்று மற் றொரு ஜனாதிபதி சட்டத்தரணி யும், அரசமைப்புத் தயாரிப்பு விடயங்களுக்குப்பொறுப்பான நாடாளுமன்ற உறுப்பினரு மான ஜயம்பதி விக்கிரமரட்ண விடம் ஜனாதிபதியே நேரில் கேட்டிருந்தாராம்.

"அவர்களிடம்கேட்டுச்சொல் லத் தேவையில்லை. எனக்கு விடயம் தெரியும். இத்தகைய பதவிகளை விண்ணப்பித்து ஏமாறக் கூடாது என்ற தெளி வான நிலைப்பாட்டில் அவர்கள் உள்ளனர். தகுதி உள்ளவர் களுக்கு உரியவர்களே தேடிக் கண்டறிந்து அதனை வழங்க வேண்டுமே தவிர, தகுதியுள் ளோர் இதைத் தேடி இதற்குப் பின்னால்போகக்கூடாதுஎன்ற கொள்கை நிலைப்பாட்டில் அவர்கள்தெளிவாகஉள்ளனர். அதனால் இதற்கு அவர்கள் விண்ணப்பிக்கவே மாட்டார் கள்." – என்று ஜயம்பதி விக்கிரம ரட்ண ஜனாதிபதி சிறிசேனவுக் குப் பதிலளித்தார் எனவும் தெரி கின்றது.

இந்தப் பின்புலத்திலே இவர் கள் இருவரினதும் பெயரும் தற் போது 'ஜனாதிபதி சட்டத்தரணி கள்' என்ற கௌரவத்துக்குரிய பட்டியலில்.சேர்த்துக் கொள்ளப் பட்டிருக்கின்றன.

இதேபோன்று, சுமந்திரனுக் கும் சிரேஷ்ட நிலையில் உள்ள சட்டத்தரணி சிவேந்திரன் போன்ற வேறு சிலரும் இப்பத வியை விண்ணப்பித்துப் பெறு வதில்லை என்ற உறுதியில் இருக்கின்றார்கள் எனத் தெரிய வருகின்றது.

ஜனாதிபதி சட்டத்தரணி நிய மனம் பெற்றவர்களுள் ஒருவர் சட்டத்தரணி விவேகானந்தன் புவிதரன். இவர் தமிழ் மக்கள் பேரவையின்முக்கியசெயற்பாட் டாளராவார். இவரின்தந்தையார் சிரேஷ்டசட்டத்தரணிசி.வி.விவே கானந்தன். தமிழ்மக்களின்அர சியல் முக்கியத்துவம் வாய்ந்த பல வழக்குகளில் விவேகானந் தன் ஆஜரானவர். 1980களில் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத் தின்கீழ்தடுப்புக்காவலில்வைக் கப்பட்ட தமிழ் இளைஞர்களுக் காக நூற்றுக் கணக்கான ஆள் கொணர்வு மனுக்களைத் தாக் கல்செய்தவர்விவேகானந்தன். அவரின் மகனும் ஜனாதிபதி சட் டத்தரணியாக நியமிக்கப்பட்டி ருகின்றார்.

ஜனாதிபதி தமக்குள்ள அதி காரத்துக்கமைய சட்டத்தரணி தொழில்வாண்மையில்சிறப்புப் பெற்றவர்கள் மற்றும் தொழில் வாண்மை செயற்பாடுகளில் நேர்மையாகவும், உன்னதமா னவர்களுமான சட்டத்தரணி களை இவ்வாறு ஜனாதிபதி சட் டத்தரணிகளாக நியமிக்கப்படு கின்றமை வழமை.

அதற்கமைய தயா பல் பொல, ஆரிய பீ ரேக்காவ, அனுர பண்டார மெக்கவ, நிஸ் ஸங்க நாணயக்கார, நெவில் அபேரத்ன, டபிள்யு.கே.அனுஜ கௌசிக்க பிரேமரத்ன, ஏ.எல்.எம்.ஹிதாயத்துல்லா, சமந்த ரத்வத்த, விஜேரத்ன தர்மசேன,உபாலிசேனாரத்ன, பத்ம பண்டார, எஸ்.கே.மார்க் பீரிஸ், கருணாரத்ன ஹேரத், மகேந்ரசுவந்தரத்ன,ஏ.பீ.சீ.எம். ஜயசேகர, மொகான் வீரக் கோன், பீ.ஆர்.எஸ்.பீ.சமர நாயக்க, உபுல் ஜயசூரிய, ஆனந்த விக்ரமசேகர, ஜே.சி. வெலியன, எம்.ஏ.சுமந்திரன், விஜய நிரஞ்சன் பெரேரா, கருணாதேவகே விமலதாஸ, மொஹமட் நிஸாம் காரியப்பர், விவேகாநந்தன் புவிதரன் ஆகி யோர் ஜனாதிபதி சட்டத்தரணிக ளாக நியமிக்கப்பட்டுள்ளனர் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கைக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆதரவாக 119 வாக்குகள் அளிக்கப்பட்டன.

22 உறுப்பினர்கள் பிர சன்னமாய் இருக்கவில்லை. இதனடிப்படையில், ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகையை இலங் கைக்கு வழங்குவதற்கு ஐரோப் பியஒன்றியம்முன்வைத்துள்ள யோசனை செல்லுப்படியாகும் என அறிவிக்கப்பட்டது.

இதனையடுத்து, இலங் கைக்கு ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச் சலுகையை வழங்குவதா இல்லையா என்பதுகுறித்தஇறு தித் தீர்மானத்தை ஐரோப்பிய ஒன்றியப் பேரவை எடுக்கும்.

இலங்கையின் உற்பத்திப் பொருள்களை ஐரோப்பியநாடு களுக்கு இறக்குமதி செய்யும் போது வழங்கப்படும் வரிச் சலுகையான ஜீ.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகையை இலங்கைக்கு மீண்டும் வழங்கும் யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது என ஐரோப்பிய ஒன்றிய ஆணைக் குழு கடந்த ஜனவரி மாதம் 11ஆம் திகதி அறிவித்தது.

மனிதஉரிமை,தொழிலாளர் சட்டம், நல்லாட்சி, சுற்றாடல் பாதுகாப்புபோன்றதுறைகளை அடிப்படையாகக் கொண்டு 27 சர்வதேச இணக்கப்பாடுகளை அமுல்படுத்த இலங்கை அர சாங்கம்நடவடிக்கைஎடுத்தமை மற்றும் இலங்கை அரசாங்கத் தின்அர்ப்பணிப்புஆகியவற்றை கவனத்தில் கொண்டு ஐரோப் பிய ஒன்றிய ஆணைக்குழு இலங்கைக்கு ஜீ.எஸ்.பி. வரிச் சலுகைவழங்கும்தீர்மானத்தை எடுத்திருந்தது என்பது குறிப் பிடத்தக்கது. (மு)

முல்லையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முடங்கி இருந்த நிலையில் ம க்கள் இந்தப் போராட்டத்தை முன்னெடுத்திருந்தனர்.

முல்லைத்தீவு மாவட்ட செய லகம்முன்பாகநேற்றுமுற்பகல் 10 மணிக்கு இந்தப் போராட்டம் நடைபெற்றது. போராட்டத்தில் கலந்துகொண்டமக்கள்"காணா மல் ஆக்கப்பட்ட தமது உறவு களைத் தேடி 51 ஆவது நாளாக இந்த வீதி ஓரத்தில் போராடி வரு கிறோம். இதைவிடதமதுகாணி களைவிடுவிக்கக்கோரிகேப்பா பிலவுமக்கள்ஐம்பத்தெட்டாவது நாளாக தமது போராட்டத்தை மேற்கொண்டு வருகின்றனர்

ஆனால் நல்லாட்சி எனக் கூறிக் கொள்ளும் இந்த அரசு எமக்குஎந்தவிததீர்வுகளையும் முன்வைக்காதநிலையில்அரசி யல் தலைவர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து ஒற்றுமையாக எமக்கு உரியதீர்வைப்பெற்றுத் தர முன்வர வேண்டும்." எனக் கோரிக்கை விடுத்தனர்

பல்வேறுவாசகங்கள்எழுதப் பட்ட பதாகைகளைத் தாங்கிய வாறும்பல்வேறுகோஷங்களை எழுப்பியவாறும் தமது போராட் டத்தைத் தொடர்ந்த மக்கள், போராட்டத்தின் இறுதியில்ஜனா திபதி,பிரதமர்,எதிர்க்கட்சித்தலை வர், முதலமைச்சர், மாவட்ட அரச அதிபர் ஆகியோருக்கு மனுக்களைக் கையளித்தனர்.

ஜனாதிபதி, பிரதமர், மாவட்ட அரச அதிபர் ஆகியோருக்கான மனுக்களை மாவட்ட செயலகத் துக்குள் சென்று மாவட்ட செய லக அதிகாரியிடம் கையளித் தனர். வடமாகாண முதலமைச் சருக்கான மனுவை வடமா காண சபை உறுப்பினர் ரவிகர னிடமும் எதிர்க்கட்சித் தலை வருக்கான மனுவை நாடாளு மன்ற உறுப்பினர் திருமதி சாந்தி சிறிஸ்கந்தராஜாவிடமும் கையளித்தனர்.

இந்தப் போராட்டத்துக்கு காணாமலாக்கப்பட்டவர்களின் உறவுகள்மட்டுமின்றிமுல்லை மாவட்டத்தின்அனைத்துப்பகுதி களிலிருந்தும் வந்த பல நூற் றுக்கணக்கான மக்கள் கலந்து கொண்டு ஆதரவு தெரிவித்த னர்.

இவர்களுக்கு ஆதரவாக நாடாளுமன்ற உறுப்பினர் களான சாள்ஸ் நிர்மலநாதன், திருமதிசாந்திசிறிஸ்கந்தராஜா, சி .சிவமோகன் மற்றும் வடமா காணசபைபிரதிஅவைத்தலை வர்வ.கமலேஸ்வரன்,வடமாகாண சபைஉறுப்பினர்கள்து.ரவிகரன், ஆ.புவனேஸ்வரன் உள்ளிட் டோர்கலந்துகொண்டுஆதரவை வழங்கி இருந்தனர். (இ-8)

கூட்டு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கள் வெளியாகியுள்ளன.

அதன்ஒருகட்டமாக,எதிர்வரும் திங்களன்று கொழும்பு – காலி முகத்திடலில் கூட்டு எதிரணி நடத்தும் மே தின நிகழ்வைப் புறக்கணித்துபிக்கு,கம்யூனிஸ்ட் கட்சி தனது மே தினத்தை விகா ரமாதேவி பூங்காவின் திறந்த வெளியில் தனியாக நடத்து வதற்கு தயாராகி வருவதாகவும் கூறப்படுகின்றது.

இது தொடர்பில் கட்சியின் தலைவர் ராஜா கொலுரே, பொதுச் செயலாளர் டியூ குண சேகரா ஆகியோர் தமது கட்சிப் பிரமுகர்களுடன் ஆலோசனை நடத்தி வருகின்றனர் என்று கூறப்படுகின்றது.

கூட்டு எதிரணி இப்போது பின்பற்றிவரும்அரசியல்நிகழ்ச்சி நிரலும் செயற்பாடுகளும் தங் களுடைய அரசியல் பாதைக்கு முற்றிலும் மாறானவை என கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் கள் கருதுகின்றனர் எனக் கூறப்படுகின்றது. (உ)

எதிர்க் கட்சித் தலைவர் சம்பந்தனும் பிரிட்டன் தூதுவரும் சந்தித்துப் பேச்சு

முக்கிய விடயங்கள் கலந்துரையாடப்பட்டன

கொழும்பு, ஏப்.29

தமிழ்த் தேசியக் கூட்டமைப் பின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான இரா.சம்பந்த னுக்கும் இலங்கைக்கான பிட்ட டன் தூதுவர் ஜேம்ஸ் டோரிஸுக் கும் இடையில் நேற்று முன் தினம் முக்கிய சந்திப்பு ஒன்று இடம்பெற்றது.

எதிர்க்கட்சித் தலைவரின் அதிகாரபூர்வ செயலகத்தில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.

இதில் அரசமைப்புமாற்றம், காணிகள்விடுவிப்பு,காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுக ளின் போராட்டம் உள்ளிட்ட பல் வேறு விவகாரங்கள் தொடர்பா கக் கலந்துரையாடப்பட்டன எனத் தகவல்கள் தெரிவிக்கின் றன.

இந்தச் சந்திப்பில் இரா. சம்பந்தனுடன் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனும் பிரிட்டன் தூதுவருடன் தூதரக அதிகாரிகள் இருவரும் கலந்து கொண்டனர். (மு)

கஞ்சாவுடன் இளைஞர் கைது!

வடமராட்சியில் இருந்து கொழும்புக்கு கடத்தப்படவிருந்த நான்கு கிலோகிராம் கேரளக் கஞ்சாவுடன் நபர் ஒருவர் கைது செய்யப்பட்டார் என நெல்லியடிப் பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று வியாழக்கிழமை அதி காலை மாலுசந்திப் பகுதியில் இருந்து கஞ்சாக கடத்தப்படுவ தாகக் காங்கேசன்துறைப் பிராந் தியப்பொலிஸாருக்குக்கிடைக்கப் பெற்ற இரகசியத் தகவலின் அடிப்படையில் காங்கேசன் துறைகிரேஷ்டபொலிஸ்அத்தியட் சகர் ரஞ்சித் மாசிங்க, உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் டி.கே. பிரி யந்தஆகியோரின்வழிநடத்தலில் கஞ்சா மீட்கப்பட்டது.

மாமுனை செம்பியன்பற் றைச் சேர்ந்த 33 வயதுடைய நபரே கைதுசெய்யப்பட்டார் என நெல்லியடிப்பொலிஸ்பொறுப்பதி காரிஆர்.பி.பிரியந்ததெரிவித்தார். (மு-40)

தமிழர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வடக்கு, கிழக்கு எங்கணும் நில மீட்பு, காணாமலாக்கப்பட் டோர்விவகாரம், அரசியல்கைதி கள்விடுவிப்புபோன்றபல்வேறு விடயங்களை முன்வைத்து பொதுமக்கள் தாங்களாகவே நடத்திவரும்போராட்டங்களுக்கு ஆதரவாகவும் – அவர்களின் அறப்போர் வெற்றி பெறவும் வடக்கு, கிழக்கு அமைப்புக்கள் இணைந்து இந்த ஹர்த்தாலை முன்னெடுத்திருந்தன.

தமிழர் தாயகப் பகுதி மக்கள் அனைவரும் ஜக்கியப்பட்டு தங் களின் ஆதரவை வெளிப்படுத்தி யிருந்தனர். அரசியல் கட்சிகள், பொது அமைப்புகள் மக்கள் நலன் சார்ந்த சங்கங்கள், யாழ். பல்கலைக்கழகம்உட்பட்டகல்வி நிறுவனங்கள், வர்த்தகசமூகம், தொழிற்சங்கங்கள் போன்ற அனைத்துத்தரப்பினரும் இந்த ஹர்த்தாலுக்கு முழு ஆதரவு – ஒத்துழைப்பு வழங்கி இருந்த னர்.

வடக்கில்யாழ். குடாநாடு முற் றாக ஸ்தம்பித்திருந்தது. அரச, தனியார் பஸ்கள் ஓடவில்லை. கடைகள், வர்த்தக நிலையங் கள், மருந்தகங்கள் போன்ற அனைத்து வர்த்தக நிறுவனங் களும் இழுத்து மூடப்பட்டிருந் தன. வங்கிகள் இயங்கவில்லை. சந்தைகள் கூடவில்லை. பாட சாலைகளுக்கு மாணவர்கள் செல்லவில்லை. போக்கு வரத்துச் சேவைகள் நடை பெறாததால் அரச அலுவலகங் களும் வெறிச்சோடிக் காணப் பட்டன. மக்கள் வீடுகளில் முடங்கியதால் வீதிகள் சோபை இழந்து காணப்பட்டன.

குடாநாட்டில் அனைத்துப் பிரதேசங்களிலும் இருந்து எமது செய்தியாளர்கள் மேற் கண்ட தகவல்களை விவரித்தி ருந்தனர்.

வன்னியில் கிளிநொச்சி முதல் வவுனியா வரையான அனைத்துப் பகுதிகளிலும் ஹர்த்தால் பூரண வெற்றி யடைந்திருந்தது. முல்லைத் தீவு, மாங்குளம், ஒட்டுசுட்டான், வவுனியா, மன்னார் உட்பட அனைத்துப் பகுதிகளிலும் காணாமலாக்கப்பட்டோரின் உறவுகள் மேற்கொண்டுவரும் போராட்டத்துக்கு வலுச்சேர்க் கும் வகையில் மக்கள் தங்க ளின் அன்றாட கடமைகளை ஒதுக்கிவிட்டு, ஹர்த்தாலுக்கு ஆதரவு வழங்கி இருந்தனர்.

வவுனியா, மன்னார்ப் பகுதி களிலும் இதே நிலைமைதான். அந்தப்பிரதேசங்களில்இயல்பு நிலை என்றும் இல்லாதவாறு முடங்கிப் போய் இருந்ததாக எமது செய்தியாளர்கள் அறி வித்திருந்தனர்.

கிழக்கும் முடக்கும்

வடக்கைப் போன்று கிழக்கு மாவட்டத்திலும் நேற்று பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட் டது. மட்டக்களப்பு, அம்பாறை மற்றும்திருகோணமலைமாவட் டங்களில் இயல்பு நிலை முடங் கியது.

மட்டக்களப்பு நகர் உட்பட மட்டக்களப்பு மாவட்டத்தில் வர்த்தக நிலையங்கள் அடைக் கப்பட்டு பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது. இங்குஅரச நிறுவனங்கள் திறக்கப்பட்ட போதிலும்உத்தியோகத்தர்கள் வரவு மிகக் குறைவாக இருந்த மையால்பொதுமக்கள்சேவை பெறச் செல்லவில்லை. இத னால் அரச நிர்வாகம் முடக்கப் பட்டது.

அதேபோன்று பாடசாலை கள் திறக்கப்பட்ட போதிலும் மாணவர்களின் வரவின்மை காரணமாக ஆசிரியர்கள் மட் டுமே பாடசாலைகளில் இருந்த னர். சில மணிநேரங்களின் பின்னர் பாடசாலைகள் மூடப் பட்டன. தூரப் பயணங்களை மேற்கொள்ளும் ஒரு சில தனி யார் பஸ் போக்குவரத்துகள் நடைபெற்றபோதிலும்உள்ளூர்ப் போக்குவரத்துகள் நடை பெறவில்லை. வங்கிகளும் மூடப்பட்டிருந்தன.

திருகோணமலை மாவட்டத் திலும் வர்த்தக நிலையங்கள், பொதுச்சந்தைகள், பாடசாலை கள்மூடப்பட்டிருந்தன. போக்கு வரத்துச்சேவைகளும்முற்றாக ஸ்தம்பித்திருந்தன. இந்த ஹர்த்தால் நடவடிக்கையால் திருகோணமலையில் பொது மக்களின் அன்றாட நடவடிக் கைகள் முற்றாகப் பாதித்திருந் தன.

(இ-ம-7-10-21-22-40-70-81-100-112-151-153)

தீர்வு காண்பதில் அரசு பின்னடிப்பதே மக்களின் போராட்டத்துக்கு அடிப்படை

ஹர்த்தாலுக்கு ஆதரவு தெரிவித்து நேற்றைய மாகாண அமர்வின்போது முதலமைச்சர் விக்கி

யாழ்ப்பாணம், ஏப்.28

எமது கோரிக்கைகள் நியாயமானவை. அவை எமது அடிப்படை உரிமைகள்சார்ந்தவை.ஆகவே அவற்றுக்குத் தீர்வு காணுதல் அவசியம். தீர்வு காண்பதற்கு அரசு பின் நிற்பதே அல்லது தாமதிப்பதே இன்றைய வடக்கு, கிழக்கு ரீதியான போராட்டத்துக்கு அடிப்படைக் காரணமாகும். பொறுப்புக் கூறலைத் தட்டிக் கழித்து வருவதால் மக்களின் மனவருத்தங்கள் மேலும் மேலும் உக்கிரமடையும் என்பதற்கு இன்றைய (நேற்றைய) பூரண ஹர்த்தால் ஓர் உதாரணமாகும்.

-இவ்வாறு வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாணசபையின் 91 ஆவது அமர்வு நேற்று காணாமல் போனோரின்உறவுகளின் வடக்கு, கிழக்கு தழுவிய பூரண ஹர்த்தாலுக்கு ஆதரவு வெளியிடும் வகையில் நேற்றுக் காலை கூடிகலைந்தது.

இந்த ஆதரவு அமர்வில் உரையாற்றும் போதே முதலமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர்தொடர்ந்து உரையாற்றும் போது மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

இன்று எம் மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள விரக்தியின் அடையாளமாக ஒரு நிகழ்வு இந்த நாட்டின் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் நடைபெறுகின்றது.

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின்உறவுகளால் வடக்கு கிழக்குத் தழுவிய ரீதியில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள பூரண ஹர்த்தால் இன்று (நேற்று) நடைபெறுகின்றது.

திருகோணமலையில் போராடிக் கொண்டிருக்கும் அப்பேர்ப்பட்ட மக்களைக்கூட்டாக அண்மையில் சந்தித்தேன். அதற்கு முன்னர் வட மாகாணத்திலும் பல குழுக்களைச் சந்தித்தேன். கடந்த பல நாள்களாகக் காணமல் போன தங்கள் உறவுகள் பற்றியும் இராணுவ ஆக்கிரமிப்பால் தமது காணிகளை இழந்தமை பற்றியும் இந்த மக்கள் தமது வருத்தங்களையும் கரிசனைகளையும் தொடர்ச்சியான போராட்டங்கள் மூலம் எடுத்துக் காட்டி வருகின்றார்கள்.

இதுபற்றி ஜனாதிபதிக்கு நான் நீண்டகடிதம் அனுப்பியிருந்தேன். அதுபற்றி ''பேசலாம் வாருங்கள்'' என்று தினம் குறிப்பிடப் பட்டுள்ளனரே தவிர அவர்களுக்கு எந்தவித ஆறுதல் வார்த்தைகளும் இதுவரையில் உத்தியோக பூர்வமாக அரசால் வெளியிடப்படவில்லை என்பது மனவருத்தத்தைத் தருகின்றது.

மக்கள் மிகுந்த சிரமங்களுக்கு மத்தியில் ஏதேனும் நற்செய்தி அரசதரப்பில் இருந்து வராதா என்ற எதிர்பார்ப்பில் உள்ளனர்.

பலரின் 50 நாள்களுக்கு மேலான போராட்டங்கள் உத்தியோக பூர்வமாக - எந்தவித எதிர்வினையும் கொண்டு வராத நிலையில்தான் நீதிக்கான - ஒரு காத்திரமான ஜனநாயக செயற்பாடு என்ற முறையில் இன்றைய மக்கள் அணி திரள்வு இன்றைய கடையடைப்புப்போராட்டமாக முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இந்தநிலையில், முஸ்லிம் சகோதரர்கள், சிங்கள சகோதரர்கள் அடங்கலான வடக்கு, கிழக்கு சகல மக்களும் தமது மனோநிலையைப் பிரதிபலிக்கும் வண்ணம் ஒருங்கு சேர்ந்து போராடுவது கட்டாயமாகியுள்ளது.

நாம் யாவரும் இந்த மக்கள் போராட்டத்துக்கு எமது ஆதரவை எடுத்துக் காட்டுவதில் இருந்து, எமது தெற்கு சிங்களச் சகோதரர்களும் மத்திய அரசும் சர்வதேசமும் ஒன்றைப் புரிந்து கொள்ள வேண்டும்.

தொடர்ந்து எம் மக்களையும் அவர்களின் ஆதங்கங்களையும்அவர்களின் கோரிக்கைகளையும் புறக்கணித்து வருகின்றமை யாருக்குமே நல்ல தல்ல. மக்களின் மனோ நிலையைத் தவறாகப் புரிந்து கொண்டு பிழையான நடவடிக்கைகளில் அரசு இறங்க எத்தனித்தால் அது பாரதூரமான விளைவை எம் மக்களுக் குத்தான் ஏற்படுத்தும்.

இந்தக் ஹர்த்தாலுக்கு எம் மக்கள் காட்டும் கட்சிப் பாகுபாடற்ற கரிசனைமிக்க ஒத்துழைப்பை வடக்கு, கிழக்கு மக்களின் ஒற்றுமைக்கான ஓர் அணி திரள்வாகவே நான் காண்கின்றேன்.

எமது கஷ்டங்கள், துன்பங்கள், அல்லல்கள், அவலங்கள் ஆகியவற்றை மற்றவர்களும் புரிந்து கொண்டிருக்கின்றார்கள் என்பது இரவு பகலாகப் போராடும் மக்களுக்கு ஒரு விதமன நிறைவை ஏற்படுத்தும். அத்துடன் எமது ஏகோபித்த பங்களிப்பு எமது மக்களின் ஒற்றுமையைப் பிரதிபலிக்கும்.

இதன் காரணமாகவே இன்று (நேற்று) எமது வடக்கு மாகாணசபை தனது நிகழ்ச்சிகளைச் சுருக்கி தமது ஏகோபித்த ஆதரவைப் போராடும் எமது மக்களுக்கு வழங்க உத்தேசித்தது.

நாம் ஒன்று பட்டால் தான் எமக்கு உண்டு வாழ்வு. இதனை எம் மக்கள் உணர்ந்து கொள்ளும் காலம் இன்று உதயமாகியுள்ளது.-என்றார். (ஐ)

நாட்டின் அபிவிருத்திக்கும்...

(5 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அதிகாரப் பகிர்வை மையப் படுத்தியதாக இருக்கும் சமஷ்டியை தென்னிலங்கை சரியாகப் புரிந்து கொள்ள வேண்டும். தேசிய அபிவிருத்திக்கான ஜனநாயக மாதிரியாகவே சமஷ்டியைக் கருத வேண்டும்.

சுதந்திரத்துக்குப் பின்னர் 70ஆண்டுகளாக மத்தியில் அதிகாரங்களை வைத்திருந்தமையால் நாட்டை அபி விருத்தியில் இட்டுச்செல்ல முடிந்ததா? இதன் காரணமாக கிராமப் புறங்களில் மேலும் மேலும் வறுமை நிலைமையே அதிகரித்துச் சென்றது. தமிழ், சிங்களம், முஸ்லிம் என்றில்லாது அனைத்து கிராமங்களும் வறுமைக்குள் காணப்படுகின்றன.

இந்த நிலைமையை சிங்கள மக்கள் உணர்ந்து கொள்வதற்குத்தவறியுள்ளனர். அதிகாரப் பகிர்வு நடைபெறாமையின் காரணமாகவே இவ்வாறான நிலைமை நீடிக்கின்றது என்பதை அவர்கள் உணரவில்லை. நிலையான சமாதானம் உள்ள நாட்டில் தேசிய அபிவிருத்தி எவ்வாறு உள்ளது என்பதை அவர்கள் உணர்ந்து கொள்ளவேண்டும். அந்தநிலைமையை அவர்களுக்கு தென்னிலங்கை அரசியல் வாதிகள் உணர்த்த வேண்டும்.

அத்துடன், கடந்த காலத்தில் தமிழ் மக்களுக்குச் சமஷ்டியை வழங்குவதாக இருந்தால் தென்னிலங்கை சிங்கள மக்களுக்கும் சமஷ்டி வழங்கப்பட வேண்டும்என்றுவலியுறுத்தப்பட்டிருக்க வேண்டும். நிபந்தனையாக அது இருந்திருக்க வேண்டும். அதற்கான காரணம் தெளிவுபடுத்தப்பட்டிருக்க வேண்டும்.

ஆகவே, தற்போதைய நிலையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சிங்கள மக்களின் மனதையும் வெல்ல வேண்டியுள்ளது. தமிழ் இனத்தின் தந்தையாக பார்க்கப்பட்ட செல்வநாயகம் தனது கொள்கையில் எந்தளவு உறுதியுடன் இருந்தார், அவர் எவ்வாறு நடந்து கொள்வார், சிங்கள தலைவர் களுடன் எந்தளவு அர்ப்பணிப்புடன் செயற்பாட்டார் என்பது சிங்கள மக்களுக்குத் தெரியப் படுத்தப்பட வேண்டும்.

சகல மக்களின் கௌரவத்தை நாம் மீள உறுதிப்படுத்த வேண்டும். நாட்டில் எவரும் இரண்டாவது பிரஜையாக இருக்க விரும்பவில்லை. சிங்களவர்களுக்கு வழங்கப்படும் சகல உரிமைகளும் தமிழ் மற்றும் முஸ்லிம் இனத்தவர்களுக்கும் வழங்கப்பட வேண்டும். அரசியல்வாதிகள் என்ற ரீதியில் இந்தச் செய்தியை சகலருக்கும் தெரியப்படுத்த வேண்டும்.

அரசியல் வாதிகள் இந்தச் செய்தியை தென்னிலங்கைக்கு சொல்வதற்கு அச்சமடைகின்றார்கள். தமது வாக்குகள் குறைவடைந்து விடும் எனக் கருதுகின்றார்கள். அது தவறானதாகும்.நான் போருக்கு எதிராக கருத்துக்களை முன் வைத்தேன். முஸ்லிம்களின் பிரச்சினைகளைப் பேசினேன். எனது வாக்கு வங்கி குறையவில்லை.

நான் களுத்துறை மாவட்டத்தில் 2004 ஆம் ஆண்டு போருக்கு எதிராகக் குரல் கொடுத்தேன். 70 ஆயிரம் வாக்குகள் கிடைத்தன. தமிழ் மக்களின் உரிமைக்காக அதன் பின்னர் குரல் கொடுத்தேன். 2010 ஆம் ஆண்டு ஒரு லட்சமாக எனக் குரிய வாக்குகள் அதிகரித்தன.

அதன் பின்னர் முஸ்லிம் மக்களுக் காகக் குரல் கொடுத்தேன். ஒரு லட்சத்து 40 ஆயிரமாக வாக்குகள் அதிகரித்தன. இதனைச் சிங்களத் தலைவர்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

ஆகவே அவ்வாறு அச்சத்தை விடுத்து நேர்மையாக செயற்பட முன்வர வேண்டும். தற்போது இரண்டு பிரதான கட்சிகள் இணைந்துள்ள சூழ்நிலையில் நாட்டுக்கு நல்லதொரு சந்தர்ப்பம் தோன்றியுள்ளது. இதனைப் பயன் படுத்திக் கொள்ள வேண்டும். பிரச்சினையைத்தீர்ப்பதற்கான செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. புதிய அரசமைப்பை உருவாக்கும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன. அது சர்வஜன வாக்கெடுப்புக்கு விடப்படும். இருப்பினும் அது குறித்த செயற்பாடுகள் மந்தகதியில் காணப்படு கின்றமையை நான் ஏற்றுக் கொள்கின்றேன்.- என்றார். (ஐ)

சாவகச்சேரி தம்புதோட்டம் 523 ஆவது படைப் பிரிவின் 4 ஆம் விஜயபாகு படையணியினரால் சாவகச்சேரி பெருங்குளம் பகுதியில் அமைந்துள்ள கிறிஸ்தவ தேவாலயத்தில் சிரமதானப் பணிகள் முன்னெடுக்கப்பட்டன. (ஐ-21)

அரை நிர்வாணக் கோலத்தில் வீதியில் படுத்திருந்த முதியவர்!

பொலிஸாரால் வைத்தியசாலையில் சேர்ப்பு

வவுனியா, ஏப்.28

பொது மக்களுக்கு அசௌகரியத்தை ஏற்படுத்தும் வகையில் அரை நிர்வாணக் கோலத்தில் படுத்திருந்த முதியவர் பொலிஸாரால் மீட்கப்பட்டு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

வவுனியா மத்திய பேருந்து தரிப்பிடத்தில் பொது மக்களுக்கு அசௌகரியத்தை ஏற்படுத்தும் வகையில் அரை நிர்வாணமாக இந்த வயோதிபர் வர்படுத்திருந்துள்ளார்.

பொலிஸாரின் அவசர தொலைபேசி இலக்கத்துக்கு அழைப்பை ஏற்படுத்தி அந்த விடயம் தொடர்பில் மக்கள் தெரிவித்துள்ளனர்.

சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார், சுகவீனமுற்ற நிலையில் இருந்த அந்த வயோதிபரை அழைத்துச் சென்று வவுனியா வைத்தியசாலையில் சேர்த்துள்ளனர்.

நேற்று முன்தினம் மாலை இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. (ஐ-100)

மின்சார சபைத் தலைவர் இராஜினாமா; புதிய தலைவர் உடனடியாக நியமனம்

இலங்கை மின்சார சபையின் தலைவர் அநுர விஜேபால தனது பதவியை இராஜினாமா செய் துள்ள நிலையில், புதிய தலைவராக டபிள்யூ.பி. கனேகல நியமிக்கப்பட்டுள்ளார்.

மின்சார சபையின் தலைவராக இருந்த அநுர விஜேபால நேற்றுமுன்தினம் காலை தனது பதவியை இராஜிநாமா செய்கிறார் என அறிவித்தார். இராஜினாமாக் கடிதத்தையும் அவர் கையளித்தார். இதைத் தொடர்ந்தே நேற்றுமுன்தினம் மாலை புதிய தலைவர் நியமிக்கப்பட்டார்.

மின்சக்தி எரிசக்தி அமைச்சர் ரஞ்சித் சியம்ப லாப்பிட்டியவின் பணிப்பின் பேரில் இவர் நியமிக் கப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டது. (ம)

ஏ9 வீதியை மறித்ததால் வவுனியாவில் பதற்ற நிலை!

வவுனியாவில் நேற்று பூரண ஹர்த்தால் காரணமாக இயல்பு நிலை முற்றாக முடங்கி இருந்த நிலையில் ஆங்காங்கே பொலிஸாரும் வீதி பாதுகாப்பு நடவடிகையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் ஏ9 வீதியை மறித்தமையால் அங்கு பதற்றநிலை ஏற்பட்டது.

வடக்கு, கிழக்கில் காணாமல் ஆக்கப்பட்ட உறவினர்களுக்கு ஆதரவு தெரிவித்து நேற்று நடந்த பூரண ஹர்த்தாலுக்கு இன, மத, பேதங்களைக் கடந்து பலதரப்பினரிடமிருந்தும் பூரண ஆதரவு வவுனியாவிலும் கிடைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, வவுனியாவில் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் ஏ9 வீதியை மறித்து போராட்டத்தில் ஈடுபட்டதன் காரணமாக அங்கு சிறிது நேரம் பதற்றமான நிலைமை ஏற்பட்டிருந்தது.

இதன்போது போராட்ட இடத்திற்கு வந்த வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் போராட்டக்காரர்களுடன் கலந்துரையாடியதையடுத்து, ஒருமணி நேரம் வரையில் மேற்கொள்ளப்பட்ட வீதி மறிப்புப் போராட்டம் கைவிடப்பட்டது. (இ-100)

வட இந்திய பத்திரிநாத், கேதாரநாத் கங்கோத்திரி, யமுனோத்திரி காசி யாத்திரை

நாள்கள் : 20 ஆரம்பம் : 10.06.2017

செல்லும் இடங்கள் சுருக்கமான விவரம்

டெல்லி சுற்றிப் பார்த்தல் (அட்ஷயதாம் உட்பட), **ரிஷிகேஸ், ஸ்ரீநகர்,** கௌரி குண்டம் **கேதார் நாத்,** (சிவன் அர்த்தநாரீஸ்வரர் ஆன இடம்), **கங்கோத்திரி** கங்கை உற்பத்தியாகும் இடம், கங்கா மாதா கோயில் **யமுனோத்திரி** ஆலயம் இன்னும் பல ஆலயம், இடங்களும் காணலாம்.

கேதாரநாதர், தரிசனம், **மானா,** சரஸ்வதி நதி உற்பத்தியாகும் இடம், **டிம்பிற் கோட்,** ஹரித்துவார் சுற்றிப்பார்த்தல் பத்து இடங்கள் **பத்திரிநாத்** 108 வைணவ தலங்களில் முதன்மையானது. விஸ்ணு ஆலயம், **மதுரா,** கிருஷ்ண ஜென்ம பூமி, அக்ரா **(தாஜ்மஹால்)** பார்க்கலாம். **அலகாபாத்** (கங்கா, ஜமுனா, சரஸ்வதி) திருவேணி சங்கமம், **கயா** காலமானவர்களுக்கு பிதிர்க்கருமம் செய்யுமிடம், **புத்தகயா,** புத்தாலயங்கள், **காசி (வாரணாசி),** விஸ்வநாதர் சிவன் உட்பட 15 இடங்கள் தரிசிக்கலாம். காசியில் 3 நாள்கள் தங்கல், **இராமேஸ்வரம், திருப்புலானி, உத்திரகேச மங்கை, நவ பாஷாணம், மதுரை,** மீனாட்சி சுந்தரேஸ்வரர், **சென்னை** வருகை ஒருநாள் சொப்பிங், மறுநாள் நாடு திரும்பல்.

வேறு எங்கும் இல்லாதவாறு 4 விமானப் பயணங்கள், AC வாகன வசதிகள், மூன்றுவேளை உணவு, குடிநீர் உட்பட தங்குமிடம், மிகுதி விவரங்களை முழுமையாகக் கேட்டு அறிந்து பதிவு செய்யவும்.

கலாநிதி T.ஸ்ரீரெங்கநாதன் மகன் ராஜன்

Tel :- 077 768 0102, 077 736 2154

குப்பைப் பிரச்சினை குறித்து நாடாளுமன்றில் விசேட விவாதம்

சம்பந்தன் சபாநாயகருக்குக் கடிதம்

கொழும்பு, ஏப். 28

நாட்டில் பெரும் சிக்கலாக மாறியுள்ள குப்பையகற்றும் பிரச்சினை மற்றும் மீதொட்ட முல்ல குப்பை மேட்டு அனர்த்தத்தில் 33 பேர் வரை கொல்லப் பட்ட சம்பவம் ஆகியன குறித்து நாடாளுமன்றில் ஒத்தி வைப்பு வேளையில் விசேட பிரேரணை ஒன்றைக் கொண்டு வந்து, அது குறித்துப் பேசுவதற்கு எதிர்க் கட்சித் தலைவர் இரா.சம்பந்தன் சபாநாயகருக்கு முன்னறிவித்தல் கொடுத்திருக்கின்றார்.

இது தொடர்பாக அவர் சபாநாயகருக்கு எழுதியுள்ள கடிதத்தில் கூறப்பட்டுள்ளமை வருமாறு:-

2017 ஏப்ரல் மாதம் 14 ஆம் திகதியன்று நாட்டு மக்கள் சிங்கள, தமிழ் புத்தாண்டைக் கொண்டாடிக் கொண்டிருந்த வேளையில், மீதொட்டமுல்ல பிரதேசத்தில் வசித்த அதிகமான மக்கள் பாரிய அனர்த்தம் ஒன்றிற்கு முகம் கொடுக்க வேண்டி நேரிட்டது.

பாரிய மலைபோன்று ஒன்று சேர்ந்திருந்த குப்பை மேடானது பல வீடுகளின் மீது சரிந்து விழுந்தது. பல நாள்களாக மேற்கொள்ளப்பட்ட மீட்புப்பணிகளின் மூலம் 33 சடலங்கள் கண்டெடுக்கப்பட்ட போதிலும்கூட, மேலும்பலர் குப்பை மேட்டில் சிக்கி புதைந்து போயுள்ளனர்.

இதற்கு முன்னர் ஆட்சி செய்த எல்லா அரசாங்கங்களுடன், இந்த அரசாங்கமும் இப்பாரிய தேசிய அனர்த்தத்திற்குப் பொறுப்புக் கூறுதல் வேண்டும்.

குப்பைகளை அகற்றும்பணியானது இன்று அரசாங்கத்தின் முக்கிய பொறுப்புகளில் ஒன்றாக விளங்குகின்றது. உலகின் எல்லா நகரங்களும் இது தொடர்பாகக் கவனம் செலுத்தி பொருத்தமான நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளன.

தற்போது பாரிய சோகக் கதையாக மாறியுள்ள இம்முக்கிய பிரச்சினைக்குத் தீர்வு காண்பதில் இலங்கை தோல்வி கண்டுள்ளது.

விரக்தி மற்றும் சோகத்திற்கு ஆளாகியுள்ள மேற்படி அனர்த்தத்திற்கு உள்ளான குடும்பங்களின் துயர்களில் இணைந்து கொள்வதுடன், அதற்கு முகம் கொடுத்தோருக்கு போதிய நஷ்டஈட்டினைப் பெற்றுக் கொடுப்பதற்கும், அவர்களை வேறு இடத்தில் தங்க வைப்பதற்கும் துரித நடவடிக்கை எடுக்குமாறும், இதனை ஒரு முக்கிய சம்பவமாகக் கொண்டு நாட்டிலே அதிகரித்து வருகின்ற குப்பைப் பிரச்சினைக்குத் தீர்வினைப் பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் நான் அரசாங்கத்திடம் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். - என்று உள்ளது. (உ)

சாரங்காவின்

தங்க நகை சேமிப்புத் திட்டம்

ஆரம்பம் 29.04.2017

அன்பு நிறைந்த வாடிக்கையாளர்களே!

சிறுக சிறுக சேமிக்கும் பணத்தைத் தங்கத்தில் முதலிட்டு மனதிற்கு இசைந்த அழகிய வண்ண டிசைன்களில் தங்க நகைகளை அணிந்து மகிழவும் சாரங்கா நகைமாடம் தனது சேமிப்புத் திட்டத்தை அறிமுகப்படுத்துகின்றது

சேமிப்பு விவரம்

உங்கள் மாதாந்த கொடுப்பனவு	உங்கள் 12 மாத கொடுப்பனவு	போனஸ்	13 மாத முடிவில்முதிர்வு காலமொத்தத் தொகை
2,500/=	30,000/=	2,500/=	32,500/=
5,000/=	60,000/=	5,000/=	65,000/=

குறிப்பு:குலுக்கல் முறையில் தெரிவு செய்யப்படுபவர் ஏனைய மாதத்துக்குரிய தவணைக்கட்டணத்தைச் செலுத்தாமலே அதற்குப் பெறுமதியான தங்க நகையைப் பெற்றுக் கொள்ள முடியும்

நிபந்தனைகள்

- ஒருவர் எத்தனை உறுப்புரிமைகளையும் பெற்றுக் கொள்ளலாம்.
- தவணைக் கட்டணத்தை ஒழுங்காகக் கட்ட முடியாது விடின் அவர்கள் செலுத்திய பணத்தின் பெறுமதிக்கான நகையை 12 ஆம் மாதத்துக்குப் பின்னர் பெற்றுக் கொள்ளலாம்.
- நகைகளின் பெறுமதி அந்தந்த நாளுக்குரிய சந்தைப் பெறுமதியைக் கொண்டதாக இருக்கும்.

157/1, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

021 222 6972
021 222 8869

அக்ஷய திருதியை அழைப்பு

இன்றும் நாளையும்

தங்கம் வாங்கும் அனைவருக்கும் தங்கத்தின் பெறுமதிக்கேற்ப பரிசில்கள் வழங்கப்படும்.

(0383)

விளம்பரத் தொடர்புகளுக்கு 021 222 3000

புதிய நதியா நகைமாடம்

அக்ஷய திருதியை குறையாத செல்வத்தை வளமாக அள்ளித் தரும் அதிசய திருநாளாம் **"அக்ஷய திருதியை"** இன்றும் நாளையும் நடைபெறவிருக்கின்றது.

இத்திருநாளில் உங்கள் வாழ்வில் சுபீட்சத்தை உருவாக்கும் பெறுமதி மிக்க நகைகளை யாழ். நகரில் புதிய நதியா நகை மாடத்தில் வாங்கி மகிழுங்கள்.

★ பழைய நகைகளைக் கொடுத்து புதிய நகைகள் வாங்குவோருக்கு விசேட விலைக்கழிவு உண்டு.

★ பவுண் காசு மற்றும் லக்ஷ்மி காசுக்கு விலைக்கழிவு உண்டு.

★ குறிப்பிட்ட சில நகைகள் தங்க விலைக்கே விற்கப்படும்.

நகைகள் கொள்வனவு செய்யும் அனைவருக்கும் விசேட பரிசுகள் காத்திருக்கின்றன.

புதிய நதியா நகைமாடம்

73, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

021 222 3261

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 6728 கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 28.04.2017 இல் அச்சிடப்பட்டு வெளியிடப்பெற்றது.